
# வம்மிப்பூ



ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்மிப்பூ

-சிறுகதைகள்-

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | *வம்பிப்பூ* |
| நூல்வகை | : | *சிறுகதை இலக்கியம்* |
| ஆசிரியர் | : | *ச. அருளானந்தம்*<br>*(கேணிப்பித்தன்)* |
| உரிமை | : | *ஆசிரியருக்கு* |
| அட்டைப்பட ஓவியங்கள் | : | *ச.அ.அருள்பாஸ்கரன்* |
| வெளியீடு | : | *அருள் வெளியீட்டகம்*<br>*37/7, மத்திய வீதி*<br>*உவர்மலை -திருகோணமலை* |
| தொலைபேசி இலக்கம் | : | *026-21507* |
| பதிப்பகம் | : | *கீதா பப்ளிஷேசன்,*<br>*கொழும்பு - 13* |
| முதற்பதிப்பு | : | *15-07-2001* |
| ISBN | : | *955 - 97106 - 5 - 6* |
| பக்கம் | : | viii + 8 0 |
| விலை | : | **95/-** |

<u>விநியோகஸ்தர்</u>

**லங்கா புத்தகசாலை**

F.L. 1/14 டயஸ் பிளேஸ்

குணசிங்கபுர

கொழும்பு - 12

தொலைபேசி இல 01-341942, 459431



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவின் உள்ளே


- அணிந்துரை (iv)
- என்னுரை (vi)
- அரச மரம் 1
- இரு மனங்கள் 10
- அவலங்கள் 23
- அனுபவம் புதுமை 29
- வம்மிப்பூ 36
- அண்ணன் 45
- கஸ்தூரி 53
- மனிதம் 59
- ஆவிதுடிக்குதடி 72




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. அருளானந்தத்தின்

# இரண்டாவது சிறுகதைத் தொகுதிக்கான

# அணிந்துரை

சிறுகதையின் பலம் மனித நிலைகளை மனிதச் சூழமைவுகளை(Situation)ச் சித்திரிப்பதற்கான மிக அற்புதமான வடிவம் என்பதுதான்.

அதன் 'சிறுமை' அது கோரி நிற்கும் மொழிநடை, அதன் முடிவு ஆகியன அதன் மனித முனைப்புப் பயன்பாட்டுக்கு உதவுவன.

மனிதச் சூழமைவை சித்திரிக்க, மனிதம் பற்றிய ஒரு வரிப்புணர்வு, அதனில் முழுநம்பிக்கை வைத்து, அதன்பால் எண்ணங்கூறும் உணர்வும் குவிமுனைப்பு எய்தி நிற்கும் ஒரு மனநிலை அவசியம்.

அந்த மனநிலையின் இலட்சிய நிறைவேற்றத்தைச் சாதிப்பதற்கான மொழிவாக்கம் கைகூடல் வேண்டும். இதற்கு மொழியின் சாத்தியப்பாடுகள் - அதன் ஆழ அகலங்கள் தெரிய வேண்டும்.

இந்த மனநிலை மொழியாட்சி ஆகியனவற்றுக்கும் தகையாய் 'செலுத்து சக்கரமாக' (Steering Wheel) இருப்பது கருத்து நிலைத் தெளிவும், உறுதியும்

கருத்துநிலை (Ideology) தான் எம்மைப் பார்க்க வைக்கின்றது. நாம் எதனை, ஏன் பார்க்கின்றோம் என்பது நமது கருத்து நிலையின் இயல்பைப் பொறுத்தது.

கருத்துநிலை என்பது ஒரு 'மனக்கோட்டம்' அல்ல. அது எமது கண், கண்ணையும் ஆற்றுப்படுத்தும் நரம்பு மையம்.

இந்த விடயங்கள் அடிமனதில் நிற்க,

அருளானந்தத்தை வாசிக்கும்பொழுது, நம்மிடத்து மேற்கிளம்பும் 'துலங்கல்' யாது? அதாவது அருளானந்தம் பற்றிய நமது அபிப்பிராயம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளானந்தத்தை அவரைச் சூழவுள்ள அவலங்கள், மனிதப் பிரச்சினைகள் சோகத்தை ஏற்படுத்துகின்றன. அவரை வாட்டுகின்றன என்று கூடச் சொல்லலாம். 'மானுட' நிலையினை அவைதரும் சுகதுக்கங்களை அவதானிக்கிறார்; பதிவுசெய்ய முயல்கின்றார்; பதிவு செய்கின்றார். ('இருமனங்கள்' நம்மை நெகிழ வைக்கின்றது)

ஆனால் பெரும்பாலானவற்றைக் 'கதையாகவே' சொல்கிறார்.

தமிழ்ச் சிறுகதை தமிழின் புராதன இலக்கியங்கள் எவற்றுக்கும் குறையாத வளமுடையது. அந்த வளங்களை அருளானந்தம் தன்.தாக்கிக் கொள்ளல் வேண்டும்.

அருளானந்தத்தின் இலக்கியப் பரப்பு 'சிறுவர் இலக்கியம் முதல் சிறுகதை' வரை அகண்டது.

திருகோணமலைத் தமிழர், முஸ்லிம்கள் (கயாத்து(ஹயாத்) நாநா ஒரு நல்ல பாத்திரம்) சமகாலத்துச் சோதனைத்தீயில் எப்படித்துவள்கிறார்கள் என்பதை அறிய இவருடைய சிறுகதைகள் உதவுகின்றன.

ஆவண நிலைக்கு மேலே போய் ஆத்மசிலிர்ப்பும் வளர வேண்டும்.

சமகால வாரப்பத்திரிகைக் கதைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதற்கும் பதச்சோறாக இத்தொகுதி அமைகின்றது.

அருளானந்தத்திடமிருந்து நான் மேலும் சில படைப்புக்களை எதிர்பார்க்கிறேன்.

அன்புடன்

கொழும்பு  கா.சிவத்தம்பி
11.07.2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

'அந்த ஆவணி ஆறு' எனும் எனது சிறுகதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வில் திருகோணமலை நகர் கல்லூரிகளில் உயர்தர வகுப்புகளில் கற்கும் மாணவமணிகளே கதைகளைப் படித்துச் சிறந்த விமர்சனத்தைச் செய்தார்கள். அவர்களது திறமையைக் கண்டு வியந்து நின்றேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் நின்று கதை சுட்டும் யதார்த்தத்தைப் புட்டு வைத்தார்கள். உற்சாகமாக இருந்தது. கதைகளுள் நாசுக்காக நான் பொதிந்து வைத்த பல விடயங்கள் பல பெரியவர்களால் பாராட்டப்பட்டன. எனது கதைகளுக்கும் வரவேற்பிருப்பதைப் புரிந்து கொண்டேன்.

'வம்மிப் பூ' எனும் இச்சிறுகதைத் தொகுதி எனது இரண்டாவது தொகுப்பாகும். இத்தொகுதியிலும் ஒன்பது கதைகளே இடம் பெறுகின்றன. பல கதைகள் வீரகேசரி, தினக்குரல், தினக்கதிர் போன்ற பத்திரிகைகளில் வெளிவந்தன. 'இருமனங்கள்' கதையை வாசித்த கவிஞர் முருகையன் அவர்கள் தனக்கு மிகப்பிடித்த கதை எனக் கூறியது தேனாய் இனிக்கின்றது.

இன்று பொது மக்கள் சுரண்டப்படுகின்றார்கள். அரசியல்வாதிகளாலும், அரசாங்க உயர் அதிகாரிகளாலும், தரகர்களாலும் ஏமாற்றப்படுகின்றார்கள். பேரினவாதசக்திகள் மக்களைச் சீரழிக்கின்றன. அல்லலுறும் மக்கள் அவலத்துள்ளாக்கப்படுகின்றனர். போலிகள் உலாவருகின்றார்கள். இவற்றைப் பார்த்து உள்ளம் கொதிக்கும். அந்தக் குமுறல்களைக் கதைகளூடாகப் பின்னிவிடுகிறேன். சமூகப் பிரக்ஞைகளுக்கு முன்னுரிமை தரும் நமது பத்திரிகைககள், எனது கதைகளைப் பிரசுரிக்கின்றன. எனது இலக்கிய வளர்ச்சியில் வீரகேசரி, தினக்குரல், தினகரன் தினக்கதிர் பத்திரிகைகளும் ஏனைய சஞ்சிகைகளும் பெரும் பங்காற்றுகின்றன.

இத்தொகுதியில் உள்ள எல்லாக் கதைகளிலும் சமகாலப் பிரச்சனைகள், உளவியல் பார்வை, சமுதாயக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம் உண்டு. அரசமரம், மனிதம், அனுபவம் புதுமை ஆகிய கதைகள் கல்விசார் மாந்தர்களது நாடிபிடித்துப்பார்ப்பன. அவலங்கள், - அண்ணன், கஸ்தூரி ஆகியன கட்டவிழ்க்கப்பட்ட அராஜகத்தைக் காட்டி நிற்பன. 'இருமனங்கள்' படிக்காத பாமரத் தம்பதியினரின் இதயராகம் பற்றியது. வம்மிப்பூ ஒரு கருகிய காதல் பற்றியது. 'ஆவி துடிக்குதடி' கதை என்னுயிராய் இருந்து இயக்கியவளின் பிரிவு பற்றியது. இவற்றுக்கு மதிப்புரை வாசகர்கள்தான் கூறவேண்டும்.

இக்கதைகள் நான் வாழ்ந்த காலத்தின் பதிவுகள். நம்மவர்கள், படித்தறிந்து கொள்ளவும் எதிர்காலத்தை திட்டமிட்டுச் சீராய் அமைத்து, ஒன்றுபட்டு வாழவும் உதவும் என்பது எனது நம்பிக்கை. இக்கதைகளைப் படித்து அணிந்துரை செய்திருப்பவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள். அவரது அணிந்துரை எனது சிறுகதை நூலுக்குக் கிடைக்குமா, தருவாரா என்ற தயக்கத்திலேயே அவரிடம் சென்றேன். நான் சென்ற போது அவர் வீட்டில் இல்லை. அவரின் மகள் அன்போடு பிரதியைப் பெற்றுக் கொண்டு, தொலைபேசி இலக்கத்தையும் தந்தார், மறுநாள் தொடர்பு கொண்ட போது 'கட்டாயம் தருவேன்' என்றார். என்னே அவரது இதயம். தமிழுக்குத் தொண்டாற்றி அல்லும் பகலும் அலுப்பின்றி உழைத்துவரும் மூதறிஞர் அணிந்துரை தர முன்வந்தமை எனது பாக்கியம் என்றே கருதுகின்றேன். பேராசிரியர் கா.சிவத்தம்பி தமிழ் கூறும் நல்லுலகத்திற்குக் கிடைத்த முதுசம். அவர் பல்லாண்டு வாழ வேண்டும். இதயத்தால் நன்றி நவில்கின்றேன்.

ஒரு எழுத்தாளனின் பக்கபலம் வாசகர்கள்தான். வாசகரிடையே விழிப்புணர்வு ஏற்படவேண்டும். அதேபோல் எழுத்தாளர்களிடையே காழ்ப்புணர்வு நீங்கி, ஒத்துழைப்பு நல்கும் வேகம் வேண்டும். எழுத்தாளனைத் தலைநிமிர்ந்து எழுதத் தூண்டுவது ஆக்கபூர்வமான விமர்சகர்களின் உந்து சக்தி எழுத்துக்கள். அந்த எழுத்துக்களால் எழுத்தாளன் தலைநிமிர்ந்து செயற்படுவான்.

எனது ஆக்கங்களை வரவேற்று பிரசுரம் செய்யும் தினக்குரல், வீரகேசரி, தினகரன், தினக்கதிர், நவமணி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயம், தினமுரசு பத்திரிகைகளின் ஆசிரியபீடத்தை அலங்கரிக்கும் பெருந்தகைகளுக்கும், அவ்வாறே ஆக்கபூர்வமான விமர்சனங்களை எழுதும் திரு.கே.எஸ். சிவகுமாரன் திரு. செ.யோகநாதன், திரு.ஆ.இரத்தினவேலோன், கலாநிதி யோகராசா, மைக்கல் கொலின் போன்ற மற்றவர்களும் தங்கள் பணியினால் என்னை உற்சாகப்படுத்துபவர்கள். என்றென்றும் நன்றிக்குரியவர்கள்.

என்னைப் பற்றி நூலின் பின்னட்டையில் எழுதியிருப்பவர் என் சிறுகதைப் பிரவேசத்திற்கு உரமூட்டியவர். மூத்தகலைஞர் விருது, ஆளுநர் விருது பெற்ற பல்கலை வல்லுநராக விளங்குபவர். சிறந்த ஓவியர். ஆசிரியராக, அதிபராக, சேவையாற்றி ஓய்வு பெற்ற சிறந்த எழுத்தாளர். திரு தாபி. சுப்பிரமணியம் அவர்கள். அவருக்கு இனிய நன்றி.இக்கதைகளைப் படித்துச் செவ்வனே செவ்வைபார்த்து உதவிய இனிய கவிஞர் தாமரைத்தீவான் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

அட்டைப்படத்தோடு ஏனைய படங்களையும் வரைந்து நூலாக்கப் பணியில் எனது மகன் ச.அ.அருள்பாஸ்கரன் ஈடுப்பட்டுள்ளார். அழகாக அச்சிட்டு நூலாக்கிய பெருமை கீதா பப்ளிக்கேசன் நிறுவனத்தினைச் சாரும்.

தங்கள் பத்திரிகைகளில் வெளிவந்த கதைகளை இத்தொகுதியில் இடம்பெற அனுமதியளித்த ஆசிரிய பீடத்தாருக்கும் 'வம்மிப் பூ' சிறுகதைத் தொகுதியை வாங்கிப் படிக்கும் வாசகர்களுக்கும் இதயத்தால் நன்றி கூறுகின்றேன்.

ஆலங்கேணி
கிண்ணியா

ச.அருளானந்தம்
(கேணிப்பித்தன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி மேரிஹார்து
அருளானந்தம்


## படையல் உனக்கே

ஊனாய் உயிராய்
உவப்பில்லா ஒளியாய்
தேனாய் வாழ்வின்
செல்வமாய் திகழ்ந்தாய்
என்னுள் நீயாய்
இயக்கும் சக்தியாய்
உன்னை உருக்கி
உயர்வைத் தந்தாயே
தாயாய் தாரமாய்
தூக்குத் தூக்கியாய்
ஓயாத உழைப்பாலே
யாதுமாகி நின்றாய்
கண்ணீர் விழிசொரிய
கண்மூடி விட்டாயே
உன்னை இழந்தோமே
உலகே இருளானதம்மா
இதயத்தைப் பிழிந்து
எங்கள் அஞ்சலியாய்
பதமலர் சேர்த்தோம்
படையல் உனக்கே

அருளானந்தம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசமரம்

அந்த அரசமரம் கடற்காற்றுப்பட்டுச் சிலிர்த்து சலசலத்துக் கொண்டிருந்தது. இயற்கைத் துறைமுகம் என்பதாலும், பாடல் பெற்ற திருத்தலம் என்பதாலும் புகழ்மண்டிய திருகோணமலை நகர் சுறுசுறுப்பில் தன்னை ஆழ்த்திக் கொண்டிருந்தது. உட்துறைமுகவீதி வளைந்து நெளிந்து செல்கையில், தபால் நிலைய வீதி ஓடி வந்து துறைமுக ஜெற்றிக்கு முன்னால் தொட்டுக் கொண்ட அந்தச் சந்தி. மக்களால் தன்னை நிரப்பி வழிந்து கொண்டிருந்தது. ஏக்கம் குடிகொண்ட முகங்களில் எப்பொழுது வீடு செல்லலாம் என்ற தவிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யில் சுட்டெரித்துக் கொண்டிருந்தது. 'இந்த அரசமரம் இல்லாட்டா...' எண்ணி ஏக்கத்தோடு நமசிவாயத்தார் அண்ணார்ந்து பார்த் தார். "இது எப்படித் தப்பிப் பிழைத்தது?" ஆச்சரியத்தோடு பார்த்தவருக்கு அடிமரத்தையொட்டி அமர்ந்த புத்தரின் சிலையும், சுற்றி அமைந்த சூழலும் பின்னால் துறைமுகப் பொலிஸ் நிலையமும் தெரிந்தது. 'மதம்' பிடித்த பேரினவாதிகளினால் நாடு குட்டிச்சுவாராய் போனதை எண்ணிப் பார்த்தார்.

'அட எங்கட நமசிவாயத்தார்....என்னவாம் சேதி.... கப்பல் எப்பவாம் போகுது' வேலர் கேட்டவாறே வந்தார்.

'செவ்வாய்க்குப் போகலாம் போல' நமசிவாயத்தார் முடிக்க வில்லை.

இண்டைக்குத் திங்கள். அப்ப நாளைக்கே.... போகலாமே...' இடைமறித்த வேலரை வேதனையோடு பார்த்தார்.

'ஏன் அப்படிப் பார்க்கிறியள். பகிடி விடுறியளோ....' வேலர் அழாக் குறையாகக் கேட்டார்.

'மேல் நாட்டவர் செவ்வாய்க்குப் போறதற்கு 'பாத்பைண்டர்' மூலம் சோஜோனர் றோபோவை அனுப்பி ஆராய்ச்சி செய்யினம். நாங்க யாழ்ப் பாணம் போக வீதி வீதியாய் அலையிறம். நாங்கள் யாழ்ப்பாணம் போறதுக்கிடையில அவர்கள் செவ்வாய்க்குப் போய்விடுவினம்' நமசிவாயத்தார். சொல்ல வேலர் முகத்தில் கவலை கேள்விக்குறியாய் குந்திற்று.

'நாங்கள் என்ன பாவம் செய்தோமோ? கையில் காசுமில்லை. பென்சனும் எடுக்கல்ல. மூணு மாதமா திருகோணமலையைச் சுற்றித் திரியிறம். ' வேலர் கூறிக் கொண்டு அரச மரத்தின் விசாலித்த நிழலின் ஓரத்தே குந்திக் கொண்டார். உத்தியோகத்தில் இருக்கும் போது வாகன வசதியென்ன? எடுபிடி ஆக்களென்ன? சலித்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்துறைமுக வீதியில், துறைமுக ஜெற்றியை ஒட்டினாற்போல் இருந்த அரச மரத்தில் காகங்களின் குதூகலிப்பு. வேலரின் உச்சந் தலையில் 'பளிச்' எனும் ஓசையோடு ஏதோ விழுந்து வழிந்தது. வேலருக்கு வந்த கோபத்திற்கு அண்ணாந்தார். 'கொக்கென்று நினைத் தாயோ.... நாங்கள் காகங்கள்' என்பது போல் அவை தம் பாட்டிற்குக் கரைந்து கொண்டிருந்தன. பேப்பர் துண்டினால் துடைத்து விட்டு நிமிர்ந்த போது சிரித்தபடி சின்னையர்.

'காகம் தலையில பீச்சிற்றுப் போல'

'உமக்குப் பகிடியாக் கிடக்கோ' எரிந்து விழுந்தார் வேலர் என்னும் குமாரவேல். உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றும் போது சின்னையர் அவரின் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றியவர். இப்போது அவர்கள் இருவரும் பென்சனியர். யாழ்ப்பாணம் போவதற்கு ஒற்றைக்காலில் தவமிருக்கும் கொக்குகள்.

'எண்டாலும் இப்பவும் அந்த மிடுக்குப் போகல்ல. ஐயா அப்பவும் அப்படித்தான். இப்பவும் அப்படித்தான். இந்த 'நிவிரச' வந்ததால ஓடியோடி இப்ப சம அந்தஸ்து. மகா சனங்களோட நாங்களும் ஐக்கியம்' என்றார் சின்னையர்.

'பேய்க் கதை விடாதையும். எல்லாம் அந்தந்த இடத்தில் இருக்கு மட்டும்தான். பென்சன் எடுத்த பிறகு ஒரு நாய்கூட எட்டிப் பார்க்காது தெரியுமே' எரிச்சலோடு வேலர்.

நமசிவாயத்தார் புன்முறுவலோடு அவர்களது உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தார். பண்பட்ட அவரது உள்ளத்தில் நாட்டு மக்களின் வேதனைதான் குடி கொண்டிருந்தது. வெள்ளை வேட்டி, வாலாமணி, குலைத்து மாலையாகத் தொங்கும் சால்வை, நெற்றியில் திருநீற்றுபூச்சு இது நமசிவாயத்தாரின் நித்திய தோற்றம். ஆசிரியராக, அதிபராகச் சேவையாற்றி ஓய்வுபெற்றவர். பென்சனியர். இப்பவும் அதே உடைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அரசமரத்து இலைகள் சலசலத்துக் கொண்டிருந்தன. இளங்காற்று வெப்பத்தை விரட்டியடித்துக் கொண்டிருந்தது. ஆட்டோக் கள், சைக்கிள்கள் என நிறைந்து கிடந்தன. கடலுக்குள் முனையாக 'ஜெற்றி' நீண்டிருந்தது. சனக்கூட்டம் மூதூர் செல்ல ஜெற்றிக்குள் போவதும், வருவதுமாக அலைந்து திரிந்தது. யாழ்ப்பாணம் செல்லும் கப்பல் பற்றி விசாரித்துப் பார்க்க நகரும் மக்கள் சமுத்திரம் முன்னால் இருக்கும் டச்சுக்காரர் கட்டிய கட்டடத்தில் இயங்கும் பிரதேச செயலகத்துக்குள் முட்டிமோதி பிரவாகித்துப் பரவிக் கொண்டிருந்தது. அரசமரத்தின் காற்று நமசிவாயத்தார் உடலில் பட்டு இங்கிதம் ஏற்படுத்தி யிருக்க வேண்டும்.

பேரினவாதத் தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கியிருந்த வேளை அது. அரசமரங்களின் கீழ் புத்தர் சிலைகளை வைப்பது, சிங்கள பௌத்த வாதத்தைப் பரப்புவது, தமிழ் எழுத்துக்களைத் தார் பூசி அழிப்பது நாடு பூராவும் பரவிக் கொண்டிருந்த அந்த நேரத்தில் அரசமரங்களை வெட்டி அழிப்பது என்ற வெஞ்சினம் ஒரு பக்கம் ஊற்றெடுத்திருந்தது.

நமசிவாயத்தார் இடுப்பில் கை வைத்தபடி அந்த பாடசாலையின் மண்டப வாசலில் நிற்கிறார். மண்டபத்தின் முன்னால் சலசலத்து நிழல் பரப்பி விசாலித்திருந்த அரசமரம் பரவசப்பட்டு அசைந்து, ஒரு இளங் கன்னியின் நடனத்தை அவர் உள்ளத்தில் பிரசவிக்க வைக்கின்றது. அந்தக் காற்றை உள்ளிழுத்து ஸ்பரிசித்தார். புத்தூக்கம் அவர் உடலெங்கும் பரவுகிறது. அரசமரத்தின் மகிமையை நன்கு அறிந்தவர். சமய நம்பிக்கை யோடு விஞ்ஞான மருத்துவ ஆற்றல்கள் கொண்ட அரசமரம், மரங்களின் அரசன்தான். அதனால்தான் ஞானிகள் அரசமரத்தை அடைக்கலம் புகுந்தனர். புத்தபெருமான் ஞானம் பெற்றதும் அரச மரத்தின் அரவணைப் பிலேதான், என்பதைப் புரிந்து கொண்டவர்.

சில பழைய மாணவர்களும், பெற்றோரும் மேல் வகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் களுமாகப் பாடசாலைக் கேற்றைத் தாண்டி வேகமாக உள்ளே வருவதை அவர் கண்கள் கண்டன. கைகளில் கோடரி, கத்திகள். மண்டையில் மின்னல் தாக்கிய உணர்வு. நமசிவாயத்தார் நிலைமையைப் புரிந்து கொண்டார். இப்போது அவர்கள் மத்தியில் நமசிவாயத்தார். கடும் வெயில் தகித்துக் கொண்டிருந்தது. வந்த கூட்டத்தினர் கண்களும் நமசிவாயத் தாரைச் சுட்டெரித்தன.பாடசாலைக் 'கேற்று'க்கு அண்மையிலேயே கூட்டம் தடுத்து நிறுத்தப்படுகிறது. அரசமரம் தூரத்தே நின்று 'அசையாது பயத்துடன்' பார்த்துக் கொண்டிருப்பது போல் தெரிகிறது.

'தம்பிமார் என்ன விசயம். இப்படி வாறிங்கள்?'
'அந்த மரத்தை வெட்ட வேணும்'
'எந்த மரத்தை வெட்டப் போறியள்?'
'அந்த அரச மரத்த'
'அந்த அரசமரம் உங்களுக்கு என்ன செய்தது?'.

'எங்கட உரிமையை, எங்கட சமயத்தை, எங்கட இனத்தை, மண்ணை அழிக்க வந்தது'. என்று சொல்லி ஆவேசமாகக் கூட்டம் முன்னேறுகிறது. யானையின் பிளிறல், சிங்கத்தின் கர்ச்சனை, இவை களுக்கப்பால் ஏதோ ஒரு இடியோசையின் ஒலிப்பு. நமசிவாயத்தார் ஆவேசமடைந்தார். முன்னேறிய கூட்டத்தின் முன்னால் இரு கைகளையும் விரித்து "நில்லுங்கள்' என்றார்.

இந்த யானைப் பலம் எங்கிருந்து வந்தது?

முன்னேறிய கூட்டம் கட்டுண்டு அப்படியே நின்றது. அக்கூட்டத்தின் முன் நமசிவாயத்தார்.

'இந்த மரத்தை நீங்கள் வெட்ட வேணும் அப்படித்தானே.'

'ஓம்' ஒருமித்துக் குரல்கள் ஒலித்தன.

'சரி நீங்கள் வெட்டலாம்.' ஆவேசம் கொண்ட கூட்டம் திமிறியது.
'ஆனால் ஒன்று நான் சொன்னதை நீங்கள் செய்ய வேணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வீர்களா' திமிறிய கூட்டம் தெளிவடைந்து ஆவேசம் தணிகிறது.

'சொல்லுங்கள் சேர் செய்யிறம்'.

'முதலில் என்னை வெட்டுங்கள், பின் அந்த மரத்தை வெட்டுங்கள்' கண்ணை மூடிக் கொண்டு சிலையாக நிற்கிறார். அங்கு பெரும் புயலுக்குப் பின் தோன்றும் அமைதி. எவ்வளவு நேரம் அப்படி நின்றாரோ தெரியாது. கண்ணைத் திறந்த நமசிவாயத்தாரைச் சூழ பாவமன்னிப்புக் கேட்கும் பக்தர்கள் போல், நிலம் பார்த்து, நிலத்தில் சப்பாணி கொட்டி அவர்கள் இருந்ததைக் கண்டு விக்கித்து அழுகிறார். அவரை நிமிர்ந்து பார்க்க அக் கூட்டத்தில் வந்தோருக்கு முடியவில்லை. அவர்கள் அனைவரும் அவரின் மாணவர்கள்.

'தம்பிமாரே நாம் அனைவரும் இந்த மண்மாதாவின் பிள்ளைகள். இந்த மரம், செடி, கொடி அனைத்தும் இந்தப் பூமித்தாயின் பிள்ளைகள். மரஞ்செடிகளை வளர்க்க வேண்டுமே தவிர அழிக்கக் கூடாது. அந்த அரச மரம் என்ன பாவம் செய்தது. மரங்களுக்குள் அரசமரம் என்று இதை ஏன் சொல்கிறார்கள்? அரசமரத்தடியில் பிள்ளையார் விரும்பிக் குடியிருப்பார்.

குழந்தை இல்லாத் தம்பதியர் அரச மரத்தைச் சுற்றி வந்தால் குழந்தைச் செல்வம் கிடைக்கும் என்பது நமது சமய நம்பிக்கை. ஞானிகள் அரச மரங்களையே நாடிச் சென்றனர். அரசமரம் அவர்களுக்கு நிழல் கொடுக்கிறது. உயிர்க்காற்று ஒட்சிசனை தாராளமாகக் கொடுக்கிறது. இலைகளைத் தழுவி வரும் காற்று தொற்றுநோயைத் தடுக்கிறது. காய்ந்த சுள்ளிகளின் புகை விஷக்கிருமிகளை அழிக்கிறது. மொத்தத்தில்மனிதனுக்கும் விலங்கு பறவைகளுக்கும் பலவிதமான பயனைக் கொடுக்கிறது. சித்தார்த்தனை தெளிந்த ஞானியாக்கி, கௌதம புத்தராக ஆவதற்கும் அரச மரமே துணையானது' பெரிய பிரசங்கமே செய்து விடுகிறார் நமசிவாயத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது கூட்டத்தில் இருந்த முகம் ஒன்று சற்று நிமிர்கிறதைப் பார்க்கிறார். அது சுந்தரன். "சுந்தராபூ உன்னை ஒரு அரசமரமாகப் பார்க்க வேண்டும். இங்குள்ள அனைவரும் மனித குலத்துக்கு உதவ வேண்டும். மனித தர்மம் உங்களால் உயர வேண்டும்.'

'சேர்....' குரல் ஒன்று கூட்டத்திலிருந்து வந்தது.

'ஓம் சொல்லுங்கோ'

'புத்தர் சிலைகளை அரச மரத்துக்குக் கீழே வைத்துவிட்டு இது சிங்களவர் வாழ்ந்த இடமென்று எங்களை அந்நியப்படுத்துவதை விடலாமா? ' புண்ணியன் துணிந்து கேட்டான். நமசிவாயத்தார் இப்போது திணறிப் போனார். சற்றுக் கண்மூடித் திறந்தார்.

'புத்தர் ஒரு ஞானி. அவர் துன்பத்திலிருந்து விடிவு காணும் மார்க்கத்தைக் காட்டினார். உலக மக்கள் யாவருக்கும் பொதுவானவர். சிங்களவர்களுக்கு மட்டும் உரித்தானவர் அல்லர். சீனர், யப்பானியர், ஏன் தமிழரும் புத்த மதத்தைப் பின்பற்றுகின்றனர். புத்தர் சிலையை அரசமரத்தடியில் வைத்தால் அரச மரத்தைத் தறிப்பதா? நாங்கள் அதைச் செய்யலாமா?'

'அப்படியானால் வேற என்னதான் செய்யிறது சேர்' ஒருமித்துப் பலகுரல்கள்.

'புத்தர் போதனையைப் புரிந்து கொள்ளச் சக்தியில்லாத சதிகாரர் வலையில் மக்கள் சிக்கியுள்ளதால் வந்த வினை இது. நாய் கடித்தால் நாயை நாம் கடிப்பதா? அரச மரங்களை வெட்டி அழிப்பதால் பிரச்சினை தீருமா?...... யோசியுங்கள், மரங்கள் இருந்தால்தானே மழை நமக்குக் கிடைக்கும். சுவாசிக்க ஒட்சிசன் கிடைக்கும். உங்களுக்கு நிறையக் கடமைகள் காத்திருக்கின்றன. மாணவர்கள் படியுங்கள். மற்றவர்கள் உழையுங்கள். இப்போது நமக்கு அதுதான் தேவை. கடமையும் ஆகும். தயவுசெய்து கலைந்து செல்லுங்கள்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டம் கலைகிறது. நமசிவாயத்தார் இப்போது அரசமரத்தடிக்குச் சென்று அதனை அண்ணார்ந்து பார்க்கிறார். அண்ணார்ந்து நிமிரும் போது முன்னால் சுந்தரனும் இன்னும் சிலரும் "சேர்......எங்களை மன்னியுங்கள். எங்களுக்காக இரவு, பகல் என்று பாராமல் படிப்பிக்கிறீர்கள். இந்தப் பாடசாலைக்காக பாடுபடுறதை உணர்கிறோம். நீங்கள் சொன்னது போல் அரசமரமாக ஆகாவிட்டாலும், அந்த அரச மரத்தால் பெற்ற அனுபவத்தை மறக்கமாட்டோம் சேர்' சொல்லிவிட்டு அவர்கள் போகிறார்கள்.

'என்ன நமசிவாயத்தார் யாழ்ப்பாணம் போகிற எண்ணமில்லை போல கிடக்கு' சின்னையர் நமசிவாயத்தாரின் சிந்தனையைக் கலைத்து விட்டார்.

'படைத்தவன் படி அளப்பான்தானே, பாப்பம்' நமசிவாயத்தார் பதட்டப்படாமல் கூறினார்.

'எவ்வளவு வாகனங்கள் போகுது, சனங்கள் திரியுது, ஆராவது வந்து கதைக்கினமே, ஏத்திக் கொண்டு போய் விடுகினமே' வேலர் அலுத்துக் கொண்டார்.

'நீங்க 'பவருல' இருக்கும் போது ஒரு மனிசருக்காவது 'லிப்ற்' குடுத்திருப்பியளே.... காணவரும் சனங்களையும் விரட்டினது எனக் கல்லவோ தெரியும்' சின்னையர் சீண்டிவிட்டு முற்பகல் செய்வது பிற்பகல் விளையுது' என்றார். இப்போது வேலரின் பார்வையில் வெந்து கொண்டி ருந்தார் சின்னையர்.

நீல நிறப் பிக்கப் சுங்க வீதியால் திரும்பி வந்து அவர்களைத் தாண்டிச் சென்றது. ஜெற்றியைக் கடந்து கொஞ்சம் தூரம் சென்றதும் பிக்கப் பின்னோக்கி வந்து அவர்கள் பக்கம் நின்றது.

'என்னைத்தான் யாரோ தேடி வாறாங்கள்' என்பது போல் வேலர் எழுந்து சின்னையரைச் 'சற்று விலகும்' என்று தள்ளிவிட்டு அந்தப் 'பிக்கப்' பக்கம் போனார். அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பிக்கப்பில்' அந்த அமைச்சின் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. கதவு திறக்கப்பட்டது. இறங்கியவர் நேரே நமசிவாயத் தாரிடம் சென்றார். அவரது உடை, பார்வை தனது ஆசிரியரை இனங்காட்டி விட்டது.

'ஐயா என்னைத் தெரிகிறதா?'
'அடையாளம் சரியாக விளங்கவில்லை..... ஆனால் ஏதோ பரீச்சயப்பட்ட நினைவு வரப் பார்க்கிறது.'

'உங்களை இந்த அரச மரத்துக்குக் கீழே இன்று கண்டது பெரிய சந்தோஷம். உங்களால் வாழ்க்கையில் உயர்ந்தவன். அன்று நமது பாடசாலையின் அரசமரப் போதனையை நான் ஞானோபதேசமாகக் கொண்டதால் உயர் பதவி என்னைத் தேடி வந்தது'சொல்லும் போதே மெய்தானரும்பி விதிர்விர்க்க, 'சுந்தரன்..' என்றார். மெய்மறந்து தன் பழைய மாணவனை அணைத்துக் கொண்டார் நமசிவாயத்தார்.

ஏதோ சினிமா பார்ப்பது போல் வேலரும் சின்னையரும் சூழ நின்றோரும் பிரமிக்க, நமசிவாயத்தாரை அள்ளி தன்னில் ஏற்றிக் கொண்டு 'பிக்கப்' மறைந்து விட்டது.

எல்லா வசதிகளும் செய்து கொடுத்து, விமானப் பயணச் சீட்டையும் கையில் கொடுத்து இரத்மலானை விமான நிலையத்தில் நமசிவாயத் தாரை யாழ்ப்பாணத்திற்கு வழியனுப்பி வைத்த தனது மாணவனை, அந்த அமைச்சின் செயலாளராகக் கண்ட போது ஆனந்தக் கண்ணீர் பொங் கியது. ஆத்ம திருப்தியோடு விமானத்தில் நமசிவாயத்தார் பயணித்தார். "எனக்கு வாழ்க்கையின் ஞானத்தை அளித்த என் ஆசிரியர் ஒரு அரசமரம் தான்'என நெக்குருக சுந்தரன் திருகோணமலை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

*நன்றி - தினக்குரல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இருமனங்கள்

வானொலியில் மாலைச் செய்தி பரவிக் கொண்டிருந்தது. மணியத்தார் இன்னும் வீடு வந்து சேரவில்லை. தங்கம் மணியத்தாரின் மூத்தமகள். அவளது இதயம் 'திக்திக' என்று அடித்துக் கொண்டது. 'திருகோணமலை நகரில் மாலை ஆறு மணி தொடக்கம் காலை ஆறு மணி வரை ஊரடங்கு அமுலில் இருக்கும்.' செய்தி பரவி கலக்கத்தை ஊட்டியது.

'தங்கம்....... அப்பு..... நாலு மணிக்கெல்லாம் வந்திடுவார்... இன்னும் வரக் காணமே......' பொன்னம்மா அழுது வடிந்து கொண்டிருந்தாள். அவள் மணியத்தாரின் தர்மபத்தினி.

'பொல்லாத காலம் ....... வீட்டிலிருந்து வெளியில் போனால் திரும்பி வரும்வரை உயிரைக் கைியில் பிடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்க வேண்டும்' தங்கத்தின் மனம் சஞ்சலமானது. உள்ள கோயில்களுக்கெல்லாம் அவள் மனம் சென்று வந்தது.

'அம்மா.... அதோ..... அப்பு வாறார்....' சின்னப் பயல் கூவிக்கொண்டு குருவிபோல் பறக்கிறான். சிறகிருந்தால் அப்புவின் தோளில் ஒரு தாவுத் தாவி அப்படியே அமர்ந்து விடுவான். அப்புமேல் அவ்வளவு பாசம் அவனுக்கு.

'தங்கம்..... அப்பு வாறாராம். தேத்தண்ணியை அடுப்பில் வை. களைச்சு வருவார்.' சொல்லிவிட்டு முற்றத்து மணலைக் குவித்து முன்தானையை விரித்து ஒருக்களித்துப் படுத்துக் கொண்டாள். தங்கத்துக்கு ஒரே ஆச்சரியம். அப்பு வாறார் என்றதும் அம்மாவின் முகத்தில் சூரிய உதயத்தைக் கண்டு விட்டாள்.

இவ்வளவு நேரமும் அப்பு வரவில்லையே என்று முட்டை இட அவதிப்படும் கோழியாகத் திரிந்தாள். ஏன் இப்படி ஒருக்களித்துப் படுக்கி றாள். ஒரு புறம் அம்மாவின் செயல் சிரிப்பாக இருந்தது. இன்றைக்கு அம்மாவுக்கு என்ன நடந்துவிட்டது? எதையோ பறிகொடுத்து விட்ட மாதிரி ஒரே படபடப்பு.

'புள்ள..... தங்கம்....... நேற்று இந்நேரம் அப்பு வந்திற்றாரே.... ' நின்று பார்ப்பதும்.... முற்றத்திற்கு வருவதுமாய் நடந்து கொண்டிருந்த அம்மா..... அப்பு வாறார் என்றதுமே..... இப்படி ஆகிவிட்டாளே.... தங்கத்திற்கு எல்லாம் புதுமையாய் தெரிந்தது.

அப்புவுக்கும் அம்மாவுக்கும் அடிக்கடி வாய்த் தர்க்கம் வருவதும், அது முற்றி கைகால் பரிமாறப்படுவதும், அப்பு கோபத்தோடு வெளியில் போய்விட்டு நேரம் கழித்து வந்து அம்மாவோடு சமாதானம் ஆவதும் தங்கத்திற்குத் தண்ணிபட்ட பாடம். என்னதான் சண்டை பிடித்தாலும் மாலை நான்கு மணிக்கு முன் அப்பு வந்து விடுவார். இன்றைக்கு ஆறு மணியாகியும் வீட்டுக்கு வராதது கலக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. 'அப்பு வாறார்' என்ற சின்னப்பயலின் குரல் அனைவரது உள்ளத்திலும் பால் வார்த்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியத்தார் மிகவும் களைத்துப் போய்த்தான் வந்தார்.... வந்ததும் வராததுமாக காத்தடியை இறக்கி பழைய சன்லைற் பெட்டிகள் இரண்டை யும் வேறாக்கி வைத்துவிட்டு, சட்டையைக் கழற்றி தென்னைக்கும் வீட்டுத் திண்ணைக்குமிடையே தொடுக்கப்பட்டிருந்த கொடியில் போட்டு விட்டு கிணற்றடிக்குப் போய்விட்டார்.

அம்மா இன்னும் எழுந்திருக்கவில்லை. அப்பு பாவம். மூன்று மைல் நடந்து, பேருந்தில் சென்று, உருகி ஓடும் தார் வீதிகளில், காத்தடியின் இரு பக்கமும் உள்ள 'சன்லைற' பெட்டிகளுள் இருக்கும் தயிர்ப் பேணிகளை அலைந்து விற்றுக் காசாக்கி, தங்களை வளர்ப்பதற்கு அவர் படும் பாட்டை தங்கம் எண்ணிக் கொண்டாள்.

இந்த அம்மா மனம் விந்தையானது. அப்பா குறித்த நேரத்துக்கு வரவில்லையே என்று என்னமாய்த் தவித்தாள். அப்பு வந்ததும் இப்படிப் பம்மாத்துப் பண்ணுறாளே...... தங்கத்தின் உள்ளம் அம்மாவுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை படித்தது. அப்பு குளித்துவிட்டு, திண்ணையில் கம்பியில் தொங்கிய இளந் தேங்காயை அழகாகக் குடைந்து எடுத்த குடுவையினுள் கையைவிட்டு அள்ளி எடுத்த எரித்த பசுமாட்டுச் சாம்பலை நெற்றியில் பட்டையாகத் திருநீறாகச் சாத்தி, தலைமேல் இருகைகளையும் குவித்து நின்ற நிலையில் கண்களை மூடி பரமகம்சரானார். ஐந்து நிமிடங்களுக்கு இடி விழுந்தால்க் கூடத் தெரியாது அவருக்கு.

அப்பு தொழிலுக்குச் செல்வதை ஊரவர்கள் கண்டதில்லை. ஊர் விழிக்குமுன் ஊரைத் தாண்டிப் போய்விடுவார். அவரது வருகையை மட்டும்தான் கண்டிருப்பார்கள். காலை எழுந்து கடமைகளை முடித்து, சீனியைக் கொஞ்சம் கையில் எடுத்து நக்கி மகள் கொடுக்கும் வெறும் தேயிலைச் சாயத்தைச் சுடச்சுட இழுத்து உறிஞ்சிவிட்டு, அந்த தடித்த சட்டையைப் போட்டு, பீடியைப் பற்ற வைத்தார் என்றால் 'டாட்டா' காட்டி விட்டார் என்று அர்த்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படலையைத் திறந்து மனிசனை சிரித்த முகத்தோடு முன் நின்று அவரது ஏகபத்தினி பொன்னம்மா வழியனுப்பவில்லையென்றால், பெரிய பிரளயம் உருவாகிவிடும். படலையில் நின்று வழியனுப்பாத நாட்களில் அம்மாவின் முகத்தில் எள்ளு வெடிக்கும். அவளுக்குக் கையும், காலும் ஓடாது. இன்று அம்மா தவித்த தவிப்பு அப்புவின் மேல் உள்ள அளவு கடந்த அன்பைக் கட்டியம் கூறிக் காட்டியது. அப்புமேல் இவ்வளவு பிரியம் வைத்திருக்கும் அம்மா ஏன் அலட்டிக் கொள்ளாமல் இருக்கிறாள்? தங்கம் அப்பு வந்த பின்தான் சமயலில் இறங்கினாள்.

அப்புவிற்கும் அம்மாவின் குணம் தெரியும். 'இவளைக் கட்டிக் கொண்டு நான் படும் கஸ்டம்........ அப்பப்பா.......' அப்பு அடிக்கடி கூறும் அற்புத வார்த்தைகள். இது போதுமே அம்மாவுக்கு. சீறிப்பாயும் நாகம் போலாவாள். நேற்று நடந்த நிகழ்ச்சியை வேலைகளைச் செய்து கொண்டே எண்ணிப் பார்த்துக் கொண்டாள்.

மெல்லிய நிலாவொளி கும்மிருட்டை விரட்டிக் கொண்டிருந்தது. குடிசையின் முன்னிருந்த அடுப்பில் மீன் குழம்பு வெந்து கொண்டிருந்தது. அடுப்பின் தீ நாக்குகள் நாலா பக்கமும் பரவி கொண்டிருந்தன. தென்னங்கீற்றுக்கிடையால் பாய்ந்து வரும் நிலாவொளியில், மெல்லிய காற்றும் ஒரு இங்கிதத்தை ஏற்படுத்தியது. 'அம்மா முற்றத்தில் சாக்கை விரித்துக் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தாள். மணியத்தாரின் கழற்றிப் போட்ட சட்டை அம்மாவின் பக்கத்தில் கிடந்தது.

தென்னங்கீற்றுகளால் வேயப்பட்டிருந்த குடிசையினுள் நிலவு மெல்லிய ஒளிக் கதிர்களைப் பாய்ச்சி விளையாடிக் கொண்டிருந்தது. குடிசையாக இருந்தாலும் ஒரு அறை, முன்னதாக திண்ணை என மணியத் தார் அமைத்திருந்தார். அது அவர்களுக்கு அரண்மனை. சுவர்களாகத் தொங்கும் தென்னோலைகளில், காய்ந்து படிந்த டீ.டீ.ரி. துகள்கள், அந்தச் செத்தைக்குள்தான் அவர்களது ஆவணங்கள் பாதுகாக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைக் காலத்தில் மட்டும் தான் குடிசையினுள் தஞ்சம். மற்றைய நாட்களில் வானமே அவர்களது கூரை. மண் குவியல் அவர்களது தலையணை. முற்றத்தில் மண் மாதாவின் மடியில் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பிள்ளைகள் தவழ்ந்து உறங்குவார்கள். சம்பாதிக்க வேண்டும், பங்களா, கார், தொலைக்காட்சிப் பெட்டி எனத் தேவைகளைப் பெருக்கி மனிதத்தை மதியாத சமூக அமைப்பிலிருந்து வேறுபட்டு, விதிவிலக்காகி வாழும் அந்தக் கிராமத்தின் சராசரிக் குடும்பம் மணியத் தாருடையது.

அன்றுழைத்து உண்ணும் கவலையில்லாக் குடும்பமாகக் திகழ்ந் தாலும், அன்றாடச் செலவுகளுக்குத் தாக்குப் பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் பொன்னம்மாவுக்கு இருந்ததில் வியப்பில்லை. பொன்னம்மா மணியத்தாரின் சட்டையை எடுத்து உட்புறமாக இருந்த 'பொக்கற்' றுக்குள் துளாவிப் பணத்தை எடுத்து எண்ணி முடிக்கவும், மணியத்தார் குளித்துச் சாமி கும்பிட்டு வரவும் சரியாக இருந்தது.

சாக்கினை உதறி விரித்து, ஒரு காலை மடக்கி இருந்து கொண்டு, மறுகாலை தன் நாடிக்கு முட்டுக் கொடுத்து தார் வீதியில் எம்பிக் கிடந்த கல் தாக்கியதால் புடைத்திருந்த கால் விரலை நீவி, தடவிக் கொண்டிருந்தார். அம்மாவின் கடுகடுத்த முகம் இப்போது அப்புவைச் சுட்டெரிக்கும் தீயாகத் திரும்பிக் கொண்டிருந்தது.

சின்னவனும் மற்றப் பிள்ளைகளும் அப்புவைச் சூழ்ந்து கொண்டு வியூகம் அமைத்திருந்தனர். அப்புவைச் சூழ்ந்து கொண்டு கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கும் நேரம் இதுதான். வேறு சந்தர்ப்பம் கிடையாது அவர்களுக்கு.

'அப்பு..... எனக்குப் பென்சிலும் கொப்பியும் வேணும' இளையவன் விண்ணப்பித்தான்.

'அப்பு என்ர சட்டை கிழிஞ்சு போச்சு...... சட்டை வேணும்....' நடுக் குட்டி கமலம் கெஞ்சிக் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அப்பு அடுத்த வீட்டுப் பொடியன் போட்டிருக்கிறான்.... அது மாதிரிக் கண்ணாடி வேணும்' சின்னப்பயல் இறுதியாகச் சமர்ப்பித்தான்.

'எல்லாம் நாளைக்கு.... வாங்கித்தாரன' முடித்துவிட்டார் அப்பு. நாளை என்ற சொல்லினால் எல்லாம் கிடைத்துவிட்ட திருப்தியோடு அவர்கள் வியூகம் கலைந்தது. 'நாளைக்கு' என்று எத்தனை நாட்கள் அப்பு சொல்லியிருப்பார். தங்கம் தனக்குள் எண்ணிச் சிரித்துக் கொண்டாள்.

பிள்ளைகள் அகன்றதும் மறைத்து வைத்திருந்த கள்ளுப் போத்தலை எடுத்தார். வழக்கம் போல் சிரட்டையில் ஊற்றி ருசித்து இழுத்தார். மகள் வைத்துவிட்டுப் போன மீன் துண்டையும் ருசித்த மணியத்தாரின் கண்கள், பொன்னம்மாவின் பக்கம் தற்செயலாகப் பார்த்து விட்டன. அவளின் பார்வையால் உள்ளே சென்ற கள் தண்ணீராய் போய் விட்டது. கடந்த சில நாட்களாக பொன்னம்மா அமைதிகாத்து வந்தது மணியத்தாருக்கு வியப்பாகவே இருந்தது. எப்போதும் பூகம்பம் வெடிக்கலாம் என்று பயந்து கொண்டே இருந்தார்.

எந்த வீரனென்றாலும் பெண்டாட்டிக்குப் பயந்து அடங்கித்தான் போக வேணும் என்பது மணியத்தாரின் அசைக்க முடியாத நம்பிக்கை. அதேவேளை பெண்டாட்டியை ஒரே ஏமாற்ற முடியாது என்பதும் அவரது மானசீகமான முடிவாகும். போத்தலில் இருந்த மிகுதியும் இப்போது முடிந் திருந்தது. இப்போது பயம் அவரை விட்டு மெல்ல மெல்ல மறைந்து விட்டதை உணர்ந்து கொண்டார். தங்கம் எதிர்பார்த்த பூகம்பம் வெடித் தாயிற்று.

'தங்கம்..... வரவர..... உன்ர அப்பருக்கு வேற செலவு இருக்குப் போல .....' பொன்னம்மா பொரியத் தொடங்கினாள்.

'பால்காரன்.... சும்மாவா பால் தாறான். அவனுக்கு கறாராகக் காசை எறிஞ்சாத்தானே..... பால் தருவான் .....' குத்தலாகச் சாடினாள். புயலடிக்கப் போவதை உணர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம் மெதுவாக வீட்டுக் கோடிப்புறம் சென்று நடக்கிறதைக் கவனித்தாள். தான் தட்டுத்தடுமாறி வாய் போட்டால் போச்சுது. அப்பு மேலுள்ள கோபம் தன்மேல் திரும்பிவிடும். அம்மா சண்டைக் கோழியானாள்.

'பால்காரனுக்குப் பாக்கி தொங்கிகிடக்குது. நான் வாயைக்கட்டி, வயித்தக்கட்டி, நெருப்பில கிடந்து கஷ்டப்படுகிறன். அவர் மச்சான் மாரோட சேர்ந்து கும்மாளம் போட்டுச் செலவழிக்கிறார். வரவேண்டிய காசும் வரவில்ல' அம்மா மூச்சுவிடாமல் எரிந்து கொண்டிருந்தாள்.

'என்னடி உன்ர பாட்டுக்குக் கத்துறாய' அப்புவும் ஆனந்தத் தாண்டவத்தக்கு ஆயத்தமாகிவிட்டார். பிள்ளைகளும் மெல்ல பாளை களைத் தள்ளிக் கொண்டிருக்கும் தென்னம்பிள்ளைகளின் மட்டைகளைப் பிடித்தபடி மறைந்திருந்தனர். அவர்களுக்குத் தெரியும் அப்பு அம்மாவுக்கு அடிக்க, அம்மா கையில் கிடைத்தவற்றால் அப்புவுக்கு எறிய, அவற்றி லிருந்து விலகி இருக்கச் சென்று விட்டார்கள்.

எப்ப பார்த்தாலும் ஓரே புறுபுறுப்பு. உழைத்து வந்து கொட்டுறது காணாதா......... ஒரு சதம் ஆசைக்கு எடுத்தால்.... பெரிய கப்பல் கவுண்ட மாதிரி கத்திறியே... என்ன மனுசி நீ.......' அப்பு படபடத்தார்.

'நீ ஏன் சொல்லமாட்டா..... அடுப்படியில நெருப்பைத்திண்டு பாலைக் காச்சி தயிராக்கி கறகட்டா தாற எனக்கெல்லா வருத்தம் தெரியும்' வெடுக்கென்று பொன்னம்மா கூறினாள். அப்புவுக்கு சூடு ஏறத் தொடங்கி விட்டது.

'பேய்த்தனமாக் கதைக்காத........ வேகாத வெயிலில் அலைந்து ........ உருகி ஓடும் தார் ரோட்டில் வெறும் காலோடு நடந்து வித்து வரும் எனக்கும் வருத்தம் இருக்குது' வாயில் வந்தபடி மணியத்தார் அளந்து தள்ளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நானும் பார்த்துக் கொண்டு வாறன். நாளைஞ்சு நாளா...... காசு குறைஞ்சு கொண்டு வருதே என்ன செய்த நீ' அம்மா விறைப்போடும், கோபத்தோடும் கூறினாள். அப்புவும் சற்று ஆட்டங்கண்டு விட்டார்.

'உடம்பு அலுப்பாயிருந்தது களைப்பும் வந்தது. வழியில கொஞ்சம் அது வாங்கிக் குடிச்சன் இது உனக்குக் குத்துதோ....'

'பாவி மனிசா..... உன்ர அலுப்புப் போக்கத்தானே ஒவ்வொரு நாளும் கள்ளு வாங்கி வச்சுத் தொலைக்கிறனே...... அங்க வழியில மச்சான்மாரக் கண்டதும் இவருக்கு உச்சி குளிர்ந்துவிடுமே.... நானும் கேள்விப்பட்டனான் நல்ல மச்சான்மார்.....' குற்றத்தைக் குத்திக் காட்டியதும் கட்டிலிருந்து விடுபட்ட வேட்டை நாய் போலானார். என்ன சொன்னாலும் பொறுத்துக் கொள்ளும் மணியத்தார் தன் நண்பர்களைக் கேவலமாகப் பேச மட்டும் அனுமதிக்கமாட்டார். மின்னல் வேகத்தில் எழுந்தார்.

'என்னடி சொன்னனி' வாயிலிருந்து வந்த ஒலியோடு விழுந்தது உதை. பொன்னம்மா சுருண்டு விழுந்தாள். பொன்னம்மா உதை விழும் என்று எதிர்பார்த்ததால் அது விழுமுன்னேயே சரிந்து விட்டாள். உதை பட்டதும் படாததுமாக புலம்பத் தொடங்கிவிட்டாள்.

'தொலைவான்....... கொண்டு போட்டான்.... உன்ர காலில் புடையன் கொத்த........' ஆத்திரமும் அழுகையுமாக கொட்டித்தீர்த்தாள். பாம்பைக் கண்டு பதுங்கும் தேரைக் குஞ்சுகளாகப் பிள்ளைகள் பயத்தால் சிலிர்த்தனர்.

'புடையன் கொத்தி நான் செத்தாத்தாண்டி உனக்குக் கடுப்புத் தெரியும்' சொல்லிவிட்டுத் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு அம்மாவின் காலில் ஒரு மிதிமிதித்து விட்டு விறுவிறு என்று படலையைத் தாண்டி அவர் போய்விட்டார். அவர் காதில் படும்படி எனக்கு அடிச்சுப் போட்டு போறியே...., நீ நாசமத்துபோ....' அம்மா விக்கிவிக்கி அழுதுவிட்டு அந்த இடத்திலேயே..... முந்தானையை விரித்துச் சுருண்டு விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருந்துக்குப் பயந்து ஒழிந்த கோழிக் குஞ்சுகளைத் தாய்க் கோழி ஒன்று சேர்த்து அணைப்பது போல், தங்கம் தன் உடன்பிறப்புக்களை அணைத்து உணவு கொடுத்தாள். அப்பு இன்னும் வரவில்லை. அப்பு வந்து சாப்பிடும் சத்தம் கேட்டால்தான் தங்கத்திற்கு உறக்கம் வரும். அவள் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தாள்.

படலையைத் தாண்டிச் சென்று, சந்திக்கடையில் பீடி வாங்கிப் பற்ற வைத்து வந்தவர் படலையிலேயே குந்திவிட்டார். அவருடைய மனம் போராடிக் கொண்டிருந்தது. பொன்னம்மாவைக் கைபிடித்த நாளிலிருந்து அவள் இல்லை என்றால் மணியத்தாருக்கு கையும் ஓடாது, காலும் ஓடாது. மணியத்தார் பொன்னம்மாவில் உயிரையே வைத்திருந்தார். பொன்னம்மா எப்படித் திட்டினாலும், அது அவள் நுனிநாவில் இருந்துதான் வரும் என்பது மணியத்தாரின் அசையாத நம்பிக்கை.

ஒருமுறை மணியத்தார் காய்ச்சலினால் மயங்கிய போது பொன்னம்மா துடிதுடித்துப் போனாள். அவளது உள்ளமெல்லாம் மணியத்தாரே நிறைந்திருந்தார். 'போன மனிசனைக் காணல்லயே' என தலையை கிளப்பிப் பார்த்தாள். மணியத்தாரின் நிழலைக் கண்டதும் நிம்மதியாகக் கிடந்தாள் துவண்டு.

சிந்திக்கத் தெரியாத பாமர வாழ்க்கை அவர்களது வாழ்க்கை. நன்மை, தீமை உணராத பக்குவம். படிப்பறிவில்லாத அனுபவம் போலி யற்றதாய், யாதார்த்தமானதாய் இருந்தது.

'நான் செய்தது பிழைதான். அவளும் கஸ்டப்படுறாள்தானே.... எனக்குக் கள்ளு வாங்கி வைத்துவிட்டு, தான் அலுப்போடு கிடக்கிறாளே.... பாவம்......' அவர்மனம் உறுத்தியது. மெல்ல எழுந்து படலையை சாத்திக் கட்டிவிட்டு வந்தார்.

'வரட்டும் வந்து எழுப்பினால்தான் இண்டைக்குச் சாப்பிடுகிறது'. பொன்னம்மாவின் மனம் சொல்லிற்று.

•

'அட இவள் நித்திரை கொண்டிட்டாளே..... நான் அடிச்சிருக்கப்படாதுதான்...... இந்தக் கள்ளும் கோவமும் செய்த வேலை. இனி இந்தக் கள்ளைக் குடிக்கிறதில்லை. 'அவர் மனதில் சொல்லிக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகை பொத்துக் கொண்டு வந்தது. அடக்கமுடியாமல் இருந்தது. மனைவியின் பக்கத்தில் நின்று பார்த்தார்.

'என்னைக் கட்டிக் கொண்டு இவள் என்ன சுகத்தைக் கண்டாள்.' அவர் மனம் வெந்து கொண்டிருந்தது. மனைவியை அனுதாபத்தோடு உற்று நோக்கினார். விரித்திருந்த சாக்கிலேயே முடங்கிக் கொண்டார்.

'இந்த மனிசனுக்கு எவ்வளவு கல்நெஞ்சு, கொஞ்சம் கூட ஈவு இரக்கமே இல்லையா..... வலிய எழுப்ப மட்டும் எழும்புறதில்லை' எண்ணிக் கொண்டு மறுபுறம் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

'சே....... இவள் பசியோடு படுத்திருக்கிறாளே.....எழுப்பினால் பத்திரகாளியாகிவிட்டால்.......' சுருண்டு படுத்துக் கொண்டார் மணியத்தார். நித்திரை வருவதாக இல்லை. இருவர் மனதிலும் போராட்டம்.

பகலெல்லாம் ஓடியாடி வேலை செய்து, பாடுபட்டு ழைத்து செக்கலானதும் சாப்பாட்டை முடித்துக்கொண்டு, மறுநாளைப் பற்றிச் சிந்தியாது வாழ்ந்து பழக்கப்பட்டவள் பொன்னம்மா. மகள் தங்கம் வயதுக்கு வந்த பின்தான் தன் சூழலை உணரத் தலைப்பட்டாள். மகளைக் கரைசேர்க்க வேண்டும். நல்லதொரு பையனிடம் பிள்ளையை ஒப்படைக்க வேண்டும் என்று கவலையில் வீழ்ந்துவிட்டாள். கணவனை தன்வழிக்குக் கொண்டு வந்து, மகளின் நன்மைக்காகக் கொஞ்சம் பணத்தை மிச்சப்படுத்திச் சேமிக்கத் தொடங்கி விட்டாள். மணியத்தாருக்கும் இது விளங்காமல் இல்லை.

சாமித்தம்பியர், மணியத்தாரின் இணைபிரியா நண்பர். இருவரும் ஒன்றாய் தயிர் யாவாரம் செய்பவர்கள். அதிகாலையில் ஈச்சந்தீவில் இருந்து சாமித்தம்பியரும், ஆலங்கேணியில் இருந்து மணியத்தாரும் கிண்ணியாத் துறையடி வரை கதைத்துக் கொண்டே நடந்து செல்வார்கள். அவர்கள் நடையில் ஒரு தாளலயம் இருக்கும். பாரமான காத்தடியின் துள்ளலுக்குகேற்ப நடப்பார்கள். அதில்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகமிருக்கும். பாரமான சன்லைட் பெட்டிகளைத் தாங்கிய கயிறு, காத்தடியில் விறுவிறு என்று இசை கொடுக்கும். துறையை சமதுநாநாவின் தோணியில் ஏறிக் கடந்தால் பேருந்து ஏற்றுக் கொள்ளும். வரும் போது தனித் தனியாகவே திரும்புவர். தற்செயலாக யாவார முடிவில் சந்தித்தால் இருவரும் பங்கு போட்டு ஒரு 'அரை' வாங்கி அடித்துக் கொள்வார்கள்.

திருகோணமலை மத்திய வீதியில்தான் சந்தித்துக் கொள்வார்கள். அடிக்கடி சந்திப்பு நடந்ததையும் பணம் குறைந்ததையும் சாமித்தம்பியரின் மனைவி கனகம்மா, பொன்னம்மாவுக்கு ஊதிவிட்டாள். எதையும் முளை யிலேயே கிள்ளிவிட்டால் நல்லது. சந்தர்ப்பம் இன்று வாய்த்துவிட்டது. புயல் அடித்து ஓய்ந்துவிட்டது.

அவர் வந்து சமாதானமாகட்டும் என்று பொன்னம்மாவும், அவளே வலியவரட்டும் என்று மணியத்தாரும் இறுமாப்போடு, உள்ளம் கனன்று கொண்டிருக்கும் போது..... கண்ணயர்ந்து விட்டனர். சட்டென்று விழித்த பொன்னம்மா கிழக்கு வெளுத்து வருவதை உணர்ந்து கொண்டாள்.

'தங்கம்..... புள்ள தங்கம்.... கொப்பரை எழுப்பிவிடு' சொல்லிவிட்டு வெளிக்குச் சென்றுவிட்டாள். மணியத்தார் வழக்கம் போல் எழுந்து கடமைகளை முடித்தார். தென்னங்குடுவையில் இருந்த திருநீற்றை எடுத்துப் பூசி சாமி கும்பிட்டார். தங்கம் கொடுத்த தேயிலைச் சாயத்தை சீனியை உள்ளங்கையில் கொட்டி, நக்கி உறிஞ்சிக் குடித்தார். சட்டையைப் போட்டுக் கொண்டு, காத்தடியின் இருமுனைகளிலும் தயிர்ப் பெட்டிகளைக் கொழுவி, தூக்கித் தோளில் வைத்தார். சற்றுமுற்றும் பார்த்தார். ஒன்றுமறியாதவள்போல் 'என்னப்பு வேணும்' என்று தங்கம் கேட்டாள். அவர் கண்கள் தேடியதைத் தங்கம் உணர்ந்து சிரித்தாள்.

'ஒன்றுமில்லை' என்றவர் படலைப் பக்கம் பார்வையைச் செலுத்தி னார். பொன்னம்மா இன்று படலையில் வந்து வழியனுப்பமாட்டாள் என்ற எண்ணத்துடன் நடந்தார். அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் கனத்தது. படலையைத் தாண்டும் போது அங்கே முன்னால் வழமைபோல் பொன்னம்மா. மனைவியின் முகத்தைப் பார்க்க அவரது விழிகள் கூசின. குற்ற உணர்வு குடிகொண்டது. கணவனின் விழிகளைக் காண பொன்னம்மாவின் விழிகள் திராணி யற்றுத் தவித்தன. மின்னல் வேகத்தில் இருவரது விழிகளும் சங்கமித்தன. அந்தச் சங்கமத்தில் ஆயிரங்கோடி அர்த்தங்கள் கூடி ஊழிக் கூத்தாடின. மகிழ்ந்து கண்களால் ஆளுக்காள் மன்னிப்புக் கோரினர்.

மணியத்தார் தன் பயணத்தைத் தொடர்ந்தார். அவர் போவதைப் பார்த்து பொன்னம்மா தன்னை நொந்து கொண்டாள். 'பாவி... இரவு பட்டினி போட்டுவிட்டனே' என்று புலம்பினாள். அவருக்காகக் கடவுளிடம் மன்றாடினாள்.

'தங்கம்..... அப்பு நேத்து ராத்திரி ஒன்றும் தின்னல்லடி..... பாவம்.... அப்பு இல்லாட்டி ....... நாங்க.......' சொல்லிக் கேவி அழுது விட்டாள்.

'அப்பு இல்லாட்டி.......' தங்கம் அந்த வார்த்தைகளை நினைத்துப் பார்க்கவே நடுங்கினாள்.

'அப்பு வந்தாத்தாண்டி இரணம் இறங்கும்' சொல்லிக் கொண்டு தன் கடமைகளில் ஈடுபட்டாள். மனம் சுற்றிச் சுற்றி மணியத்தாரின் பின்னாலேயே சென்று கொண்டிருந்தது.

'நான் கண்டமாதிரி.... வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசிப்போட்டன். கண்டபடி வாகனப் போக்குவரத்து...... சுற்றிவளைப்பு தேடுதல்.....' நினைக் கவே தலைசுற்றுவது போலிருந்தது. தங்கம், அம்மாவின் நடவடிக்கை களைக் காலையில் இருந்தே கவனித்துக் கொண்டே வருகிறாள். அழுது அமவாசை போல் முகம் தெரிந்தது. இராமனைப் பிரிந்த சீதையைப் பற்றித் தங்கம் கேள்விப் பட்டிருக்கிறாள். ஒரு நாளைக்குள் அம்மா இப்படி இளைத்து விட்டாளே. அம்மாவை எண்ணும் போது ஒரு பக்கம் பெருமை யாக இருந்தது. மறுபக்கம் சரியான அவசரக்குடுக்கையாய் தெரிந்தது. இந்த அம்மாவுக்கு அப்பு மேல் எத்தனை பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசம். ஆனால் 'அப்பு வந்து விட்டார் என்றதும் ஏன் இந்தப் பம்மாத்து'? தங்கத்திற்கு புரியாத புதிராக இருந்தது.

பிள்ளைகள் வியூகம் அமைத்து விட்டனர். கழற்றி வைத்த 'சன்லைற' தயிர்ப் பெட்டிகளைத் தூக்கி வந்தார். ஒரு பெட்டியில் இருந்து பொருட்களை எடுத்தார்.

'இந்தா.... கொப்பி, பென்சில'
'இந்தா பிள்ளைக்குச் சட்டை'

'சின்னப்பயலே இந்தா கண்ணாடி...... போடு பார்க்கலாம' அவன் போட்டுத் துள்ளித் திரிந்தான்.

'தங்கம்....... இந்தா உனக்கு' நீட்டினார். அழகான பாவாடை, தாவணி. தங்கம் குளிர்ந்து போனாள்.

'தங்கம் அம்மா எங்க...... வரச்சொல' இப்பவும் தங்கம்தான் தூது.

'அம்மா அப்பு வரட்டாம' இப்போது பிள்ளைகள் அனைவரதும் குரல்கள் ஒன்றாய் ஒலித்தன.

'ஏனாம' என்றவாறு வேண்டா வெறுப்பாக, எழும்ப முடியாத மாதிரி, தட்டுத்தடுமாறி எழுந்து வருவது போல் காட்டினாலும் எப்பொழுது கூப்பிடுவார் என்று பொன்னம்மாவின் இதயம் ஏங்கிக் கொண்டிருந்தது. தன் ஆவலைப் பிள்ளைகளுக்கு முன் காட்டத் தாய்மை உள்ளம் தடுத்தது.

'ஏனப்பு இவ்வளவு நேரம் போனது..... நாங்க துடிச்சுப் போனம'

'இண்டைக்குத் தப்பி வந்தது கோணேசர் புண்ணியம். பட்டணத்துச் சனங்கள், சாம்பல்தீவு, நிலாவெளிப் பக்கம் ஓடுதுகள். கண்ணிவெடி நடந்திருக்காம். போக்குவரத்து வாகனமும் இல்லை. ஊரடங்குச் சட்டமாம். தெரிஞ்ச ஆமி பொலிஸ்காரர் உதவியால தப்பி நடந்து வாறன். இனி அந்தப் பக்கம் பழைய நிலை வருமட்டும் போகேலாது' என்று சொல்லியவாறே கொடியில் கிடந்த சட்டைக்குள் தானே கையைவிட்டுக் காசை எடுத்து மனைவியின் கையைப் பிடித்துக் கொடுத்தார். பொன்னம்மாவின் கண்கள் கண்ணீரால் நிறைந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவலங்கள்

அந்த ஹெலிக்கொப்டர் தாழப் பறந்து துண்டுப் பிரசுரங்களை அள்ளி இறைத்துவிட்டுச் சென்றது. கிலி கொண்ட மக்கள் மறைவிடங்களிலிருந்து வளையில் இருந்து எட்டிப் பார்க்கும் எலிகளைப் போல் வெளி வந்து ஆகாயத்தை அண்ணார்ந்து பார்த்தனர். துண்டுப்பிரசுரங்கள் காற்றில் ஆடி வளர்ந்தோங்கிய தென்னோலைகளால் அடிபட்டு நிலத்தை நோக்கிப் பறந்து வந்தன. பிள்ளைகள் துரத்திப் பிடிக்கத் திரிந்தனர். அவர்களுக்கு அது ஒரு விளையாட்டு.

'அங்க பாருங்க குராலிகள் அடிபட்டுப் பொறுக்குதுகள்' அலுத்துக் கொண்டு கோணாமலையர் வெளி வந்தார். ஆச்சிமுத்து கலவரமடைந்து பின் தொடர்ந்தாள். அப்பலவாணர் அப்போது தான் வந்து சேர்ந்தார். ஒரு பெடியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் துண்டுப் பிரசுரத்தை அம்பலவாணரிடம் ஒப்படைத்தான். அந்த உப்பாறு கிராமத்தில் எழுதப்படிக்கத் தெரிந்த பெரிய மனிதர் அம்பலவாணர் மட்டும் தான்.

'என்னவாம் அம்பலவாணர், ஹெலியில் இருந்து போட்டார்கள்' கோணாமலையர் சற்றுத் தொலைவில் இருந்து உரத்துக் கேட்டார். கோணாமலையர் குரலொலியில் கவரப்பட்ட சில ஊர்ப் பெரியார்கள் கூடிவிட்டார்கள். 'இருபத்திநாலு மணித்தியாலங்களுக்கிடையில் உப்பாறை விட்டு வெளியேறட்டாம். சட்டத்தை மீறுவோர் தண்டிக்கப்படுவார்களாம்.'

அம்பலவாணர் கூறிக் கொண்டே வானத்தைப் பார்த்தார். தென்னஞ் சோலையில் கொட்டியாரக்குடாக் கடற் காற்று வந்து மோதி சலசலத்துக் கொண்டிருந்தது. அவரது கண்களில் கண்ணீர் தலை கொண்டது. பெருமூச்சொன்று கனன்று வெளிப்பறந்தது. கோணாமலையர் விக்கித்துப் போயிருந்தார்.

'அட கடவுளே... கோணேசா! என்ன சோதனை இது! இப்ப என்ன செய்யிறது' கந்தர் ஆலோசனை கேட்டார்.

'போகாட்டி என்ன செய்யப் போறாங்கள். நான் போறதில்லை. பார்ப்பம் வாறது வரட்டும்' கந்தையர் வீராப்பாய் நின்றார்.

' தொண்ணூறில் நடந்தது தெரியும்தானே? தமிழனாய் பிறந்ததால வந்தவினை இது,' வேலர் நொந்து கொண்டார்.

தொண்ணூறுல எங்கடசொந்த மண்ணைவிட்டு விரட்டி அகதியாக்கி'கிளப்பன் பேர்க்கிலே'முகாமில் போட்டார்கள். எல்லாத்தையும் இழந்து கஸ்ட்டப்பட்டம். இப்ப எங்க போகட்டாம்' மயில்வாகனம் குறையாகக் கேட்டார்.

'நாலு வருசம் அகதி முகாமில் கிடந்தம். மறியல் வீடுபோல அடிமைகளாகச் செத்தம். கொஞ்ச நாளைக்கென்றாலும் நிம்மதியாய் இருக்க விடமாட்டார்கள்' ஆச்சிமுத்து அடிக்குரலில் கூறிக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை பத்து மணியிருக்கும் அந்தக் கிராமத்து மூலைமுடுக்கெல் லாம் துண்டுப் பிரசுரச் செய்தி பரவி பயங்கரப் புயலை எழுப்பி விட்டிருந் தது. கோணாமலையர் செய்வதறியாது தவித்துக் கொண்டிருந்தார்.

உப்பாற்றுக் கிராமத்தின் தெற்கெல்லையாக மகாவலி பாய்ந்து வளமூட்டிக் கொண்டிருந்தது. பச்சைப்பசேல் என்ற வயற்பரப்பில் வேளாண்மை குடலைப் பருவத்தில் இருந்தது. தோட்டப்பயிர்கள் காய்த்துப் பயன்தரக் காத்துக் கிடந்தன. இராசவெள்ளிக் கொடிகளின் கொழுந்துகள் சைகை பேசின. இரவு முழுவதும் காவல் இருந்துவிட்டு விடிந்த பின்தான் அவர் நல்லதம்பியைக் காவலுக்கு விட்டு வீடு வந்தார். வரும் போது சலசலத்து ஓடும் வாய்க்கால் நீரில் முகமலம்பிக் கொண்டும், தண்ணீர் ஓட்டத்தில் சரிந்து கிடந்த வேளாண்மைக்கு பால்கொடி பறித்து வந்து நேரிய தடிகளில் கட்டி, அதில் சாய்த்து விட்டும் வந்தார். கால் களிலும் கைகளிலும் குடலைப்பருவத்து வேளாண்மையின் வாசம் இன்னும் மறையவில்லை. அந்த வாசத்தில் தன்னை மறந்து, மதாளித்து பூவும் பிஞ்சுமாய் பனி நீராடித் தலையசைக்கும் கத்தரி, மிளகாய், வெண்டித் தோட்டப்பயிர்களைப் பார்வையிட்டு வீட்டுக்குள் நுழைந்தவர் தான்.

இப்போது ஆடிப் போய்விட்டார்.'கிளப்பன் பேர்க்'அகதி முகாமில் இருந்து வெளிவந்து சொந்த மண்ணில் கால் வைத்ததும் அந்த மண்ணை தன் கைகளில் அள்ளி அவர் அடைந்த அந்த மகிழ்ச்சி இருக்கிறதே. அதைச் சொல்ல முடியாது. எழுத வார்த்தைகளும் இல்லை.

அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியோடு உப்பாற்றுக் கடல் நீரேரியைக் கடந்து ஊருக்குள் நுழைந்ததும்'அடிமைச் சங்கிலிகள்'அறுபட்டுச் சுதந்திரம் பெற்ற உணர்வோடு துள்ளி, தனது வீட்டுக்கு ஓடினார். உப்பாற்று மக்களும்தான் அவரவர் வீடுகளுக்கு ஓடினார்கள். வீடுகள் இல்லை. தென்னஞ் சோலைகள் எங்கே.... எங்கே? கடல் கொண்டு போனதோ? பேயறைந்தது போல் இருந்தார்கள். அவர்களால் ஒன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய முடியாத நிலை. கண்ணீர் மல்க நின்றனர். உப்பாறு பாழாகி பாழடைந்து வெறிச்சோடிக் கிடந்தது. தொண்ணூற்ராறாம் ஆண்டு தம் சொந்த மண்ணில் குடிசைகளை அமைத்து வாழத் தொடங்கியதும். புத்துணர்வு பொலிவுற்றது. கிராமம் புதுப் பொலிவு பெற்றது.

அகதிமுகாமிலிருந்து விடுதலையாகி வந்த அந்த மக்களை பார்க்க கண்டலடிஊற்று கயாத்து நாநாவின் கூட்டம் வந்தது. ஆறுதல் கூறியது. ஒருவரை ஒருவர் தேற்றிக் கொண்டனர். கடற்கரை ஓரமாக அடம்பன் கொடி பசுமை பரப்பி நாவல் நிறப் பூக்களைக் காட்டி வரவேற்றன. இராவணன் மீசை எனும் படர்புல் தன் மீசைகளைக் கழற்றி காற்றில் உருண்டோட வைத்தது. கடலோரம் படங்கீறும் நண்டுகள் ஓடித் திரிந்தன. கடந்த ஆறு ஆண்டுகளின் பின் இக் காட்சிகள் அவர்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டின. கயாத்து நாநாதான் தொடர்ந்து தன் கஷ்டத்தைக் கூறிக் கொண்டிருந்தார். 'கோணாமலை எங்களுக்கும் இந்த நிலை வராதெண்டு சொல்ல ஏலா..... நீங்கெல்லாம் போன பிறகுதான் இங்கு அட்டகாசம். நேவிக்காரன் போட்டில ஷெல் அடிப்பான். ஹெலிகள் வட்டமிட்டுச் சுடும். பொம்பர் குண்டு பொழியும். மாடு கண்டு எல்லாம் அழிந்து போச்சு. மீன்பிடிக்க கடலுக்குள் இறங்கேலா....'

அன்று அகதிகளாக்கப்பட்டு 'கிளப்பன் பேர்க்' முகாமுக்கு உப்பாற்றுத் தமிழ் மக்கள் அனுப்பப்படும் போது கண்டடியூற்று முஸ்லிம் மக்கள் நெட்டை மரங்களாய் பார்த்து நின்றனர்.

கயாத்து நாநாவின் கூட்டம் ஒத்தாசைகளைச் செய்து கொடுத்தது. ஆறு ஆண்டுகளாக மீன் பிடி இல்லாததால் கயாத்து நாநா காய்ந்து போய் விட்டார். மகாவலி நீர் கடலில் வீணாய் கலந்தது. ஒரு வருடத்துள் உப்பாறு பழைய நிலைக்கு வந்து விட்டது. கயாத்து நாநாவும் கோணா மலையரும் ஒன்றித்து விட்டார்கள். விவசாயமும் மீன் பிடியும் வளர்ச்சி கண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டம் துரவுகள் தோன்றின. சொந்த மண் சுகம் கொடுத்தது. இழப்புக்கள் பழசாகிப் போய்விட்டன. ஆனாலும் துண்டுப்பிரசுரங்கள் அவற்றிற்குச் சாவுமணி அடித்துவிட்டது போல் பிரமை. மீண்டும் நடைப்பிணப் போராட்டம்.

கயாத்து நாநா பதட்டத்துடன் ஓடிவந்தார். தூரத்தே கொட்டியாரக் குடாகடலில்'கண்போட்'உப்பாற்று கரையை நோக்கி வந்து கொண்டிருந் தது. கயாத்து நாநா மீன்பிடிப் படகுகளுக்கு உரத்துக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தார். 'கரைக்கு வந்திடுங்க..... கரைக்கு வந்திடுங்க...'

கயாத்து நாநாவின் கண்களும் பனித்திருந்தன. சமயத்தாலும் மொழியாலும் பிரதேச பழக்கவழக்கங்களாலும் கூடிக் கலந்து வாழ்கின்ற வர்கள். ஒருவருக்கொருவர் உதவியாக வாழ்ந்தவர்கள்.

'அல்லாவே கண்போட் வருது, தம்பிமாரே கெதியாக் கரைக்கு வாங்கடா' சொல்லி முடிக்கமுதல் பீரங்கிப் படகில் இருந்து'டுமில்....டுமில்'இடியொலி. படகொன்று தூள்தூளாய் போனது. நீலக்கடலில் ரத்தம். ரத்தம் பரவிக் கொண்டிருந்தது. படகில் இருந்த இளைஞர்களைக் காணவில்லை. தென்னைகளின் வட்டுக்கள் தெறித்தன. தேங்காய்கள், இளநீர், குரும்பை, ஓலைகள் சரிந்தன. வீடுகளின் கூரைகள் சிதறின. மக்கள் செய்வதறியாது சிதைந்து ஓடித் திரிந்தனர். ஆடு, மாடு, கோழிகள், நாய்கள் அவலக்குரல் எழுப்பிப் பதறித் துடித்தன. பீரங்கிப்படகிலிருந்து ஒலிபெருக்கி 'உடனடியாக ஊரைவிட்டு வெளியேற வேண்டும். உடனடியாக.......' அலறிக் கொண்டிருந்தது.

அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு மூட்டை முச்சுக்களுடன் மீண்டும் அகதிகளாக உப்பாற்று கடல் நீரேரியைக் கடந்து, நடந்து பள்ளி வாசலில் தஞ்சமாகின்றனர். கயாத்து நாநா கோணாமலையரைக் கட்டிக் கொண்டு கேவிக் கேவி அழுதார்.

'அல்லாவே என்ன சோதனை இது. இந்த மக்கள் எங்க போகுங்கள்' மதார் நாநா மனங்குழைந்து வெதும்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அடோவ்! என்ன இங்க சத்தங்'.... அங்காலே போ...... சொல்லு' அரைகுறைத் தமிழிலே அந்த பொலிஸ்காரன், கயாத்து நாநாவிடம் சொல்கிறான். ஏதேதோ எல்லாம் சொல்லிப் பார்த்தார். அவன் துப்பாக்கியை மேலே பிடித்து நாலைந்து சத்த வெடிகளைத் தீர்த்தான்.

கயாத்து நாநாவும் தன் கூட்டத்தோடு மூட்டை முடிச்சுக்களை எடுத்துக் கொண்டு அந்த அகதி மக்களோடு நடந்து கொண்டிருந்தார். சொந்த மண்ணில் சுகங்களையும் சுதந்திரத்தையும் விட்டு கால் போன போக்கில் கிண்ணியாவை நோக்கி நடக்கின்றார்கள் . சொந்த மண்ணில் அகதியாவது கொடுமையிலும் கொடுமை. மனத்துயர் மேலெழுந்து அழுத்திக் கொண்டிருந்தது. தாமரைவில் வெண்மணற் பரப்பில் சுதந்திர மாய் கடற்காற்றில் ஆடிக் கொண்டிருந்த புதர்களுக்கூடாக நடந்து போகும் போது வானொலிச் செய்தி அலறியது. 'உப்பாற்றுக் கடற்பரப்பில் நடந்த மோதலில் பயங்கரவாதிகளின் படகு அழிப்பு. அதிலிருந்த ஐந்து பயங்கரவாதிகளும் கொல்லப்பட்டனர்.'

'அல்லாவே' காயத்து நாநாவின் வாயிலிருந்து சத்தம் வெளிவந் தது. அறிவுகெட்டு அவர் சாய்வதைக் கண்ட கோணாமலையர் அவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டார். மூட்டை முடிச்சுக்களோடு அப்படியே அந்த மக்கள் கூட்டம் எங்கே போவது' என்ற ஏக்கத்தோடு நடந்தனர். தாரை தாரையாக அவர்கள் எல்லோர் கண்களிலிருந்தும். கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

தாமரை வில்லின் வடமேற்குப் புறம் அமைந்துள்ள திருகோண மலை நகரின் மணிக்கூட்டுக் கோபுரத்திற்கும் கோணேசர்மலைக்கும் இடையில் கடற்கரையோரமாக தீர்த்தமாடும் அந்தப் பாரம்பரிய கடற்கரைப் பிரதேசத்தில் வலுக்கட்டாயமாகக் குடியேறிய பெரும்பான்மை இன மக்களுக்குக் காணி உறுதிகளும் மானியக் காசோலைகளும் அரசின் அமைச்சரினால் வழங்கப்பட்டுக் கொண்டிருந்ததை அந்த தமிழ் முஸ்லிம் அகதிகளுக்குத் தெரிந்திருக்க ஞாயமில்லை.

நன்றி - தினக்கதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனுபவம் புதுமை

கார் வந்து நின்றது. கதவைத் திறந்து விட்டான் கந்தசாமி. அவன்தான் ட்ரைவர். ஆனந்தர் அறைக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே போய் வந்தார். உதவியாளர் நாட்குறிப் பேட்டோடு பின்னால் ஓடி வந்து, ஒரு தாளைக் கொடுத்தார். கண்ணாடி மேல் பிறேமை உயர்த்திவிட்டு, அன்றைய புரோகிறாமைப் பார்த்தார். கண்கள் அன்றைய நிகழ்ச்சிகளின் மேல் விழுந்து மேய்ந்தன. தலையை அசைத்துக் கொண்டார். கந்தசாமி காரின் அருகே நின்ற பெரிய வாகனத்தைத் துடைத்தான். பின் அதனை இயக்கி வீட்டு வாசலில் நிறுத் தினான். அது அழகான பிக்கப்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கந்தசாமி ஏறிக் கொள். எங்கே கனகன்'

'இதோ வாறான் சேர்'

கனகன் வந்து கொண்டிருந்தான்.

'டேய் நேரம் என்ன இப்போது.... உன் வீட்டு வேலையா இது? அரசாங்க உத்தியோகம்' கடுகடுத்தார். உயர் அதிகாரி மேல் தன் கோபத்தைக் காட்டினால் வேலை போய்விடும் என்ற பயம். கனகன் பயபக்தியாகக் கூனிக் குறுகி ஓடி வந்தான். அது பிக்கப் அரசாங்க வாகனம். பின் சீற்றில் ஏறிக் கொண்டான். ட்ரைவர் கந்தசாமியும் பின் சீற்றில். ட்ரைவர் சீற்றில் ஆனந்தர். பிக்கப் இயக்கப்பட்டது. அது இரைந்து புறப்படத் தயாரானது.

அப்போதுதான் வெகு அமைதியாக தனுஜா வந்தாள். தேர் போல் அசைந்து வந்து, முன் சீற்றில் ஏறிக் கொண்டாள். கதவு இழுத்துச் சாத்தப்பட்டது. குபீர் என்று மருக்கொழுந்து சென்ற், பின்சீற்றில் உள்ளவர்களுக்கும் அறைந்தது. திணறிப் போனார்கள். ஆனந்தருக்கும் ஒரு கிளுகிளுப்புத்தான். பிக்கப் புறப்பட்டது. மனைவியை ஒரு முறை கடைக் கண்ணால் பார்த்தார். அவளின் கட்டளைக்குக் காத்திருந்தார். 'அப்படியே மத்திய வீதிக்கு விடுங்கோ' தனுஜாவின் குயிலின் குரல். ஆனந்தரின் கைகள் கட்டுண்டன. ஸ்ரேரிங்கைத் திருப்பின. பிக்கப் கடைத் தெருவில் நுழைந்தது. 'மலர் மாளிகை' எனும் நகை மாளிகை வரவேற்றது. தனுஜாவை உள்ளே இழுத்துக் கொண்டது. நேரம் புரண்டோடியது. எதிரே சந்தைக் கட்டடம் அழைத்துக் கொண்டிருந்தது. 'கனகன் இந்தா லிஸ்ற் எல்லாத்தையும் வாங்கிற்று வா.' லிஸ்ற் கனகன் கைக்கு மாறியது. அவன் இறங்கிப் போய்விட்டான். அரிசி, மா, மரக்கறி, தடல்புடல் சாமான்கள் வந்து சேர்ந்து கொண்டன. பிக்கப்பின் பின்பகுதி பதிந்து உயர்ந்தது.

'கந்தா இந்தா...... அம்மா வாறதுக்கிடையில் இதையும் வாங்கிற்று வா'. கந்தசாமியும் இறங்கிப் போய்விட்டான். நொடிப் பொழுதில் சொன்னதை வாங்கிக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயாணப் பைக்குள் வைத்துக் கொண்டான். ஆனந்தர் மணியைப் பார்த்தார். நாட்குறிப்பேட்டையும் பார்த்தார். முகம் கடுகடுப்பாக மாறிக் கொண்டிருந்தது. அவரால் ஏதும் செய்ய முடியாது. ஒன்பது மணிக்குக் கந்தோர். ஒன்பது முப்பது மணிக்கு வைபவம். இப்போதே மணி பத்துப் பதினைந்து ஆகிவிட்டது. விழா ஏற்பாட்டாளர்கள் அழைத்த போதே தலைக்கு மேல் வேலை என்றார். பின்னர் சுட்டுவிரலை உயர்த்திச் சுழித்தார். சற்றுத் தாமதித்துத்தான் வருவேன் என்று சொல்லியிருந்தார். அதை நினைத்துக் கொண்டார். சற்று அமைதியானார்.

தனுஜா மலர்மாளிகையின் கதவடிக்கு வந்தாள். ஆனந்தர் சைகையைப் புரிந்து கொண்டார்.பிக்கப்பிலிருந்து இறங்கி ஆனந்தர் சென்றார். கந்தசாமியும் கனகனும் ஆளையாள் பார்த்துக் குசுகுசுத்தனர். ஆனந்தரின் பேர்ஸ் திறந்து கொண்டது. என்னை எடு எனப் பச்சைத்தாள்கள். எட்டிப் பார்த்தன. தனுஜாவின் கைகளை அவை முத்த மிட்டன.

ஆனந்தர் முணுமுணுத்துக் கொண்டார். வாகனத்துக்கு வந்தார். ஏறிஅமர்ந்து கொண்டார். நேரம் ஓடிக் கொண்டிருந்தது. நகைக்கடைப் படிகளில் இறங்" தனுஜா வந்து கொண்டிருந்தாள். ஒரு குலுங்கல் குலுக்கி அழகு எட்டிப் பார்த்தது. கூந்தல் காற்றில் விரிந்து அலை புரண்டது. ஒரு வெட்டு வெட்டி தலையசைய கூந்தல் அதற்கேற்ப தோளில் போய் விழுந்தது. அழகாயிருந்தது. வாகனக் கதவு திறக்கப்பட்டது.

வாகனம் அவளை இழுத்து ட்ரைவர் இருக்கையில் கிடத்தியது. வாகனம் புறப்பட்டது. தனுஜாவுக்கு ஏற்ப வாகனம் அபிநயம் பிடித்து நகர்ந்தது. ஆனந்தர் பக்கத்துச் சீற்றில் அமர்ந்து கொண்டார்.

'எல்லாம் வாங்கியாச்சோ' நேரே பார்த்தபடி தனுஜா கேட்டாள்.

'ஓம் அம்மா...' கனகனின் பதில். தனுஜா பிக்கப் ஓட்டும் லாவகம் கவர்ச்சியாய் இருந்தது. இரைந்து அழகாய்ப் பறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்கப் பிரதான வீதியைத் தாண்டி வளைந்துச் சென்று வீட்டின் முன் நின்றது. கனகன் வாகனத்தின் கதவைத் திறந்து விட்டான். இறங்கிக் கொண்டாள். வாங்கிய பொருட்களை மார்போடு அணைத்தவாறு தனுஜா நடந்தாள். அந்த நடையில் ஒரு நளினமான துள்ளல். தனுஜாவை வீடு இழுத்துக் கொண்டது. கனகனும் கந்தசாமியும் வாங்கிய பொருட்களை இறக்கினார்கள். தூக்கினார்கள். வைக்க வேண்டிய இடத்தில் வைத்தார்கள். ஆனந்தர் வீட்டினுள்ளே சென்றார். இரண்டு மூன்று கோவைக் கட்டுகளோடு வெளியே வந்தார். வாகனத்தில் ஏறிக் கொண்டார். கந்தசாமி வாகனத்தை இயக்கினான். உறுமிக் கொண்டு புறப்பட்டது.

நெடிய தார் வீதி உடைந்து போய்க் கிடந்தது. இரு புறமும் வீரையும் பாலையும், சிவப்பும் மஞ்சளுமாகப் பழுத்துக் காட்சியாகின. அந்தச் செம்மண் சந்தியால் செல்லும் போது பதினொரு மணியாகிவிட்டது.

'கனகன் போகும் போது கொஞ்சம் பழங்கள் பிடுங்கவேணும். மறந் திடாதே' ஆனந்தர் கூறும்முன் 'ஓம்சேர்'கனகன் வாய் பதிலிறுத்து விட்டது. பதினொன்றரை மணி. இன்பபுரம் கொடிகளை அசைத்துக் களைத்துக் கொண்டிருந்தது. கொளுத்தும் வெயிலும் எரித்துக் காட்டியது. காத்துக் காத்துக் கண்கள் சோர்வடையும் நேரத்தில் அவர்களுக்கு வாகனத் தரிசனம் கிடைத்துவிட்டது. சோர்வு சொல்லாமல் ஓடிவிட்டது. உசாரானார் கள். வரவேற்பு மங்கலஒலி வானெழுந்தது. மக்கள் சாரி சாரியாய் வீதியோரம் ஊர்ந்தனர்.

பூவரசன் கல்லூரி எடுப்பாய் நின்றது. அந்த வெளியில் வெயிலில் குளித்துக் கொண்டிருந்தது. மாணவர்களின் „பாண்ட்" இசை வானைப் பிளந்து மத்தளம் கொட்டியது. அரைக் கிலோமீற்றர் தூரம் நடைபவனி காத்திருந்தது. ஆசிரியர்கள் புடைசூழ அதிபர் கணபதியார் வந்தார். ஆளளவு மாலையால் ஆனந்தரை அலங்கரித்தார். கைலாகு கொடுத்து அதிபரைத் தன் பக்கத்தில் நிறுத்தினார் ஆனந்தர். பெற்றோரும் ஆசிரியர் களும் மாலைகள் சூட்டினர். நடைபவனி தொடங்கியது. பாண்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத்திய இசைக்கும் மாணவர்களதும், வரிசையாக இருபுறமும் வரவேற்று நிற்கும் மாணவர்களதும் உடல் வியர்த்து ஆறாகி தோள் வழியாக வடிந்து, மாலையாக அசைந்து ஓடிக் கொண்டிருந்தது. ஆனந்தர்மேல் வெயில் விழாது வட்டக்குடையும் பிடிக்கப்பட்டது.

மண்டபம் வழிந்து கொண்டிருந்தது. பெற்றோரும் மாணவர்களுமாக நிறைந்திருந்தனர். பிள்ளைகள் வெக்கையில் வெந்து கொண்டிருந்தனர். 'மாணவச் செல்வங்களுக்காக, ஊணுறக்கமின்றி அயராது உழைக்கும் எங்கள் பணிப்பாளர்' அதிபர் விளித்துப் பேசினார். அதிபர் பேசும் போது ஆனந்தர் தான் கொண்டு வந்த கோவைகளைப் புரட்டிக் கொண்டிருந்தார். எழுதவும் செய்தார். அடிக்கடி மூக்குக் கண்ணாடி பிறேமைத் தூக்கிவிட்டு அதிபரைப் பார்த்தும் கொண்டார். முறுவலித்துத் தலையசைத்தும் கொண்டார்.

'எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கும் எங்கள் பணிப்பாளர் இந்த மேடையில் அமர்ந்திருக்கும் போதும் கோவைகளைப் பமத்துக் குறிப்புரை எழுதுவதைப் பார்க்கிறீர்கள். இந்தப் பரிசளிப்பு விழாவின் பரிசுகளை மாணவர்களுக்கு வழங்கி உரையாற்றுமாறு அழைக்கின்றேன்' அதிபர் முடித்தார்.

பரிசுகளை மாணவர்களுக்கு அளித்து முடித்து உரையாற்றும் போது 'உங்கள் அதிபர் கூறியதைக் கேட்டிருப்பீர்கள். நமது மாணவர் களது உயர்வுக்காக ஓயாது உழைக்க வேண்டும். உங்கள் கடமைகளைச் சரியாகச் செய்ய வேண்டும். ஒவ்வொரு மணித்துளியையும் மற்றவர்களின் உயர்வுக்காகச் செலவழிக்க வேண்டும். எனது அலுவலக வேலைப் பளு காரணமாக உரிய நேரத்திற்குச் சமுகம் கொடுக்க முடியாமற் போய் விட்டது. தாமதத்திற்காக மன்னிப்புக் கோருகின்றேன். இக்கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவேன். இக்கல்லூயின் உயர்ச்சிக்காகப் பாடுபடும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் நன்றி' அவர் கூறி முடிக்குமுன் கைதட்டல் ஒலித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி இரண்டைத் தாண்டிவிட்டிருந்தது. நன்றியுரைக்கும் தேசிய கீதத்திற்கும் கூட்டம் காத்திருக்கவில்லை. இனித்தானே அவர்கள் சென்று சமைக்க வேண்டும். பசி அவர்களது குடலைப் பிடுங்கியிருக்கும். பலர் முணுமுணுத்தனர். இளைஞர்களுக்கு அலுப்பாகவும் வெறுப்பாகவும் இருந்தது.

வைபவம் முடிந்ததும் அதிபரின் விடுதி அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. அதிபர் குளிர்ந்து போயிருந்தார். தங்கள் ஊருக்குப் பணிப்பாளர் வந்தது மக்களுக்குப் பெருமையாக இருந்தது. அவரை அழைத்து வரவைத்த அதிபர் மேல் அபார நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. தடபுடலாக விருந்து பரிமாறப்பட்டது. பணிப்பாளர் குளிர்ந்த சந்தோஷத்தில் ஆழ்ந்திருந்தார். கொடுத்த படிவங்களில் கையெழுத்தும் பெற்றாகிவிட்டது. அதிபரின் சம்பள ஏற்றப் படிவம் பூரணம் பெற்றுவிட்டது. பாடசாலைச் சம்பவத்திரட்டு புகழ்ச்சி எழுத்துக்களால் பூரித்து நாணத்தைச் சூடிக்கொண்டு மூடிக் கொண்டது.

கந்தசாமி பிக்கப்பை அதிபரின் விடுதிப் பலாமர நிழலில் நிறுத்தி யிருந்தான். அக்கிராமத்தில் கிடைக்கக் கூடிய அன்பளிப்புக்களாக தேன், நெய், இறைச்சி வற்றல், பழ வகைகள் பிக்கப் வாகனத்தின் பின் புறம் இடம்பிடித்துக் கொண்டன. உணவின் பின் சாய் கதிரையில் ஓய்வெடுத்த பணிப்பாளர். கண்விழித்த போது நாலரை மணியாகியிருந்தது. அதிபர் கொடுத்த தேநீரை உறிஞ்சி இழுத்த பணிப்பாளர், புறப்பட வாகனத்தில் ஏறினார். அதிபர் புடைசூழ கிராமத்துப் பிரமுகர்கள் வந்து வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர். வாகனம் புறப்பட்டது.

'என்னைப் பார்' என வீரை மரங்கள் பவளமாகச் சிவந்திருந்தன. தெவிட்டாத தீங்கனி வாருங்கள். சுவையுங்கள் எனப் பாலை மரங்கள் மஞ்சளாய் விரிந்திருந்தன. வீதி ஓரத்தில் வாகனம் நின்றது. கனகன் வீர மரங்களின் கிளைகளை அளைந்தான் கந்தசாமியின் கைகளைப் பாலைக் கிளைகள் முத்தமிட்டன. கனிகள் பாய்ந்து அவர்களின் வாயுள் புகுந்து சுவையூட்டின. வாகனத்தின் கதவுகள் திறந்து கிடந்தன. உள்ளே புகுந்த காற்று சுழித்து விளையாடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்காற்றைக் கண்ட கோவைகள் திறந்து மலர்ந்தன. படபடத்த தாள்கள் தாளம் போட்டன. விரிந்து மல்லாக்காகக் கிடந்தன. பழங்களை மரத்தின் கீழ் நின்றவாறே ஆனந்தர் சுவைக்கத் தொடங்கினார். பழக் கொப்புகள் வாகனத்தின் பின்புறம் புகுந்தன. பழங்களால் பெட்டிகள் நிரம்பிக் கொண்டன. 'உங்களுக்கும் சேர்த்துப் பிடுங்கிக் கொள்ளுங்கள்.' ஆனந்தரின் குரல் இவர்களுக்குத் தேனையும் பாலையும் வார்த்துவிட்டது. ஆறுமணி தாண்டிவிட்டது. வாகனம் புறப்படத் தயாரானது. கோவைகள் படபடத்துக் கொண்டிருந்தன. வாகனத்துள் சிதறிக் கிடந்தன. ஆனந்தர் வாகனத்துள் ஏறு முன் ஒழுங்கு படுத்த வேண்டும். உஷாரானார்கள்.

ட்ரைவர் கந்தசாமியின் கண்கள் வேட்டை நாய்களாயின. கோவைகளை அவன் கைகள் தட்டி அடுக்கிக் கொண்டிருந்தன. அக் கோவைகளுள் வெற்றுத் தாள்கள் மட்டுமே இருந்து கண்சிமிட்டின தாள் களில் ஒன்றுமே எழுதப்பட்டிருக்கவில்லை. கனகனோடு கண்களால் கந்தசாமி பேசினான். கனகனின் கைகள் கோவைகளைத் துளாவின. வெற்றுத் தாள்களின் நடுவில் பிரயாணச் செலவுப்படிவம் „றவலிங்கிளைம்" அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டிருந்தது. புறப்பட்ட நேரம் காலை ஆறு மணி. வீட்டை அடைந்த நேரம் மாலை ஏழு மணி இணைந்த படிகளாக முந்நூற்று ஐம்பது ரூபாய் எனப் பிரயாணப்படிவம் கூறிக் கொண்டிருந்தது. கந்தசாமி ஒழுங்காகக் கோவைகளை மூடிக்கட்டினான். ஆனந்தர் வாகனத்தில் ஏறினார். ஓட்டினார். வாகனம் ஆனந்தரின் வீட்டு வாசலில் நின்றது. அன்பளிப்புக்கள் இறக்கப்பட்டன. கந்தசாமியும் கனகனும் புறப்படத் தயாரானார்கள்.

'சேர் றன்னிங்சாட் பதிய வேணும் நேரம்......' கந்தசாமி முடிக்கவில்லை.

'கந்தசாமி புறப்பட்ட நேரம், ஆறு மணி, வந்த நேரம் ஏழு மணி 'றன்னிங்சாட்டில்' பதியும். இரண்டு பேரும் பிராயாணச் செலவுப் படிவத்தில் இதே நேரத்தைப் போடுங்கள். உங்கள் நன்மைக்காகச் சொல்கிறேன். சரியா....... மறக்க வேண்டாம்' கூறிவிட்டு வீட்டினுள் சென்றுவிட்டார். கந்தசாமிக்குத் தெரியும் என்ன நேரம் போடுவதென்று கடமைக்காகத்தான் கேட்டான்.

*நன்றி - தினக்குரல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வம்மிப்பூ

காற்று மட்டக்களப்பு கடல்நீர் ஏரியை உலுக்கி, குளிரை மட்டும் தழுவி எடுத்து மதாளித்து வளர்ந்த வம்மிகளை அசைத்துக் கொண்டிருந்தது. நீரேரியில் இருந்து சிறுசிறு அலைகள் கிளுக்கென்று சிரிப்பொலியோடு கரையைத் தழுவிக் கொண்டிருந்தன. இத்தனை சுகமான இடத்தினை எப்படித் தேடிக் கொண்டான் இந்த முருகன். இந்த அழகான இடத்தில்தான் வள்ளியைக் கண்டு கொண் டானோ? நெய்தலும் மருதமும் கொஞ்சிட மண்டூர் விரிந்து பனியில் குளித்துக் கொண்டிருந்தது.

வம்மிகள் இலைகளைக் குடையாக விரித்திருந்தன. பனித் துளிகளை ஏந்த, சிறு துளிகள் பெரும் துளிகளாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகன்ற இலைகளில் இருந்து துளிதுளியாய் அருணகிரியாரின் திருப்புகழை இசையாகக் கொட்டிக் கொண்டிருந்தது. வம்மிப் பூக்களை வண்டுகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. பூக்களிலிருந்து வரும் நறுமணம் இங்கிதத்தை ஏற்படுத்த இதமாக இருந்தது. பந்து போல் ஒரு கையுள் அடங்கும் அளவு கொண்டது. வம்மிப்பூக்கள் மிக ரம்மியமானவை. கைகளினால், விரல்களினால் தடவும் போது ஒருவித ஸ்பரிசத்தை உணரலாம். கையில் இருக்கும் போது "வெல்வெட்' போல் சுகமாக இருக்கும்.

மண்டூர் முருகன் திருக்கோயிலைச் சூழ ஆங்காங்கே வம்மிகள், வெண்குருமணல் விரிந்து பரந்திருக்கும். அந்த மணலில் கால் புதைத்து இருந்து கதையளப்பதென்றால் கொள்ளை இன்பம். சின்னப்பருவத்தில் விடலைகளோடு கூடி மண்டூர் முருகன் ஆலயத்தின் வீதியின் புகுமுக வாசலோடு ஒட்டி வீதியோரமாக இருக்கும் இராமகிருஷ்ண வித்தியாலயத் துக்குப் பின்புறத் திண்ணையில் தலைமை ஆசிரியர் சரவணமுத்து தனது வீட்டுக்குச் செல்லும் சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் முற்றிய பலாக்காய் பிடுங்கி வந்து, சுத்தப்படுத்தி சாமித் தம்பி ஆக்கித் தந்த புக்கை .......... இப்பவும் நாவூறும், இனிக்கும், "சாமித்தம்பியின் கைராசி அது' சிவபாதம் சொல்லிச் சொல்லிச் சாப்பிடுவான்.

சாமித்தம்பி குமாரன் சிவபாதம் பூபாலன் இப்படிப் பலர். ஒரு பத்துப்பேர் இருக்கும். மண்டூர் கிரவல் வீதிகளில் லூட்டி மண்டூர் தீர்த்தக்கரை இறங்குதுறை முத்துமாரியம்மன் கோவிலடி, ஏரிகளிலும் மூங்கிலடி ஆற்றிலும் நீச்சலடித்து தோணிகள் ஓட்டி பகல் முழுவதும் ஆட்டம். மாலையானதும் மனதுக்கினிய பலாக்காய் அவியல் இப்படி விடுமுறைகள் கடுகதியாய்ப் பறக்கும்.

"குமார் பூபாலன் வீட்டில் பருவமான பலாக்காய் கண்டனான். செக்கல்பட கொண்டு வாறது உன்ர பொறுப்பு' சாமித்தம்பி சொல்லிவிட்டு சைக்கிளில் மற்ற ஒழுங்குகளைக் கவனிக்கக் காற்றாய்ப் பறந்து விட்டான். அவனுக்குத் தெரியும் குமாரன் சொன்னபடி செய்வானென்று. செக்கலுக்குள் பலாக்காய் வந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மச்சான் உண்மையா இண்டைக்குத் தான் சாமித்தம்பியின்ர கை ருசியத் தெரியுது. கையெண்டா அது கைதான்'. பூபாலன் சப்புக்கொட்டி "கிச் கிச்' போட்டு ருசித்துச் சாப்பிட்டான். குமாரன் கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டு சாப்பிட்டான்.

"டேய் ஏனடா சிரிக்கிறா...... கள்ளன் மாதிரி' சாப்பிட்டுக் கொண்டே பூபாலன் கேட்டான். "கள்ளன் மாதிரி என்ன.... கள்ளனே தான்......' என் மனம் சொல்லிக் கொண்டது. கள்ளமாய் சாப்பிடுவதில் ஒரு இன்பம் இருக்கத்தானே செய்கிறது. சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் மட்டும் இந்தக் கள்ள வேலை நடக்கும். மிகுதி நாட்கள் மட்டுநகர கல்லூரியில் விடுதி வாழ்க்கைதான்.

"எவ்வளவு நேரம் ஹொஸ்ரலிலும் இப்படியா....? யாரோ எழுப்புவது போல் ஒரு பிரமை. கண்விழிக்க முயல்கின்றேன். முடியவில்லை. தலை கனத்து வலித்தது. எழும்ப முடியாத படி உடம்பு அடித்துப் போட்டது போல் இருந்தது. மூச்சு நெருப்புப் போல் பறந்தது. புரண்டு படுத்துக் கொண்டேன். எவ்வளவு நேரம் இப்படிப் படுத்துக் கிடந்தேன். எனக்கே தெரியாது. நெற்றியிலும் வம்மிப் பூவின் நெருடல். ஒத்தடம் போல் இதமாக இருந்தது. யாரோ என்னைத் தொட்டுப் பார்ப்பதை மட்டும் என்னால் உணர முடிந்தது. அந்த வம்மிப்பூவின் ஸ்பரிசம்.

"அம்மா அவருக்குச் சரியான காய்ச்சல். என்ன செய்யிறது இப்ப குமாரண்ணன வரச் சொல்லுவமா' மெல்லிய குயிலின் குரல் வெளியே கேட்டது. "பிள்ளை மலர்....... நல்ல சூடா இந்தக் கொத்தமல்லி தண்ணிய குடு......... இது வெறும் தடிமல் காய்ச்சல்தான்...... பிறகு பார்ப்பம் நான் வட்டைக்க கொப்பாவப் பாத்து ஏதும் ஆக்கிக் குடுத்திட்டு வாறன். ' சொல்லிவிட்டு மலரின் அம்மா போவதை என் காதுகள் கிரகித்துக் கொண்டன.

"என்னமாச் சுடுது......' என் நெற்றியில் அந்த வம்மிப்பூக்கரங்கள் வருடுகின்றன. "இதக் குடியுங்க... தூக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடவா' தயங்கித் தயங்கி கோப் பையை நீட்டினாள். மெதுவாக எழுந்தேன். கட்டிலில் இருந்தேன். என் கைகளை மலர் பிடித்துக் கொண்டாள். எழுந்து நின்றேன்.மண்டப வாசல் வரை நடந்தேன். வாயலம்ப தண்ணீரை நீட்டினாள். கண்கள் அவள் கைகளை மேய்ந்தன. நான் கவிஞனாகி விட்டிருந்தேன். கட்டிலில் அமர்ந்து கொத்தமல்லித் தண்ணியை உறிஞ்சி இழுத்தேன்.

"களுக்' கென்று ஒரு சிரிப்பொலி. இதழ்களை விரித்து உதிர்ந்து நெளிந்தது. அந்நெளிவினூடே மின்னல் வெட்டியது போல் பளிச்சிட்ட பல்வரிசை, அழகுத் தேவதை என் முன்னே. மண்டூர் புலவர் சுந்தரம் பிள்ளையின் கவிதை போல் இருந்தது. பெரியதம்பிப் புலவரின் கவிதை போல் இனித்தது.

"அய்யய்யோ ....... இப்படியா உறிஞ்சிக் குடிப்பாங்க....' எனக்குக் காய்ச்சலே போன மாதிரி இருந்தது.

"உறிஞ்சிக் குடிக்காமல் எப்படிக் குடிக்கிறது' மெதுவாகக் கேட்டேன். தன் கையில் இருந்த தேநீர் கோப்பையை எடுத்துக் குடித்துக் காட்டினாள் அவள் தொண்டையினூடாக தேனீர் போவதைக் கண்டேன். மெய்மறந்து நின்றேன். இதுதான் சங்குக் கழுத்தோ? கொள்ளை அழகுக் குயிலா இவள். கோலமயில். "இது சூடானது. உறிஞ்சி இழுத்தால் காற்றும் உட்செல்லும் சூடும் குறையும்' என்றேன். என்னை விநோதமாகப் பார்த்தாள். நேருக்கு நேர் அவளது விழிகளை பார்க்க என்னால் முடியாதிருந்தது. நான் படித்துக் கொண்டிருப்பது ஆண்கள் கல்லூரி. அங்கு ஆசைக்கும் பெண்களைக் காண முடியாது. அன்னை சாரதாதேவி மட்டும் படத்தில் ஆசிர்வதித்துக் கொண்டிருப்பார்.

"அதத் தாங்க ......' என்று என் கையில் இருந்த கோப்பையை பறித்து மடக்கென்று ஒரு மிடர் குடித்தாள். "இப்ப குடியுங்க... பார்ப்பம்......' நீட்டினாள். எனக்கும் மீசை அரும்பிக் கொண்டிருக்கிறது. ஒரு மிடரை மடக் கென்று விழுங்கினேன். புரையேற நான் திணறிவிட்டேன். அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதறிவிட்டாள். என் உச்சந் தலையில் தட்டி "மருத்துவிச்சி கிணற்றில்' என்றாள். வம்மிப் பூக்கள் உச்சியில் விழுந்தது போன்ற உணர்வு எனக்காகத் துடித்த துடிப்பு மெய்சிலிர்க்க வைத்து விட்டது. குமார் என்னைத் தேடி வந்துவிட்டான். சைக்கிளைப் படலையில் சாய்த்துவிட்டு உள்ளே வந்தான்.

"குமாரண்ணன்.... இவருக்குச் சரியான காய்ச்சல். இரவு முழுக்க அனுங்கியபடி..... என்று அம்மா சொன்னவ' மலர் கூறிக் கொண்டிருந்தாள். மலர் எவ்வளவு புத்திசாலி. என்மனம் அவள் குமாருக்குக் கூறிய முறையை எண்ணி வியந்தது.

"ஆத்துல குளிக்கிறதுக்கும் ஒரு அளவுண்டு. அவர் நீச்சல் அடிக்கிறதும், தோணி ஓட்டி விளையாடுறதும்..... சொன்னால் கேட்டாத் தானே ..... நீர் கோர்த்திருக்கும். தடிமல் காய்ச்சல் தான்........... என்ன மலர் குடுத்தனி........? "அம்மா கொத்தமல்லித் தண்ணி குடுக்கச் சொன்னவ..... குடுத்தனான்'.

"காய்ச்சல் விட்டிடும்..... இரவுக்குக் பலாக்காய்......' குமாரன் கூறிக் கொண்டிருந்தான். கண் ஜாடையும் காட்டினான்.

"ஐயோ வேணாம்.... நாளைக்குப் பள்ளிக்கூடம் போக வேணும்..... அடுத்தகிழமை பார்ப்போம்......' சொல்லி வைத்தேன்.

குமாரண்ணன்....... நேற்றைக்கு பூபாலண்ணா வீட்டில இருந்த பலாக்காய் களவு போயிற்றுதாம்.......... தெரியுமோ' மலர் கூறினாள்.

"ஆர் மலர் சொன்னது'.

"பூபாலண்ணாதான்'.

"அவன் விசரன்' மெதுவாக குமாரன் சொன்னான். எனக்கு அடக்க முடியாத சிரிப்பு. சிரித்து விட்டேன். "பரவாயில்லையே....... காச்சலோட ஆள் சிரிக்குது நான் சாயந்தரம் வாறன்'. கூறிக் கொண்டு குமாரன் போய்விட்டான். இல்லை நழுவிவிட்டான். மாமி வந்து சமயலில் ஈடுபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமாவும் கூட வந்திருந்தார். மலருக்குத் தான் ஏச்சும் பேச்சும் "நம்மள நாடி ஓடி வந்த பிள்ளைய கண்டபடி அலைய விடுறதா........ உனக்கு மூளை இருக்கா........ அவன்ர அப்பா மூக்கில கோபம் வைச்சிருப்பான்' மாமா கெம்பிக் கொண்டிருந்தார். "அப்பாபூ அவருக்கு இப்ப சுகம். ஏன் சத்தம் போடுறியள்' அமைதி நிலவிக் கொண்டிருந்தது. எனது அப்பா குடும்பத்தோடு கோபித்துக் கொண்டு கிளம்பியவர் தான். திருகோணமலை யில் அம்மாவை திருமணம் முடித்துக் கொண்டார். மண்டூர் இனசனம் பற்றி எப்போதாவது சொல்வார். மட்டக்களப்பு வந்தாலும் மண்டூர் வருவதில்லை. மலர் எனது அப்பாவின் அக்காவின் மகள்தான் என்னைக் கண்டது முதல் தன் தம்பியைக் கண்ட மகிழ்ச்சி மாமிக்கு.

என் படிப்புக்காக மட்டக்களப்புக் கல்லூரியில் சேர்க்கப்பட்டேன். கல்லூரி விடுதியில் நண்பர்கள் அறிமுகத்தினால் மண்டூர் போய் உறவினர் களோடு உறவை வளர்த்துக் கொண்டேன். அப்பாவுக்கு இது பற்றி ஒன்றும் தெரியாது. நான் கூறவும் இல்லை. அடிக்கடி மண்டூர் செல்வது வழக்கமாகி விட்டிருந்தது. மலரே காரணமாகி விட்டாள். மண்டூர் வந்தால் மலரின் வீட்டில்தான் தங்குவது வழக்கம்.

பட்டாம்பூச்சிகளாகப் படபடக்கும் இமைகள், அலைபாயும் விழிகள், சிரித்தால் இசையாகும் ஒலி, நடையில் ஒரு நளினம், அன்பு ததும்பும் கனிவான பேச்சு, பார்த்தவுடன் முகத்தில் ஓடும் நாண வெள்ளம், காற்றில் நெற்றியில் தழுவித் தடவும் கூந்தலழகு, நான் விரும்பும் வம்மி மலர், எந்த நிறத்தில் பாவாடை, தாவணி போட்டாலும் அந்த நிறம் மலருக்குப் பொருந்தும். என் உள்ளத்தில் உலா வந்தாள். அவளே எல்லாமாகத் தெரிந்தாள். எனது கற்பனை ஆகாயத்தில் ஊஞ்சல் கட்டி ஆடியது.

இளமைக் காலம் எத்தனை அற்புதமானது. விதம் விதமாகக் கற்பனைகள். அவற்றை அனுபவிப்பதில் காணும் ஆனந்தம் அழகான மனதிற்கினிய மங்கையும் பக்கமிருந்தால்............ அது ஒரு தனி உலகம். மண்டூர் முருகன் ஆலய உற்சவகாலம் உள்ளங்களை பக்தியிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தும். மண்டூர் பிட்டும், அந்தக் கீரைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறியும், ஆசையை ஊட்டும், மங்கிய இருள் கலந்த வெளியில் தனித்திருந்து பிட்டையும் கீரைக் கறியையும் பிசைந்து ஆளுக்காள் ஊட்டி உண்டு மகிழ்ந்தது இன்றும் இனிக்கிறது.

திருவிழாவின் போது, கண்ஜாடை காட்டி, வெளியேறி களவாக சோடி சேர்ந்து கடைகளைச் சுற்றிச் சுற்றிப் பார்த்து கதையளப்பதில்தான் எத்தனை சுகம். ஆளையாள் உரசிக் கொண்டும் கைகோர்த்துக் கொண்டும் செல்வதில் கிடைத்த இன்பம் கோடி. திருவிழா முடிந்து, தீர்த்தக் கரையில் முருகன் தீர்த்தமாடி கோயில் வலம் வந்து வள்ளி, தெய்வயானை கோயில்களின் முன்னே முருகனுக்கு ஏழு சிறுமியர்கள் தீபம் காட்டி, மயங்க அவர்களைத் தாங்கி, வள்ளி அம்மன் கோயிலில் வளர்த்திவிட, பின்னர் அச்சிறுமியர் மயக்கம் நீங்கி வந்து கலந்து கொள்ளும் காட்சியும் மிக அற்புதமானது. முருகனை வழிபட்டுக் கொண்டே மலர் எனக்கு இவற்றைக் காண்பித்து அந்த அற்புதங்களை விளக்கும் போது எனக்கும் ஒரு பக்தி தோன்றும். மெய் சிலிர்த்து, ரோமக்கால் குத்தி நிற்கும்.

வெண்குருமணல் கதிரவனின் வெப்பத்தால் தகித்துக் கொண்டிருந் தது. வம்மி மரத்தினடியில் சுகப்பட்ட கூட்டம். மலரின் கையைப் பற்றி கூட்டத்தின் நடுவில் புகுந்து கொண்டோம். எல்லோர் மனமும் பார்வையும் முருகனில் லயித்திருந்தன. வம்மிப்பூவொன்று என் மேல் விழுந்து கீழ் செல்ல முடியாது தங்கிக் கொண்டது. அதனைக் கையிலெடுத்துத் தடவி முகர்ந்து பார்த்தேன். மலர் பக்கத்தே நின்றிருந்தாள் வம்மிப்பூவையும், மலரது உள்ளங்கை விரல்களையும் தொட்டுப் பார்த்து மனதுள் ரசித்துக் கொண்டேன். "இரண்டும் மலர்தான்'என்றேன். அவள் சிவந்து போனாள்.

வானவில்லின் வர்ண ஜாலம் அவள் முகத்தில் கண்டேன். எண்ணங் கள் யாவும் மலராகவே இருந்தது. நான் கல்லூரிக்குப் புறப்படத் தயாரா னேன். "நன்றாகப் படித்து சித்தியடையுங்கள்' வாழ்த்தி அனுப்பினாள். கல்லூரிப் பாடங்களில், எழுத்துக்களில் மலரே நிறைந்திருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று வகுப்பாசிரியர் என் பின்னால் வகுப்பில் வந்து நின்றது கூடத் தெரியாமல் சிந்தித்துக் கொண்டிருந்தேன். மிகவும் கண்டிப்பான அந்த ஆசிரியர். அன்பாகத் தட்டிக் கொடுத்தார். "யூ ஆர் ஏ கிளவர் ..'.போய்' என் எதிர்பார்ப்புக்கள் நிறையவே உண்டு. என்னை ஏமாற்றி விடாதே? ஆங்கிலத்தில் அழகாகச் சொன்னார். "உன்னை நம்பி உன் அப்பா, குடும்பம், உன் சொந்த ஊர் காத்திருக்கு உணர்ந்து கொள்' சொல்லி முதுகில் தட்டிக் கொடுத்து விட்டுப் போய்க் கொண்டிருந்தார்.

பாடங்களில் கவனம் குறைந்து செல்வதையும் பரீட்சைப் புள்ளி களையும் சுட்டிக் காட்டியிருந்தார். அந்த ஆசிரியர் சொன்னவைகளைத் தாரக மந்திரமாகக் கொண்டு சிந்தித்தேன்.

"யூ ஆர் ஏ கிளவர் ஸ்ருடன்ற், டோன்ற் பிற்றே மீ" காதுகளில் ஒலித்து உள்ளத்தை ஊடறுத்து கல்லாய் உறைந்து விட்டது. எனது தாய் தந்தை எனக்காகப்படும் துயரங்கள் பூதாகரமாக உருவெடுத்திருந்தது. எனக்கு ஞானப்பால் கிடைத்துவிட்டது. முதலில் படிப்பு. நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்.

மண்டூரில் மலரின் வீடு சிறியதுதான். "பாரதி காணி நிலம் வேண்டும்' பாடலில் கூறியதற்கு ஏற்ப அமைந்திருந்தது. இளந் தென்னைகள், கீற்றும் இள நீருமாக, அந்தக் கீற்றிடையே நிலவொளிசிந்தி வந்து மலரைத் தழுவிக் கொண்டிருந்தது. நிலவொளியில் மலர் ஜொலித்துக் கொண்டிருந்தாள். படிப்புப் பற்றியும், பரீட்சை பற்றியும் கடமைகளை பற்றியும் சொல்லிக் கொண்டிருந்தேன். அவள் ஆடிப் போயிருந்தாள்.' தம்பி சொல்றது சரிதான் மகள். முதலில் படிப்பு. அது முடியட்டும். கிணத்துத் தண்ணி ய வெள்ளம் ஒருக்காலும் கொண்டு போகா' மாமா எனக்காகவும் மலருக்காகவும் பரிந்து பேசியது எனக்குத் தென்பாக இருந்தது. மலரின் கண்கள் பொல பொலத்தன. அவள் மனம் சங்கடப்பட்டுக் கொண்டிருந்ததைக் கவனித்தேன். ஆசிரியர் கூறிய அறிவுரைகளை அப்படியே ஒப்புவித்தேன்.

"அப்பா என்னை நம்பியிருக்கிறார். நான் பரீட்சையில் சித்தியடை வேன். சில கடமைகள் இருக்கின்றன. நீ எனக்குச் சொந்தமானவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உன்னையே நினைத்துக் கொண்டிருந்தால் பரீட்சை என்னை ஒதுக்கி விடும். உனக்கும் எனக்கும் கெட்ட பெயர் வரும். கூறி முடிக்கு முன்னே என்னைக் கட்டிக் கொண்டு கேவி அழத் தொடங்கிவிட்டாள். எனக்கு எங்கிருந்து இந்த மனத் தைரியம் வந்தது? எனக்கே வியப்பாக இருந்தது. "மலர் எனக்காகக் காத்திரு. ..... நான் உனக்காக வருவேன்.....' எனக்கும் சற்றுத் தடுமாற்றம்தான் ஆனால் எதற்காகவோ யாருக்காகவோ அவள் பயப்படுகிறாள் என்பதை என் மனதின் ஒரு மூலையில் ஏதோ ஒன்று உறுத் திக் கொண்டிருப்பதை உணர்ந்து கொண்டேன். "மலர் என்ன சொல் கிறாய்? மெதுவாகக் கேட்டேன். "நீங்கள் சொல்கிறது சரி..... நீங்க..... பரீட்சையில் சித்தியடைவீங்க...... அடிக்கடி ..... எழுதுங்க ' கூறிக் கொண்டு சிணுங்கினாள். அவள் மனதும் ஒப்புக் கொண்டது. எனக்குப் பெரிய நிம்மதி. மண்டூர் துறை வரைக்கும் வந்து தோணியில் வழி அனுப்பி வைத்தாள். தோணி புறப்பட்டது. தோணியின் துடுப்புக்களைப் பற்றி இழுத்தேன். மலரின் உருவம் தண்ணீரில் தளர்ந்து மறைந்து கொண்டிருந்தது. கண்ணுக்கெட்டிய தூரம்வரை கையசைத்துவிட்டுச் செல்வது தெரிந்தது. பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது. வகுப்பாசிரியர் பாராட்டத் தொடங்கி பரீட்சை முடிவுற்றதும் "யூ ஆர் கிறேற்' வாழ்த்தி விட்டு வழியனுப்பி வைத்தார். வீட்டில் அப்பா படுத்த படுக்கையாகி விட்டார். சுமைதாங்கியாகி விட்டேன். எனக்குள்ளேயே அழுதேன்.


அப்பா அமரராகிய பின் வாழ்க்கையின் கொடுமைகளைப் புரிந்து கொள்ள ஆயத்தமானேன்.எத்தனை கடிதங்கள் எழுதினேன். தபாற் காரனை வழிமேல் விழி வைத்து ஏமாந்தேன். கடமைகள் சுமையாகி அழுத்தும் போது முட்டாக நிமிர்ந்தேன். காலம் யாருக்காகவும் காத்திருப்ப தில்லை.

எனக்கு அவள் அனுப்பும் கடிதங்களோ அவளுக்கு நான் அனுப்பும் கடிதங்களோ இருவர் கைகளுக்கும் கிடைக்கவே இல்லை. இடையில் இருந்து நாதன் நடத்திய நாடகத்தினாற்தான் எங்கள் கனவுகள் குலைந்தன என்பதை நாதன் மலரைத் திருமணம் செய்து பல வருடங் களின் பின்புதான் தெரிந்து கொண்டேன். இன்றும் நான் ஏமாற்றியதாகவே மலர் நினைத்துக் கொண்டிருக்கிறாள். அந்த வம்மிப்பூ இன்னும் என் இதயத்தை வருடிக் கொண்டே இருக்கிறது.

*நன்றி - தினக்கதிர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அண்ணன்

எனக்கு விசர் பிடித்து விட்டதா? என்னையே நான் கிள்ளிப் பார்க்கிறேன். என் விழிகள் இரண்டும் அண்ணனின் பூதவுடல் மேல் நிலை குத்துகின்றன. அந்தக் களங்கமில்லாத முகத்திலும், சிவந்த கன்னத்திலும் அந்தத் தீக்காய வடு. என் இதயத்தைப் பிழிந்து ரணவேதனை யைத் தருகின்றது. அந்த அதிர்ச்சியிலிருந்து என்னால் மீள முடியவில்லை. ஓலைச் செத்தையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, அப்படியே என் கால்களை மடித்து, நெற்றியை அழுத்திப் பிடித்துக் கொண்டு, குலுங்கிக் குலுங்கி அழுகின்றேன்.

மழை கொட்டி எங்கும் சேறும் சகதியுமாகக் கிடக்கிறது. வானம் இருண்டு அழுது கொண்டு இருக்கிறது. இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரமான கற்கள் மேல் பலகை வைக்கப்பட்டு, அதன் மேல் அண்ணன் நீட்டி நிமிர்ந்து மீளாத் துயிலில் ஆழ்ந்துவிட்டான். தலைமாட்டிலும், கால்மாட்டிலும் இரண்டு சின்னக் குத்துவிளக்குகள். குடிசையில் புகுந்து விளையாடும் காற்றில் தாக்குப் பிடிக்க முடியாது, சுழன்று சுழன்று மங்கி எரிந்து கொண்டிருக்கின்றன.

'தம்பி வா.... வா கெதியா'

அந்த அவசர அழைப்பு என் காதுகளில் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. எதெற்கெடுத்தாலும் அந்த அவசரம் அண்ணனுக்குச் சொந்தமானது. என் உள்ளமெங்கும் ஏகாந்தமாய் நிறைந்து அண்ணன் தெரிகிறான். அண்ணனின் மாம்பழ நிற மேனியும், அதற்கேற்ற சுருண்ட தலைமுடியும் ஒரு இளவரசனின் தோற்றமும் அண்ணனுக்கு ஒரு மதிப்பை எங்கள் ஊரில் ஏற்படுத்தி விட்டிருந்ததில் வியப்பேதும் இல்லை. அவன் எங்கள் தாத்தாவின் வாரிசாகவே மதிக்கப்பட்டான்.

பாடசாலைக்குப் போகும்போது என்னையும் இழுத்துக் கொண்டு ஓடுவதும் பாடசாலை விட்டதும் ஊருக்கு வெளியேயுள்ள வயல் நிலங்களில் எங்கள் பசுமாடுகளைத் தேடி, கலைத்து பட்டியில் அடைப்பதும், தாத்தாவோடு தோட்டத்துப் பயிர்களுக்குத் தண்ணீர் ஊற்று வதுமாகப் படு சுறுசுறுப்பாக இயங்குவான். குப்பிலாம்பு வெளிச்சத்தில் பனையோலைப் பாயை விரித்து, பாலபோதினிப் புத்தகத்தை விரித்துப் படிப்பான். கொப்பியை விரித்து மையைத் தொட்டு ஜீ' முனைப் பேனாவால் குனிந்திருந்து அச்சுப் போல் எழுதுவதற்கு அண்ணனுக்கு நிகர் அண்ணன் தான். என் தலையை நிமிர்த்திப் பார்க்கின்றேன். அண்ணி முழங்காலில் தலையைப் புதைத்து விம்மிக் கொண்டிருக்கிறார். மூன்று பிள்ளைகளும் சுற்றிவரத் துவண்டு கிடக்கிறார்கள்.

அந்த அகதி முகாமுக்குள் சின்னச் சின்னக் குடிசைகள். படுக்கையறை, பண்ட அறை, சமயல் அறை, மண்டபம் எல்லாமே அந்தக் குடிசைதான். எப்படி இருந்து வாழ்ந்த அண்ணன் இப்படி...... இந்த... அகதி முகாம்..... குடிசையில்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இதயம் சுக்குநூறாகிறது.

'தம்பி..... கந்தசாமி... அந்தச் சனம் வந்திருக்கு.... ஏதாவது குடுத்து அனுப்பு'. தாத்தாவின் குரல் தோட்டத்துக்குள் இருந்து ஒலிக்கிறது. அண்ணன் நெல்லுப் பட்டறையைப் பிரித்து தாத்தா சொன்னதற்கு மேலதிகமாகக் கொடுப்பதைக் கண்டிருக்கிறேன்.

'தாத்தா... அண்ணன்..... வந்த.... ஆக்களுக்கு கனக்க அள்ளிக் குடுக்கிறான'. என் குரல் ஓங்கி ஒலிக்கும்.

'எல்லாம்.... அவனுக்குத் தெரியும்....நீ பேசாமல் வாயமூடு.....' தாத்தாவின் பதில் கேட்கும்.

பொழுது இருட்டிவிட்டதும் பசுமாடுகள் வீட்டுப்பட்டிக்கு வரவில்லை என்றால் அண்ணன் இருப்புக் கொள்ளமாட்டான். எப்பாடு பட்டாவது அவற்றைத் தேடிக் கொண்டு வந்து விடுவான். தாத்தாவுக்கு அண்ணன் மேல் பிரியம் அதிகம். இரவு உணவின் பின் பெரிய கணக்கு வழக்கு நடக்கும். கேட்பதற்கு முஸ்பாத்தியாக இருக்கும் எப்போதும் கலகலத்துக் கொண்டிருக்கும் எங்கள் வீடு மிகவும் அழகானது.

தெரு, இரு பக்கமும் தோட்டமும் துரவும். இடையே பசுமாடு களின் பட்டி. பின்னால் நெல் வயல்.

இப்போது அந்த வீடும்.... ஊரும்.... எங்கே...? சலனமற்றுப் படுத்திருக்கும் அண்ணனைப் பார்த்திருக்கிறேன். விம்மல் வந்து நெஞ்சை அழுத்துகிறது. அப்படியே அண்ணன் எழுந்து வந்தால்....? பேதலித்து எதையெல்லாமோ மனம் எண்ணி அலை மோதுகிறது.

'தம்பி.... என்னால்தான் படிக்க முடியாது போய்விட்டது. நீயாவது படித்து முன்னுக்கு வந்து ஊருக்குச் சேவை செய்ய வேணும். போ... போய்... படி' அன்று அண்ணன் கூறியது இன்று போல் தெரிகிறது. அண்ணன் ஐந்தாம் வகுப்போடு பள்ளிப் படிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டான். அவன் நல்லாகப் பாடுவான். அன்னையும் தந்தையும் தானே பாரில்.... என்று தியாகராஜ பாகவதர் போல் பாடினான் என்றால் தாத்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல எல்லாருமே கிறுகிறுத்துப் போவார்கள். தாமோதரம் அண்ணா வியார் அண்ணனை இழுத்துத் தன் சாரங்கதாரா நாடகத்தில நடிக்க வைத்துவிட்டார். சித்தியின் சொற்கேட்டு அரசன் தன் மகன் சாரங்க தாராவுக்கு மரண தண்டனை விதித்து விடுகிறார். அப்போது சாரங்கதாரா வேடத்தில் வரும் அண்ணன் சோகமாகப் பாடி வரும் காட்சியில் நான் தாங்க முடியாது அழுதுவிடுகிறேன். என்னைச் சமாதானப்படுத்த அண்ணன் பட்டபாடு அவனுக்குத்தான் தெரியும். அந்த அரச உடுப்பில் அண்ணனின் எடுப்பு மிகப் பிரமாதம். ஆச்சி அண்ணனை தன் இறக்கைக் குள் வைத்துத்தான் காப்பாற்றி வளர்த்தாள். இன்று ஆச்சியும் தாத்தாவும் உயிரோடு இருந்திருந்தால்......'.

'அண்ணா....' வீரிட்டு அழ வேண்டும் போல் அழுகை பொத்துக் கொண்டு வருகிறது. மங்கிய விளக்கொளியில் அண்ணனின் முகம் மட்டும் தெரிகிறது. எல்லாம் கனவு போல் தெரிகிறது. தாத்தா நினைவுக்கு வருகிறார்.

'தம்பி.... கந்தசாமி..... எங்கட இசமரிட்டச் சொல்லி இருக்கிறன்... சீனடி.... சிலம்படி எல்லாம் பழகிக் கொள்.... சரியா...'தாத்தா சொல்கிறார்.

'எனக்கெதுக்குத் தாத்தா இதெல்லாம்.... எனக்கேலாது.....' அண்ணன் பதில் சொல்கிறான்.

'தம்பி எல்லா ஆம்பிளையளைப் போல... நீயும் இதெல்லாம் பழகியிருக்க வேணும்....' தாத்தா கூறுகிறார்.

'தாத்தா... நான்.... யாரோடையும்... சண்டைக்குப் போகமாட்டன் எனக்கு இதெல்லாம் தேவையில்லை' அண்ணன் பிடிவாதம் பிடிக்கிறான்.

'தாத்தா சொல்லுறதைக் கேள்..... தேர்த்திருவிழாக் காலத்தில... சாமி வீதியுலா வரக்குள்ள.... எத்தன.... இளந்தாரிமார்.... சீனடி..... சிலம்படி... செய்து காட்டுறாங்க.... நீயும் செய்யிறதை நான் பார்க்க வேணும்.' தாத்தாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புக் கட்டளை அது. அண்ணன் ஆடத் தொடங்கி விடுகிறான். ஒரு வளர்பிறை நாளில் இசமர் பாடத்தைத் தொடங்கியும் விட்டார். இசமர் என்பது வைரமுத்துவின் பட்டப்பெயர். சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் இயமனாகத் திறமையாக நடித்ததால் அவருக்கு இசமர் என்ற பெயரே நிலைத்து விட்டது. அரங்கேற்றத்தின் போது அண்ணன் குனிந்து, நிமிர்ந்து, சுழன்று, காலை உயர்த்தி மடித்து உதைத்துப் பம்பரம் போல் சீனடி, சிலம்படி என்னமாய் செய்தான். தாத்தா மிரமித்து விட்டார். ஆச்சி அண்ணனை இழுத்துப் போய், அவனது காலடி மண், வேப்பிலை, செத்தல் மிளகாய், உப்புக்கல் இன்னும் ஏதோவெல் லாம் சேகரித்து, அண்ணனின் எச்சிலையும் சேர்த்து அடுப்பில் எரித்து கண்ணூறு கழித்தது காட்சியாக வந்து மனதைக் குடைகிறது. அண்ணன் செயல்கள் அனைத்தும் ஒடுங்கிய நிலையில் சடலமாக நீள் துயில் கொள்கிறான். எனக்கு இருப்புக் கொள்ள முடியாது தவித்து எழுந்து மீண்டும் அப்படியே குந்திவிடுகிறேன். கண்களை மூடி மௌனிக்கிறேன்.

தென்னையும், பலாவும், மா, வாழைத் தோட்டமுமாக நிறைந்து கிடந்த இடமெல்லாம் பாழாய்ப் பழங்கதையாய் கனவாய்ப் போய்விட்டன. தென்னைகளின் வட்டுக்கள் தெறிக்கின்றன. ஷெல் வந்து விழுந்து வெடிக்கின்றன. வீடுகள் கண்முன்னால் நொருங்கித் தெறிக்கின்றன. போட்டது போட்டபடி கிடக்கக் கோயிலுக்குள் சனங்கள் தஞ்சமடைகின்றனர். சற்று நேரத்திற்கெல்லாம் அரச படையினரின் அட்டகாசம். வீடுகளில் யாரும் இருக்கவில்லை.

வீடு, வீடாகத் தேடுதல் வேட்டை. தேடியவர்களுக்குத் தேடியது வீட்டில் கிடைத்ததால் பலருக்குக் கொண்டாட்டம். வெய்யிலில் சனங்கள். மரநிழலில் அரச படையினர். ஆண்கள், பெண்கள், இளமட்டங்கள் என வேறாக்கப்படுகிறார்கள். விசாரணை என்ற பெயரில் சித்திரவதை. தெரியாத மொழியில் கேள்விகள். நான் வெகு தூரத்தில் வெளியில் நிற்கின்றேன். அண்ணன் வரிசையில் வந்து கொண்டிருக்கின்றான். என்ன கேட்டார்களோ தெரியாது. அண்ணனைப் போல் பல இளவட்டங்கள். அவர்களது கை, கால்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிக்கப்படுகின்றன. ஏன் இப்படிப் படையினர் செய்கிறார்கள் என்பது புரியவில்லை. அந்த இளவட்டங்களைப் பந்தாடு கின்றனர். அப்பாவித் தமிழ்க் கிராமங்களில் புகுந்து அட்டகாசங்கள் செய்வது சரியா...? அண்ணனைப் பல பேர் புகுந்து சூழ்ந்து தாக்குகிறார்கள். சுருண்டு கீழே விழுந்து எழுகின்றான். அண்ணனின் கடைவாயிலிருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்கிறது.

'அண்ணா'

வீரிட்டு வந்த அந்த அழுகையை அடக்கி என்னைச் சுதாகரித்துக் கொண்டு அந்த மெல்லிய இருளில் அண்ணனின் முகத்தைப் பார்க்கின் றேன். 'அண்ணா நீ எப்படித் தாங்கிக் கொண்டாய்...?' அண்ணன் வலிகாணாத உலகிற்குப் போய்விட்டான். உடல் அசையவில்லை. காற் பெருவிரல்களை இணைத்துச் சிறு துணியால் கட்டி இருந்தனர். இரு கைகளையும் நெஞ்சின் மேல் வைத்துப் பூவையும் பிடித்தபடி அண்ணன் படுத்திருக்கின்றான். நான் அண்ணனின் முகத்தை மீண்டும் மீண்டும் பார்க்கின்றேன். என் கண்களில் நீர் வற்றிவிட்ட பிரமை. அவன் காலடியில் குந்துகின்றேன். என் விலா எலும்புகள் எவ்வி, விரிந்து குலுங்குகின்றன. அதே காட்சி உதயமாகின்றது.

அண்ணனைச் சிப்பாய்கள் இறுக்கிப் பிடிக்கிறார்கள். காட்டு மிராண்டி போல் ஒருவன் வருகின்றான். சிகரட் புகையை இழுத்து அண்ணனின் முகத்தில் ஊதுகிறான். சிகரட் தணலால் கன்னத்தில் வைத்துத் தீய்க்கிறான். அண்ணன் துடிதுடித்து அலறுகிறான். அந்தத் தீக் காயத் தழும்பைப் பார்க்கிறேன்.

'தம்பி... கிராமத்தில் தமிழனாய்ப் பிறந்தவர்களுக்கு இந்த அரசு தரும் பரிசு.... இந்த அடையாளம். அடிபட்டு.... குதறப்பட்டு.... அழிவதும் கிராமத்துச் சனங்கள்தான்...... நீயும் இந்தச் சனங்களையும் கூட்டிக் கொண்டு பட்டணத்துப் பக்கம் போய் வாழப் பார்...'அண்ணன் அறிவுரை கூறுவது போல் ஒரு சலனம். அண்ணனின் சலனமற்ற முகத்தை, தோளை, கைகளை வாஞ்சையோடு விரல்களால் தடவி ஸ்பரிசித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதறுகின்றேன்.

தொண்ணூறில் வெடித்த இனக்கலவரத்தினால் தமிழ்க் கிராமங்கள் சுடுகாடாகின்றன. இளைஞர்கள் காணாமற் போய்விடுகிறார்கள். ஆலங் கேணிக் கிராமத்தை நோக்கி அகதிகளாக வந்து கொண்டிருக்கிறார்கள். அண்ணன் தனது நண்பர்களோடு அவர்களுக்கு ஆறுதல் அளித்து வசதிகள் செய்கின்றான். தாத்தாவைப் போல் என்னமாய் உதவிகள் செய்கின்றான். இப்போது நாலா பக்கமிருந்தும் ஷெல்கள் விழுந்து வெடிக்கின்றன. ஹெலி வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டிருக்கின்றது. எங்கும் இடி ஓசை முழக்கம் அதிர்ந்து கொண்டிருக்கிறது.

ஹெலியில் இருந்து வந்த துப்பாக்கி ரவை யன்னல் கம்பியை உருக்கித் தீய்த்து, வெள்ளிக் கிண்ணத்தையும் துளைத்து அதனுள் இருந்த இடியப்பத்துக்குள் பதுங்கியிருந்தது. எல்லோருக்கும் பயப்பீதி தலை தூக்கிவிட்டிருந்தது. ஊரைவிட்டுப் பின்புறமாகச் சனங்கள் தலைதெறிக்க ஓடுகிறார்கள். அகதியாக வந்தவர்களும் ஓடுகிறார்கள். அம்மாவையும், அண்ணி பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு அண்ணன். ஓடுகிறான். பெரிய மரங்களுக்குக் கீழ் பதுங்குவதும் பின் ஓடுவதுமாகக் காடுகளை நோக்கி ஓடுகிறார்கள்.

ஹெலியொன்று வட்டமிடுகிறது. பரந்த வயல்வெளி. ஊர்சனங் களின் மாடு, கன்றுகள் வெருண்டு அலறி கூடி ஓடித் திரிகின்றன. வான வீதியில் வெள்ளிகளாக மின்னி வட்டமிட்டு, மேலே உயரத்தில் எழும்பி தலைக்குத்தாக அந்தப் புக்காரா கீழே வந்து நிமிர்ந்ததுதான் தெரியும். இடி அதிர்ந்து, காதுகள் வெடித்தது போல் முழக்கம். அப்படியே நிலத்தில் எல்லோரும் கிடக்கிறார்கள். பெரிய மயான அமைதி. ஒருவருக்கும் ஒன்றும் நடக்கவில்லை. அண்ணன் எழுந்து ஓடுகிறான். மாடு, கன்றுகளின் தசை,உறுப்புக்கள் சிதறித் துடிக்கின்றன. உயிர் தப்பியவை வெருண்டு ஓடுகின்றன. அண்ணன் விழுந்து கிடந்து கதறுகின்றான்.

காடுகளில் சனங்கள். பசியோடு தவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரெங்கும் அரச படைகள். அண்ணன் சனங்களை ஒன்று சேர்த்து ஊருக்குள் கூட்டி வருகின் றான். ஊருக்குள் வந்தவர்களை லொறிகளில் ஏற்றி அந்தப் பெரிய அகதி முகாமில் விடுகிறார்கள். சின்னச் சின்னக் கொட்டில்கள் அமைத்து அதற்குள் வாழ்க்கை. அகதிகளோடு அண்ணனும் தட்டோடும், பசளைப் பையோடும் உணவுக்காகக் கையேந்தி நிற்கிறான். பம்பரமாகச் சுழன்று, சுதந்திரமாக, வசதியாக வாழ்ந்த அண்ணனும், ஏனைய தமிழ் மக்களும் குறுகிய காலத்துக்துள் எல்லாம் இழந்து, பிறந்து வாழ்ந்த ஊரையும், உடைமைகள், சொத்துக்கள், யாவையும் இழந்து அகதியாக, அகதி முகாமில் தஞ்ச வாழ்க்கை. இறுதி ஊர்வலமே இல்லாது எங்கோ மண்ணுள் சங்கமமாகப் போகின்றான்.

'தம்பி.... இது.... நமது மண். இந்த மண் நம்மைக் கைவிடாது. நமது உழவுத் தொழில் எல்லோர்க்கும் உயிர் கொடுப்பது. தாத்தாவைப் போல் உழைத்து ஏழை எளியதுகளுக்குக் கொடுத்து வாழவேணும். நாம் போகும் போது ஒன்றும் கொண்டு போவதில்லை. இந்த உலகத்தில் உழைப்பால் பெற்ற பலனை, எல்லோருக்கும் கொடுத்து வாழ்வதுதான் இன்பம். எதையும் இழந்தால் அதற்காகக் கவலைப்படக் கூடாது.' அண்ணன் எனக்கு கீதோபதேசம் செய்தது நினைவுக்கு வருகிறது. நான் வெறும் பாடப் புத்தகத்தை மட்டும் நெட்டுருப் பண்ணி, படித்து, பரீட்சை எழுதியதும், அதனையும் மறந்துவிட்டேன். அண்ணன் அன்று சொன்னவை எவ்வளவு உண்மை. இடையில் பெற்ற சுகங்களை இடையிலேயே விட்டு விட்டு, சலனமற்று அண்ணன் படுத்திருக்கிறான். விடிந்ததும் அகதிகள் கூடி, இரண்டு மூன்று தடிகளைக் கொண்டு பாடைகட்டி, அகதிமுகாமுக்கு வெளியே குழி தோண்டி, மண்ணுள் அண்ணனை வைத்து மணலால் மூடி..... என்நெஞ்சு வெடித்து விடும் போல் மயக்கம் வருகிறது. இந்த அவல நிலைக்கு யார் காரணம்....? விம்மி.... விம்மி அழுகிறேன்..... யார்... காரணம்...? விடை தெரியாது திக்குமுக்காடுகிறேன்.

*நன்றி - தினக்கதிர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கஸ்தூரி

சரியாக ஏழு மணிக்கு பருத்தித்துறை செல்லும் தனியார் பேருந்து புறப்படும். ஆனந்தன் அவசர அவசரமாகக் கிண்ணியாத் துறையை அடைகின்றான். துறையைக் கடக்கும் இயந்திரப்படகு புறப்பட்டு விட்டது. அலுத்துக் கொண்டான்.

"சே..... விட்டு விட்டேனே..... ' மனதுக்குள் சொல்லிக் கொண்டவன் கண்களில் தோணி வந்து நின்றது தெரிந்தது. தோணியில் தொற்றிக் கொண்டான். தோணி மறுகரையை தொடுமுன் திருகோணமலை செல்லும் பேருந்தும் புறப்பட்டுவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சே...... ஆர் முகத்தில் முளிச்சேனோ' நினைத்த செயல் நிறைவேறாது போனால் இந்த மனம் எவ்வளவு மூடநம்பிக்கைகளைத் தேடிப்பிடித்து, தகுந்தாற்போல் பொருத்தி விடுகிறது. பேருந்தும் போய்விட்டது. அடுத்து வந்த தட்டி வேனில் ஏறி திருகோணமலை வந்து விட்டான்.

பருத்தித்துறை செல்ல இ.போ.ச. பேருந்து காத்திருந்தது. ஏழு முப்பதுக்குப் புறப்படும். வவுனியாவுக்கு ஒன்பது முப்பதுக்குச் சென்று விடும். பரவாயில்லை பத்து மணிக்குத் தானே கூட்டம். சமாளிக்கலாம். தனக்குத்தானே ஆசுவதப்படுத்திக் கொண்டான். பக்கத்துத் தேநீர்க் கடையில் ஒரு வடையையும் கடித்து சுடச்சுடப் பால்தேநீரையும் உறிஞ்சி ருசித்துக் குடித்துக் கொண்டு நாட்காட்டியைப் பார்த்தான். அது ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்து மூன்று ஜுன் ஐந்து எனக் காட்டிற்று.

பேருந்து புறப்படத் தயாராயிற்று. நடுவில் உள்ள சீற்றில் இடம் கிடைத்துவிட்டது. பக்கத்து சீற்றில் நண்பன் கணேசலிங்கம். பேருந்து புறப்பட்டு திருகோணமலை நகரைத் தாண்டி மட்டிக்களி வீதியில் செல்லும் போது சுளீர் எனப் பாய்ந்து வந்த உப்புக் காற்றின் உரசலினால் புத்துயிர்ப்புப் பெற்றான். பேருந்து அனுராதபுரச் சந்தியில் தரித்து பயணிகளை ஏற்றிக் கொண்டு மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தது. கன்னியா வழியில் சிலிர்த்துக் கொண்டிருந்தது. காலையில் வெந்நீர்க் கிணற்றில் நீராடி வீட்டுச் செல்லும் கூட்டம் திருகோணமலை நகருக்குப் போகக் காத்திருந்தது.

ஆனந்தனின் பார்வை வெந்நீர் ஊற்றுக்கள் உள்ள திசையை நோட்டம் விட்டன. கிணறுகளின் அளவு ஒவ்வொரு கிணறும் ஒவ்வொரு வெப்பநிலையைக் காட்டும் தன்மை மனத்திரையில் வந்து போயின. "வெள்ளைக்காரன் காலத்தில் இந்தக் கிணற்றுக்குள் முட்டை அவித்தவங் கள் அதனால்தான் முந்தியப் போல சூடு இல்லை'. ஆச்சிக்கிழவி சொன்னதை அசை போட்டுப் பார்த்தான். கன்னியா வெந்நீரூற்றக்கள் பற்றிய கதைகள் மனக்கண் முன் வந்து போயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் தன் தாயின் அந்தியேட்டிக்காக சங்கரன் கொடுத்த வாளால் அருகருகே ஏழு இடங்களில் நிலத்தில் குத்தினானாம். அவனது ஆத்திரத்தின் தன்மைக்கேற்ப வெந்நீரூற்றுக்கள் உருவாகின என்பது ஐதீகம். ஆனந்தன் கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டான்.

பேருந்து மொறவெவ எனும் முதலிக்குளத்தைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தது. வயல்வெளி பரந்து பச்சைப்பசேல் என்று கண்ணுக்குக் குளிர்ச்சியாகத் தென்பட்டது. தமிழ்க் கிராமங்கள் திட்டமிட்ட குடியேற்றத் தினால் பேரினவாதக் கிராமங்களாகிக் கொண்டிருந்தன.

இளங்காற்று குடலைப் பருவத்து வேளாண்மையை வருடி அசைத்து ஒரு நறுமணத்தையும் சேர்த்து பேருந்தில் பரவவிட்டிருந்தது. சாடையாகக் கண்களில் இமைகள் ஒன்றோடொன்று காதல் பேசின. தலை மெதுவாக முன்னோக்கிச் சரிந்து நிமிர்ந்து கொண்டது.

பச்சைக் கம்பளத்தினூடாக கரியதார் வீதி வளைந்து சென்றது. ஒவ்வொரு வளைவிலும் பயணிகளிடையே ஒரு உரைசல். திருகோண மலை வவுனியா வீதி மருதமும் குறிஞ்சியும் இரண்டறக் கலந்த நிலத்தி னூடாக சிறுவர்கள் சுலிபால் கீறிய கோடு போல் உயர்ந்தும் பதிந்தும் வளைந்தும் படுத்திருந்தது.

பல குளங்களைக் கொண்ட தமிழர் பாரம்பரிய பிரதேசங்கள் நீர்ப் பாசனத்திட்டமும் குடியேற்றத் திட்டமும் என பெரும்பான்மை மக்களின் புகலிடமாக்கப்பட்டுக் கொண்டிருந்தது. குடியேற்றத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தும் போது மூவின மக்களையும் சேர்த்துக் கொண்டது. ஒரு கண்துடைப்பு. சில நேரங்களில் இனக்கலவரங்கள் தூண்டப்படும் போது தமிழர்கள் விரட்டியடிக்கப்படுவதும் உடைமைகள் சூறையாடப் படுவதும் தொடர்கதை.

ஆனிமாத வெயில் வெப்பத்தை விசிறிக் கொண்டிருந்தது. ஏறு வெயிலிலும் மனித மூடைகளின் வெப்பக்காற்றும் ஒரு புழுக்கத்தை இறுக்கிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு மயிர்க்காலிலிருந்தும் வியர்வை ஊற்றெடுத்து மெலிதாகக் கிளம்ப ஆயத்தம். பேருந்தின் யன்னல் வழி யாக வேகமாகப் புகும் காற்று இங்கிதத்தை ஏற்படுத்தத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களை மூடியபடி ஆனந்தன் சிந்தனையில் ஆழ்ந்தான். பேருந்து ஒரு வளைவில் திரும்பி ஓடித் திடீரென நின்றது. பேருந்தில் பரபரப்பு. பயப் பிராந்தி. தூரத்தே அவன் ஏழு மணிக்குச் செல்லவிருந்த தனியார் பேருந்து சுவாலை விட்டு எரிந்து கொண்டிருந்தது. காயத்துடன் சிலர் அவலக்குரல் எழுப்பி ஓடி வந்து கொண்டிருந்தனர். துப்பாக்கி ரவைகள் அவர்களை நோக்கித் தீர்க்கப்பட்டன. மனம் ஆடிப்போயிற்று.

அந்தச் சாரதிக்கு நிலைமை புரிந்துவிட்டது. கண்ணிமைப் பொழுதில் பேருந்தை முன்னும் பின்னும் திரும்பி வந்த வழிக்கு நிமிர்த்தி முடக்கிவிட, வீதியின் குறுக்கே பெரிய மரக்குத்தி . சடுதியான பிறேக்கினால் உடல்கள் முன்தள்ளி, பின் இழுத்துக் குலுக்கி நின்றன. முன்கதவாலும் பின் கதவாலும் துப்பாக்கி, கத்தி, பொல்லு, ஆயுதங்களுடன் குண்டர்கள்.

சனங்களின் கூக்குரல், அவல ஒலி, யார் என அடையாளம் காண முடியாதபடி உடைகள். கறுத்த ரீசேட், கறுத்த அரைக் காற்சட்டை, முகம் கைகால் எல்லாம் கறுப்பு நிறச்சாயம். யார் அவர்கள்? சாரதியிடம் ஒருவன் சிங்களத்தில் கட்டளையிட்டான்

"ஹறவன்ன........... பஸ்ஸ..... திருப்படா பஸ்ஸை'

சாரதி பேந்தப் பேந்த விழித்தான். சாரதியை இழுத்து பின்னால் தள்ளி விட்டு வந்த ஒருவன் சாரதியின் சீற்றில் இருந்து கொண்டான். பேருந்து அசைந்தது. காட்டுக்குள் நுழைந்தது. ஆடி அசைந்து சென்றது.

"கொந்த பாடமாக் தென்னாம்' உங்களுக்கு பாடம் நாங்க தாறம் ஒரு ஆணவச் சிரிப்போடு சிங்களத்தில் ஒலித்தது. பேருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரம் குலுக்கிக் குலுக்கி வந்து நின்றது. முட்டி மோதும் அவலம்.

பயம் எல்லோர் முகத்திலும் குடி கொண்டது. குண்டர்கள் நல்ல மப்பில் இருப்பது புரிந்தது. பேருந்து நின்றதுதான் தாமதம். சனங்கள் முண்டியடித்து பேருந்தின் முன் கதவாலும் பின் கதவாலும் திமிறிப்பாய ஆயத்தமாகும் போது துப்பாக்கிகள் சரமாரியாக முழங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ அம்மா' அவலக் குரல்களிடையே உடல்கள் சரிந்தன.

ஆனந்தன் பேருந்தின் சீற்றில் இருந்தவாறே சரிந்து பேருந்தினுள் கிடந்தான். அவனுக்கு மேல் பலர். எங்கும் குருதிப்புனல். பயணிகளின் உடைமைகள் சூறையாடப்பட்டன. குண்டடிபட்டுக் குற்றுயிராய்க் கிடந்த வர்களை மிதித்துக் கொண்டு ஈன இரக்கமின்றி கொடூரமாகத் தாக்கினர். பேருந்தைச் சுற்றியும் உள்யேயும் குண்டர்கள். என்ன நடக்கிறது? இப்போது பேருந்தில் இங்கொன்றும் அங்கொன்றுமாக முனகல் ஒலி. குண்டர்கள் மறைந்து விட்டார்கள். ஆனந்தனின் உடல் குளிர்வதையும் குருதி மணம் பரவுவதையும் தனக்குமேல் மனித உடல்கள் கிடப்பதையும், தான் உயிரோடு இருப்பதையும் உணர்ந்து கொண்டான். பேருந்தின் நடுப்பகுதியில் இருந்து பயணித்தவர்கள் முன்னும் பின்னும் இருந்தவர்களினால் காப்பாற்றப்பட்டு விட்டார்கள். ஆனந்தன் முண்டிய டித்து தன் தெம்பெல்லாம் ஒன்று சேர்த்து உன்னினான் அந்த உந்தல் அவன் வெளிவர உதவியது.

பக்கத்தில் இருந்து வந்த நண்பன் கணேசலிங்கம் என்னவானான்?.

திகீரென்றது. உடலங்களை புரட்டி கணேசலிங்கத்தைத் தட்டினான்.

"கணேசா'...............

கணேசன் விழித்துக் கொண்டான். நிலைமையைப் புரிந்து கொண்டான். ஆனந்தன் கைலாகு கொடுக்க கணேசன் சிதைவுகளுக்குள் இருந்து வெளி வந்தான்.

"ஐயோ கஸ்தூரி'

கணேசன் வாய்விட்டு அலறினான். கணேசன் தனது சகோதரியின் மகள் கஸ்தூரியையும் தன்னோடு வவுனியாவுக்கு கூட்டி வந்திருந்தது. அப்போதுதான் ஆனந்தனுக்குத் தெரிந்தது.

இப்போது இருவரும் மனித உடல் குவியல்களைப் புரட்டினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாமா.........'

மூச்சுத் திணறக் கஸ்தூரி.... மெதுவாக முனங்கினாள்.

பரபரப்போடு கஸ்தூரியைத் தூக்கினார்கள். அந்தப் பத்து வயதுப் பெண் குஞ்சு பயப்பீதியால் சுருண்டு கிடந்தது. அவளுக்கு மேல் மனிதர்கள் விழுந்ததால் நோவு கண்டிருந்தது. மயக்கத்தில் இருந்தாள். உயிர் உள்ளவர்களை மீட்க ஆயத்தமானார்கள். பேருந்தில் இருந்து இறங்கி நிலைமையை ஆராய்ந்தனர். மனம் திடுக்குற்றது. தூரத்தே குண்டர்களது குரல்கள்.

"கணேசா.... வா....வா..... தாமதிக்கேலா....' கஸ்தூரியையும் இழுத்துக் தூக்கிக் கொண்டு புதருக்குள் மறைந்து கிரேவல் எடுத்த குழியினுள் பதுங்கிக் கொண்டனர்.

இப்போது பல குண்டர்கள் வந்து கொண்டிருந்தனர். அவர்களின் கைகளில் பெற்றோல் ரின்கள். பேருந்தைச் சுற்றியும் யன்னல் ஊடாக கவும் உள்ளேயும் வெளியேயும் பெற்றோலை ஊற்றுகிறார்கள். கஸ்தூரியின் வாயைக் கணேசன் தன் கைகளால் பொத்திக் கொண்டான். பேருந்து குற்றுயிரோடு கிடந்தவர்களையும் சேர்த்து சுவாலைவிட்டு எரிந்து கொண்டிருந்தது. "கத்தாவ இவறாய்' கதை முடிந்தது. என வெற்றிச் சிரிப்போடு குண்டர்கள் போய்விட்டார்கள்.

காட்டினூடாக திருகோணமலை நகரை அடைந்து நண்பனின் வீட்டில் தஞ்சமாகும் போது மாலை ஆறுமணி.


பேருந்து வழிமறிக்கப்பட்டு பயணிகளோடு பயங்கரவாதிகளால் எரிக்கப்பட்டுள்ளது. வானொலி ஒலிபரப்பிக் கொண்டிருந்தது. அடுத்த நாள் பத்திரிகைகளும் இதனையே வெளியிட் டன.

கஸ்தூரி இன்னும் சித்தப்பிரமையிலே இருக்கிறாள். அந்த அதிர்ச்சி யில் இருந்து அவள் இன்னும் மீளவேயில்லை.

*நன்றி - தினக்கதிர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மைந்தன்

என்ன செல்லம்மா கண்ணெல்லாம் கலங்கியிருக்கு. தன்னைச் சுதாகரித்தக் கொண்டு சற்குணத்தார் கேட்டு வைத்தார். அவருக்கு வீட்டு நிலைமை தெரியாமல் இல்லை. பதவியில் இருக்கும் போது மாதா மாதம் வெறும் சம்பளத்தை அப்படியே செல்லம்மாவிடம் கொடுத்து விடுவார். கேட்கும் போதெல்லாம் கொடுக்கும் கற்பகத் தருவாகத்தான் இருந்தாள் செல்லம்மா. ஆனால் இன்று அவர் ஓய்வுபெற்றுவிட்டார். இரண்டு வருடங்கள் ஆகியும் இன்னும் பென்ஷன் கிடைத்தபாடில்லை.

"கலங்காதா" பின்ன, இவ்வளவு காலமும் சஞ்சல மில்லாமல் காலம் ஓடியது. காசு இல்லாட்டி காகமும் வராது'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி முடிக்கு முன் பொல பொலத்துக் கண்ணீர் மழை பொழிந்து விட்டது. முந்தானையால் முகத்தைத் துடைத்துவிட்டு, கையில் கொண்டு வந்த தேநீர்க் கோப்பையை நீட்டினாள்.

சற்குணத்தாருக்கும் நிலைமை சங்கடமாய்த்தானிருந்தது. செல்லம்மா இப்படிக் கண் கலங்கியதை அவர் கண்டதில்லை. செல்லம்மாவின் கண்களில் கண்ணீர் வடிந்தால் அவர் இதயத்தில் உதிரம் கொட்டும். உடல் பொருள் ஆவி எல்லாம் அவளாகி விட்டிருந்தார். அவரின் உயர்வுக்கெல்லாம் செல்லம்மா உரமாகியதை எண்ணி நெக்குருகுவார்.

"பாடசாலையில் அதிபராக இருக்கு மட்டும் உங்களுக்கு எவ்வளவு செல்வாக்கு இருந்தது. அந்தக் கல்விப் பணிப்பாளர் உங்க மேல் மதிப்பு வைத்திருந்தார். இன்டைக்கென்றாலும் போய்ப்பாருங்க' கெஞ்சுவதை போல் செல்லம்மா கூறுவதைப் பார்த்து அவரும் கண்கலங்கி விட்டார். அவர் அந்தக் கல்விப் பணிப்பாளரை எத்தனை தரம் பார்த்தாகிவிட்டது.

இது செல்லம்மாவிற்கு எங்கே தெரியப்போகிறது.

"அப்பா நான் போயிற்றுவாறன்' கடைசி மகள் சுமதி ஏ.எல். படித்துக் கொண்டிருக்கிறாள். படியிறங்கிப் போனாள்.

"அப்பா, எனக்கு கொம்பியூட்டர் கிளாஸ் இன்றைக்கு காசு கட்ட வேணும். என்னப்பா செய்யிறது?' மகன் நாவுக்கரசன் அறைக்குள் இருந்து சத்தமிட்டான். அசந்து போன சற்குணத்தாரை தன் சாமர்த்தியத்தால் சுய நினைவுக்கு கொண்டு வந்ததே செல்லம்மாதான்.

"இஞ்சாருங்கோ, நமக்குக் கடமைகள் இருக்கு. இவ்வளவு காலமும் ஊரார் பிள்ளைகளை ஊட்டி வளர்த்தீங்க. இனி நமது பிள்ளைகளை கரை சேர்க்க வேணும்' விம்மலோடு செல்லம்மா கூறிக்கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் நீராடி, தலைதுவட்டி, பூத்துக் குலுங்கும் புதுமலராக பூரணி வெளிவந்தாள். சற்குணத்தாரின் கண்கள் பேசின. செல்லம்மா பதுமையாகி புன்னகையை வாடகையாகப் பெற்று, செயற்கையாகச் சிரித்து "இப்ப கல்விக் கந்தோருக்குப் போகலாமே: அங்கு கிளாக்குமார் வரப் பத்துமணியாகும். அவசரப்படாமல் பத்துமணிக்குப் போங்க' சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஏதோ சொல்லிவிட்டு கண்ணீரைத் துடைத்து மூத்த மகளுக்கு முகம் காட்டாது அடுக்களைப் பக்கம் செல்லம்மா நகர்ந்து விட்டாள்.

வீட்டு நிலைமை பூரணிக்கு தெரியாமலில்லை. பட்டப்படிப்பை முடித்துவிட்டு வேலைதேடும் படலத்தில் இருந்தாள். தன் மகளின் புன்னகையில் சற்குணத்தார் ஒரு நிறைவைக் காண்பவர். அவளுக்கு எந்தவித துயரமோ, வீட்டுக் கவலைகளோ தெரியாமல் வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தவர். கடந்த இரண்டு வருடங்களாகத்தான் அவருக்கும் வீட்டு நிலைமை புரிந்தது. எனினும் பிள்ளைகளுக்கு இவை தெரியாதிருக்க பாடுபட்டு வந்தனர்.

"செல்லம்மா.... நான் பென்சன் விடயமாக கல்விக் கந்தோருக்குப் போய்வாறன். இன்டைக்கு எப்படியும் புதியதாய் வந்திருக்கிற பெரியவரை சந்தித்துத்தான் வருவன்'. கூறிக் கொண்டு புறப்பட்டார். நாவுக்கரசன் படலையைத் திறந்து, அந்த வீதிக்கு வந்தான். சம்பூரிலிருந்து மனித மூடைகளை அள்ளி நிறைத்துக் கொண்டு கூவியபடி அந்தப் பேருந்து வந்து கொண்டிருந்தது.

"அப்பா பஸ் வருகுது, வாங்க' கூறியபடியே பேருந்தை நிறுத்துவ தற்கு ஆயத்தமானான் நாவுக்கரசன்.

"பூரணி அந்த பைலை எடுத்துவாம்மா' சற்குணத்தார் கூறி வாய்மூட முன் பை, குடை, சால்வை, கண்ணாடிக்கூடு எல்லாம் வந்து விட்டன. தேய்ந்த அந்தச் செருப்பை மாட்டிக் கொண்டு படலையைத் தாண்டி வீதிக்கு வரவும் பேருந்து வந்து நிற்கவும் சரியாக இருந்தது. தன்னை பேருந்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணித்துக் கொண்டார். சேனையூர் சந்தியில் தான் அவர் வீடு இருந்தது.

பேருந்து சேனையூரிலிருந்து பறப்பட்டு கட்டைப்பறிச்சான் பாலத்தைத் தாண்டி , நொக்ஸ் வீதியால் சென்று திரும்பி மூதூர் புனித அந்தோனியார் வித்தியாலயத்தின் மறுமுனையில் இருந்த அஞ்சல் நிலையத்திலும் தரித்து மூதூர் ஜெற்றியைத் தொட்டது. "லோஞ்' என்னும் மோட்டார் படகு திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது. அதனுள் பயணித்து பழக்கப்பட்ட சற்குணத்தார் ஆழ்ந்த யோசனையில் இருந்தார். கடற்காற்று புரட்டி எடுத்துக் கொண்டிருந்தது. அலைகள் எழுந்து மடிந்து 'சலார்' என்னும் ஒலியோடு லோஞ்சில் மோதி உடைந்து கலகலத்துச் சிரித்து, வெண்நுரைகளை நீலக் கடலில் மாலையாகத் தொடுத்துக் கொண்டிருந்தன.

லோஞ்சில் பயணிக்கும் ஒவ்வொருவருக்கும் அவரவர் பிரச்சினைகளே பூதாகாரமாயிருந்தன. தங்கள் மனதிற்குள்ளாகவே ஆயிரம் பேரோடும் பேசிக் கொண்டிருந்தனர். சற்குணத்தாரின் கண்கள் மூடியிருந்தன. அவர் மனம் எங்கெல்லாமோ அலைந்து வந்தது. லோஞ் கடலில் ஓடிக்கொண்டிருந்தது.

"மிஸ்டர் சற்குணம், நீங்கதான் அந்தப் பாடசாலையைப் பொறுப்பெடுக்க வேணும். உங்களால் மட்டும்தான் அது முடியும் அந்தக் கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்.

"சேர் வந்து.... இப்ப என்னால...' சற்குணத்தாரின் வாயிலிருந்து வார்த்தைகள் உதிரவில்லை. கல்விப் பணிப்பாளரின் கை அந்த அழைப்பு மணியை அழுத்துகிறது. சந்திரன் எட்டிப் பார்க்கிறான்.

"சேர்....'

"சந்திரன் ஏ.ஓவைக் கூப்பிடும்'

"சரி சேர்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.ஓ. பைல் கட்டோடு வந்து நிற்கிறார்.

"சேனையூர் வித்தியாலயத்திற்கு மிஸ்டர் சற்குணத்திற்கு அதிபருக்கான இடமாற்றக் கடிதம் அடித்துக் கொண்டு வாரும்'

அவர் தலையாட்டிவிட்டுப் போய்விட்டார். "மிஸ்டர் சற்குணம் உங்களைப் பற்றி எனக்குத் தெரியும். சேனையூர் பாடசாலை வளர வேண்டிய பாடசாலை. அதற்கு உங்களுடைய தலைமைத்துவம்தான் வேண்டும். ஒன்றும் பேசாமல் பொறுப்பை எடுங்க. மிச்சத்த நான் கவனிக்கிறன். 'கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்.

"ஐயா ரிக்கற் எடுங்கோ இந்தாங்க ரிக்கற்' நடத்துநர் சற்குணத் தாரைத் தட்டி ரிக்கற்ரைக் கொடுத்துப் பணத்தினைப் பெற்றுக் கொண்டு மற்றவர்களுக்கு அவன் ரிக்கற் விநியோகிக்கும் கடமையில் ஈடுபட்டான். மீண்டும் கண்களை மெல்ல மூடி தலைசாய்த்து ஒருக்களித்து இருந்தார். அதிபர் சற்குணத்தாரின் தோற்றம், பொலிவு, அடக்கம், மக்களோடு அணைந்து போகும் தன்மை ஆசிரிய, மாணவ உறவு சற்குணத்தாருக்குப் பெருமதிப்பையும் மரியாதையையும் கொடுத்து விட்டிருந்தது. பாட சாலையின் தரம் உயர்ந்தது. கட்டடங்களும், உயர்தர வகுப்புக்களுமாய் அந்த ஊரிலிருந்தே பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பையும் ஏற்படுத்திவிட்டார்.

இன்று அது பெரிய கல்லூரி. அதன் பவளவிழா கொண்டாடப் படுகிறது. பெருங் கூட்டம். எங்கும் மாவிலை தோரணம். பெருவிழாவாகப் பெற்றோரும் பொது மக்களும் மாணவர்களுமாக கோலாகலப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாகாண அமைப்பு முறை வந்ததின் பின் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அவ்விழாவுக்கு முதன் முதல் கன்னித் தரிசனமாக வருகிறார். செயலாளர், கல்விப் பணிப்பாளர்கள் புடை சூழ மாலைகள் அணிவித்து வரவேற்கப்படுகிறார். மகிழ்ச்சியால் மனங்கள் துள்ளுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் சற்குணத்தார் இப்பாடசாலைக்கு வந்த பின் பாடசாலையின் வளர்ச்சி பற்றியெல்லாம் பலரும் புகழ்ந்துரைக்கின்றனர்.

அதிபர், ஆசிரியர்களது சேவை மகத்தானது, நாட்டினை ஆக்கவும், அழிக்கவும் அவர்களால் முடியும். அவர்களது முயற்சியினாலேயே உலகம் உயர்ச்சி அடைகிறது. ஆசிரிய உலகத்தை நாம் எல்லோரும் மதிக்க வேண்டும்.' என்று கல்விப் பணிப்பாளர் சூழுரைக்கிறார்.

"இன்னும் பாதாள மலையைத் தாண்டவில்லையே..... என்ன லோஞ்சு மெதுவாகப் போகுது'யாரோ முணுமுணுப்பது சற்குணத்தாரின் காதுகளில் விழுந்து உதைக்கிறது. கண்களை மெல்லக் கிழித்துப் பார்வையைச் செலுத்துகிறார். பாதாளமலை சற்றுத்தூரத்தில் தெரிகிறது.

"இன்னும் அரை மணியாவது செல்லும்' மனதிற்குள் சொல்லிக் கொண்டு மீண்டும் பழையபடி சாய்ந்து கண்களை இலேசாக மூடுகிறார். அந்தச் செயலாளரின் தோற்றம். வசீகரம் நல்லதொரு 'இமேஜை' மக்களிடையே உருவாக்கி விட்டிருந்தது. இப்போது செயலாளர் எழுந்து நிற்கிறார். எல்லோரும் அணிவித்த மாலைகள் செயலாளர் முன்னே மேசை மேல் குவிந்து கிடக்கின்றன.' ஒருநாட்டின் முதுகெலும்பு ஆசிரியர். ஆசிரியர்கள் சேவையாளர்கள், நல்ல தொண்டர்கள். அதிபர் சற்குணம் போன்றவர்களால்தான் நாட்டில் மழை பெய்கிறது. நல்லன நடக்கின்றன. இந்த அதிபரை நான் பாராட்டுகின்றேன். அவருக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் நாம் எல்லோரும் செய்ய வேண்டும்' கூறிக் கொண்டே உணர்ச்சி வசப்பட்டு மேசைமேல் குவிந்து கிடந்த மாலைகளை வாரி எடுத்து சற்குணத்தாருக்கு அணிவிக்கிறார். கல்லூரிச் சூழல் கரகோசத்தால் இரைந்து எதிரொலிக்கிறது. சற்குணத்தார் திக்குமுக்காடிப் போகிறார்.

சற்குணத்தார் சற்றும் எதிர்பார்க்காத நிகழ்ச்சி இது. உண்மையில் சற்குணத்தார் மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து, விக்கித்துப் போனார். சற்குணத்தாருக்கு ஒரு தனிமதிப்பு இருந்தது. என்பது உண்மைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை, காலதேவன் கைத் தூரிகை சற்குணத்தாரின் தலையில்பட்டுவிட்டது. ஓய்வுபெறும் நாள், கண்ணீர்மல்க பாடசாலையைப் புது அதிபரிடம் ஒப்படைத்துவிட்டு சால்வையைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு இரண்டு வருடங் களுக்கு முன் போனவர்தான்.

"ஐயா இன்னும் பென்சன் வரல்லயே.....' அவரது பொறுமையைச் சோதிப்பது போல் பக்கத்திலிருந்த நாதன் மாஸ்டர் தான் கேட்டார்.

"எப்படித் தெரியும்'

"உங்கட பைலைப் பார்த்தனான்'

அப்போதுதான் மற்றவர்களுக்குத் தெரியும்படி தான் வைத்திருந்த பைலைப் பார்த்துக் கொண்டார். சொந்தத் துயரங்களை மற்றவரோடு பகிர்ந்து அவர்களது அனுதாபங்களைப் பெறவிருப்பமில்லாதவர் சற்குணத்தார்.

"இவர்கள் இப்படித்தான்..... கிளாக்குமார் என்ன வேலை செய்யிறாங்க... ஒரே கதைதான்' நாதன் மாஸ்டர் கூறியதை சற்குணத்தார் அசை போட்டுப் பார்த்தா..

சின்னராசா கிளாக்கர் மனக்கண்முன், "மாஸ்டர்.... உங்கட முதல் நியமனக் கடிதம் இல்லை.... டியூட்டி பாரமெடுத்த கடிதம் இல்லை. எல்லாத்தையும் கொண்டு வாங்க' கிளாக்கர் சின்னராசர் சொல்கிறார்.

வீட்டில் கிடந்த பொட்டலங்களைக் கிண்டி எப்படியோ எடுத்தாச்சு...... "தம்பி நீங்கள் சொன்ன கடிதங்கள்' நீட்டினார். சின்னராசா புரட்டிப் புரட்டிப் பார்த்தார். பைலில் சேர்த்துக் கட்டினார். மீண்டும் பைலை புரட்டினார். கைகளால் மேல் வாயைத் தடவிக் கொண்டார்.

"மாஸ்டர் கலியாணம் முடிச்சனீங்களே....' இந்தக் கேள்வியால் சற்குணத்தார் ஆடியே போய்விட்டார். அவருக்கு வந்த ஆத்திரத்திற்கு சின்னராசாவை அப்படியே அலக்காகத் தூக்கி எறிய வேண்டும் போல் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலியானம் செய்யாமலா பிள்ளைகுட்டி பெத்தனான்' சற்று சூடாகத்தான் கொட்டினார்.

"மாஸ்டர் கோவிக்காதீங்கோ....... பைல்ல கலியாணம் செய்த சேட்டிபிக்கற் இல்ல..... அது வேணும். அதோடு லீவு விபரம் தேவை. எல்லாத்தையும் கொண்டு வாங்க' சொல்லிவிட்டு சின்னராசா இருக்கையை விட்டு கிளம்பினார். அந்தக் கல்வி அலுவலகத்தில் எல்லாம் தெரிந்த முகங்கள். பாடசாலைக்கு பலர் வந்து விருந்துண்டு அவரைப் புகழ்ந்தவர்கள். அவரது கண்கள் அலுவலகத்தைத் துழாவி எடுத்தன. நம்பிக்கையோடு விறுவிறு என்று கல்விப் பணிப்பாளரின் அறைக்குள் புகுந்து கொண்டார். கல்விப் பணிப்பாளர் மேசையில் பெரிய கோவைக் கட்டுகள். குவிந்து கிடந்தன. தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந் தார். சிரிப்பும் கதையும் அட்டகாசப் பதில்களுமாக...... ஒரு அரை மணித்தி யாலம் காலம் போனது. கல்விப் பணிப்பாளரின் கண்கள் சற்குணத் தாரைக் கண்டு கொண்டனதான், கதை முடிந்ததும் ரெலிபோனை வைத்துவிட்டு அன்றுதான் சற்குணத்தாரைக் காண்பது போல்

"என்ன மாஸ்டர்..... என்ன . ஷயம்.....?" என்றார். சற்குணத்தாருக்கு தூக்கிவாரிப் போட்டது. மீண்டும் தொலைபேசி அழைப்பு. அந்தக் கல்விப் பணிப்பாளரின் அட்டகாசப் பெருமிதச் சிரிப்பு. மேசையில் இருந்த அழைப்பு மணி அழுத்தப்படுகிறது. சந்திரன் எட்டிப் பார்த்து "சேர்' என்றான்.

ஏ.ஓ. பாலசிங்கம் உள் நுழைந்தார்.

"ஏ.ஓ. எனக்கு கிளாஸ் வன் புரமோஷன்.....'

"செலக்ரட்' என்று எம்.பி. ரெலிபோன் செய்தவர்'

"நாளைக்கு ஒரு ரீப் பாட்டிக்கு ஒழுங்கு செய்யுங்கோ.....'

"சேர் எத்தனை மணிக்கு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பின்னேரம் ஏழு ஏழரை போல'

"ஓம் சேர்....' பாலசிங்கம் வெளியேறிவிட்டார். அவருக்கு அந்த ரீப் பாட்டி எப்படி இருக்கும் என்பது தெரிந்திருந்தது.

"மறந்திட்டன்..... நீங்க.... என்ன விஷயமாக வந்தனீங்க?"

"பென்ஷன் பேப்பரெல்லாம் கொடுத்து இரண்டு வருசமாகிறது. இன்னும் பென்ஷன் வரவில்ல...... வாழ்க்கை கஸ்டமாயிருக்குது' சொல்லி முடியுமுன் சந்திரன் எட்டிப்பார்த்தான். கைகாட்டி அழைத்தார்.

"இந்த ஐயாவை சின்னராசா கிளாக்கிட்ட கொண்டு போய் விடு' கல்விப் பணிப்பாளர் இப்போது இருக்கையில் இல்லை.

பயணிகள் லோஞ்சை விட்டு இறங்கி திருகோணமலை ஜெற்றியைக் கடந்து கொண்டிருந்தனர். வெளியில் இறங்கி உட்துறைமுக வீதியால் நடந்தார். நடந்து பழக்கப்பட்ட கால்கள் நெளிந்து படுத்திருக்கும் உட்துறைமுக வீதி, போவோர் வருவோரையும், கடலழகையும் பார்த்து ரசிப்பதற்காகவோ என்னவோ, வீதியை உடைத்துக் கொண்டு பல கற்கள் நிமிர்ந்து கிடக்கின்றன. இவை நடந்து செல்வோரை நக்கல் அடிப்பதால் அவர்கள் இடறிவிழுவதுமுண்டு. ஆழ்ந்த யோசனை, பயணித்த களைப்பு, மனச்சுமைகளோடு நடக்கும் சற்குணத்தாரையும் நடனமாட வைத்துவிட கால் இடறி விழாது தப்பிக் கொண்டார். தேய்ந்த செருப்புத்தான் பட்டி அறுந்து, காலைவிட்டுத் துள்ளி, கடல்நீரில் விழுந்து தப்பிக் கொண்டது.

வெறுங்காலோடு வந்து கல்விப் பணிமனையில் நுழைந்தார். அலுவலகம் வெறிச்சோடிக்கிடந்தது. சந்திரன் மட்டும் நல்ல விசுவாசி. அவன் பணிப்பாளரோடு சற்குணத்தாரின் பாடசாலைக்குப் பல முறை சென்றிருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபரின் விருந்தோம்பும் பண்பில் மூழ்கி இருக்கிறான். கனகாலத்துக்குப் பின் இன்றுதான் காணுகின்றான்.காலத்தின் கோலத் தால் அவனும் வயதாளியாகிவிட்டிருந்தான். அதிபர் சற்குணத்தாரைக் கண்டதும் அவன் மனம் நொந்தது.

"ஐயா வாங்க...... தேநீர் குடிப்பம்' அவருக்கும் களைப்புத்தான். ஆனால் இதுவரை காலமும் எல்லோருக்கும் வாங்கிக் கொடுத்து பணத்தைத் தண்ணிபோல் செலவு செய்தவருக்கு, இதுவரை பிறர் வாங்கிக் கொடுத்ததில்லை. அலுவலகத்திற்குச் சற்குணத்தார் வந்தால் அவரைச் சுற்றி பலதரத்து அலுவலர்களும் புடை சூழ்ந்து நிற்பார்கள். பென்சனுக்குப் போன பின்பு ஒரு காகம் கூடச் சுற்றுவதில்லை.

"சந்திரன்........ வரக்கதான் குடிச்சனான்..... இப்பவேணாம்' மழுப்பி மறுத்தார்.

"ஐயா உங்கள எனக்குத் தெரியும். நான் வாங்கித்தாறன் வாங்க'.... அவரின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு கன்டீனுக்குள் நுழைந் தான். 'கன்ரீன்' படுஅமர்க்களப்பட்டு, சிரிப்பும் கும்மாளமும், அரட்டைகளு மாய் அலுவலக நேரத்தில் எல்லோரும் இங்கே..... அவர் மனம் வருந்தியது.

சந்திரன் இரண்டு உழுந்து வடைகளோடும், தேநீர் கோப்பை களோடும் வந்தான். போடப்பட்ட இருக்கைகளில் அமர்ந்தனர்.

"என்ன யோசிக்கிறியள்? நான் சொல்லுறன் எண்டு கோவிக்காதீங்க உங்கட பைல் இன்னும் போகல்ல'வடையைக் கடித்துத் தேநீரை உறிஞ்சிக் கொண்டே சந்திரன் சொன்னான். "நான் எல்லா 'டொக்கியு மென்சையும்' கொடுத்திட்டன். இரண்டு வருசமாகியும் ஏன் இவங்க இன்னும் அனுப்பல்ல?' வேதனையோடு அழாக்குறையாகக் கேட்டார்.

"ஐயா இப்ப காலம் மாறிப் போச்சு..... எதுக்கெடுத்தாலும் நாட்டுப் பிரச்சினை என்று காலத்தைக் கடத்துறாங்க. உங்கட கண்முன்னாலேயே இப்ப பாக்கிறியள்தானே இப்ப கந்தோர்ல நடக்கிறது தெரிந்தாலும் தெரியாத மாதிரி நடிப்பு' சந்திரன் கூற அவனை ஒருவித புதிரோடு சற்குணத்தார் பார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயா இப்படியே கல்விச் செயலாளரைப் போய் பாருங்க. முதல் இருந்தவர் இப்ப இல்லை.' இப்ப வந்திருக்கும் புதுச் செயலாளர் தங்கப் பவுண். உங்களுக்கு ஒரு மாதத்துக்குள் விடிவு கிடைக்கும்' சந்திரன் சற்குணத்தாரை அழைத்துக் கொண்டு போய் செயலாளர் அறையின் வாசவில் விட்டு,

"ராசன் ஒருக்கா இந்த ஐயாவை செயலாளரை சந்திக்கவிடு' அங்கு நின்ற பியோனிடம் சொல்லி விட்டுப் போய்விட்டான். ராசன் செயலாளரின் அறையினுள் நுழைந்து வந்து கதவைத் திறந்து விட்டான். உள்ளே மெதுவாக சற்குணத்தார் நுழைந்தார்.

செயலாளரின் விழிகள் கண்ணாடிப் பிறேமுக்கு மேலால் எட்டிப் பார்த்து, கீழே சரிந்து கொண்டன. கைகள் எழுதிக் கொண்டிருந்தன.

"வாருங்கள் ஐயா..... இருங்கோ....'

சற்குணத்தார் மந்திரத்தால் கட்டுண்டவர் போல் கையிலிருந்த பைலை நீட்டினார்.

சற்குணத்தாரின் பைல் செயலாளருக்குக் கைமாறியது. சற்குணத் தார் கதவை மூடிய பக்குவம், நடந்து வந்த பவ்வியம், அவரது முகபாவம், மனநிலை ஆகியவற்றை எட்டிப் பார்த்த விழிகள் உணர்த்தி விட்டன. கோவையை விரல்கள் புரட்ட கண்கள் மேய்ந்தன. மனம் கிரகித்துக் கொண்டது.

செயலாளரின் விழிகள் ஒரு நிமிடம் நேருக்கு நேர் சற்குணத்தாரின் விழிகளை ஊடுருவின. தொலைபேசியில் ஒரு அழைப்பு விடுக்கப்பட்டது. மறுநிமிடம் கல்விப் பணிப்பாளரும், சின்னராசாக் கிளாக்கரும் பிரசன்னமா யிருந்தனர்.

"லுக் மைடியர் டிரக்டர் உங்க ரெண்டு பேருக்கும் மூணுமாதச் சம்பளத்தை நிற்பாட்டினால் என்ன?' கேள்வியைக் கேட்டுவிட்டு அவர்களை ஒரு நிமிடம் ஏறிட்டுப் பார்த்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த அதிபரைத் தெரிகிறதா உங்களுக்கு...? இரண்டு வருடங்களாகியும் பென்சன் இன்னும் இல்லை.'

"சேர் வந்து.....' சின்னராசக் கிளாக்கர் ஏதோ சொல்ல வாயெடுத்தார்.

"ஒன்றும் வேண்டாம்' கூறிவிட்டுத் தொலைபேசியை எடுத்து சற்குணத்தாரின் சுயவிபரக் கோவையைக் கொண்டு வருமாறு நிர்வாக உத்தியோகத்தர் பாலசிங்கத்துக்கும் பணிப்புரை போனது. ஒரு பயங்கர அமைதி அப்போது அங்கே நிகழ்ந்து கொண்டிருந்தது. ஏ.ஓ. பாலசிங்கம் கோவையோடு நின்றிருந்தார். செயலாளரை முந்திக் கொண்டே,

"சேர் பைல் கொம்பிளிற்றாக இருக்கிறது. இன்னும் பென்ஷன் திணைக்களத்திற்கு அனுப்பப்படல்ல' செயலாளரின் கண்களில் ஆவேசம் கலந்த அனல் தெரிந்தது.

"நீங்களெல்லாம் என்ன செய்யிறியள்?' பைலை உடனே இப்பவே அனுப்பி அடுத்த மாதம் பென்ஷன் கிடைக்கச் செய்ய வேணும்.' கட்டளை பிறந்தது.

ராசன் தேநீர் கொண்டு வந்து எல்லோருக்கும் கொடுத்தான்.

மீண்டும் தொலைபேசியில் அழைப்பு விடுக்கப்பட்டது. கணக்காளர் வந்து கொண்டிருந்தார்.

பென்ஷன் திணைக்களத்திலிருந்து உரிய நிதி வரும்வரை தற்காலிக மாக 'புறவிசனல் பென்சன்' கொடுக்கலாமல்லவா?' செயலாளர் கணக்காளரைப் பார்த்து வினாவினார்.

"செய்யலாம்' கணக்காளரின் பதில் உற்சாகமாக இருந்தது.

"இந்த அதிபர் பென்சனாகி இரண்டு வருடமாச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பென்சன் இல்ல. இது எவ்வளவு அநியாயம். பைலையோ இன்னும் அனுப்பல்ல இவங்கள என்ன செய்யிறது. அரசாங்கச் சம்பளத்தை எடுத்துக் கொண்டு.....' அதற்கு மேல் அவருக்கு வார்த்தைகள் வரவில்லை.

"எக்கவுண்டன் இவரது பைலைப் பார்த்து, புறவிசனல் பென்சனுக் குரிய ஒழுங்கு செய்யுங்க' சொன்னதும் பாலசிங்கத்தாரோடு பைலைப் பார்த்தார் கணக்காளர்.

"அந்த அதிபரின் கஸ்டம் எனக்கு கவலையைத் தருகிறது. காலில் செருப்புக்கூட இல்லாமல் வந்திருக்கிறார். ஒரு மாதச் சம்பளம் இல்லாட்டி என்ன பாடுபடுகிறம். இரண்டு வருசமாய்ச் சம்பளம் இல்லாமல் அவர் குடும்பம் எவ்வளவு கஸ்டப்படும் பாவம்' கவலையோடு செயலாளர் சொன்னார். சற்குணத்தார் கனவா அல்லது நினைவுதானா என்று தன்னைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டார்.

எக்கவுண்டன் அந்த இடத்திலேயே எக்கவுண்ட் கிளாக்கைக் கூப்பிட்டு வவுச்சர் தயாரித்து கூடவே செக் எழுதி செயலாளரிடம் நீட்டினார். செயலாளர் தனது ஒப்பத்தை இட்டு, சற்குணத்தாரிடம் நீட்டினார். நன்றியோடு அந்தச் செயலாளரைப் பார்த்துக் கரம் கூப்பினார்.

"அடுத்த மாதத்திலிருந்து தொடர்ந்து பென்ஷன் வரும். மூதூர் இலங்கை வங்கியில் பெற்றுக்கொள்ளுங்கள். போய் வாருங்கள்' கூறி சற்குணத்தார் போகும்வரை பார்த்துக் கொண்டிருந்துவிட்டுச் செயலாளர் அமைதியானார்.

சந்திரன் சற்குணத்தாரை லோஞ்சில் வழியனுப்பி வைத்தான். மனித நேயம் இன்னும் மரணிக்கவில்லை என்று அவர்மனம் கூறிக் கொண்டிருந்தது.

நன்றி - தினக்குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆலி தூரக்குதடி.......!

அதோ....... மேரி. மணமகள் கோலத்தில் அலங்கரிக்கப்பட்ட அந்த வாகனத்தின் பக்கம் வருகின்றாள். வாகனத்தின் பின் சீற்றில் அருளாளன் பக்கத்தில் நெருக்கமாக அமர்கிறாள். அவள் கழுத்தில் அருளாளன் இரு கைகளாலும் வளைத்துக் கட்டிய தாலி பளிச்சிடுகிறது. ஒரு கள்ளப் பார்வை மேரியின் கடைக்கண்ணில் உருள்கிறது. நாணம் கலந்த முறுவல் செவ்விதழ்களில் முளைத்து நெளிகிறது.

இயற்கையான நறுமனம்.

அது மேரியிடம் தான் இருக்க வேண்டும்.

ஒரு கணம் மனைவியை கண்களால் அளக்கிறார். சித்திரமாய் மனத் திரையில் இருத்தி விடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனத்தின் கதவுகள் மூடப்பட்டு ஊர்வலம் கோயிலில் இருந்து வீடு நோக்கி நகர்கின்றது. ஈருடல் ஓருயிராகி திருமணப் பந்தத்தில் கட்டுண்டு பவனி வருகின்றாள். இந்தப் பந்தத்தைப் பிணைத்து வைத்தது. அந்தத் தாலிதானா? இந்தப் பிணைப்பு சொர்க்கத்தில் நிச்சயிக்கப் பட்டதாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

'என்னை எதற்காக விரும்பினாய் மேரி' அருளாளனின் இந்தக் கேள்விக்குக்'களுக்' என்றொரு சிரிப்புச் சிலிர்த்து உதிர்ந்தது. அவளைப் போலவே அந்தச் சிரிப்பும் இனித்துக் குளிர்ந்து இங்கிதத்தை ஏற்படுத்தியது. சோடனைக்கு ஒரு சோடனையா? மேரிக்கு எந்த உடைகளும் எடுப்பாகத்தான் இருக்கின்றன.

எங்குமாய், ஏகாந்தமாய், அமைதியாய், அழகின் விடியலாய் யாவுமாய் அருளாளனுக்கு மேரி நிறைந்திருக்கிறாள். அந்தப் பவனி இன்பகரமாய் இனித்தது வாடகைக்கு அமர்த்தப்பட்ட அலங்கரித்த வாகனமும் அழகாய்த் தான் இருந்தது. வாழ்ந்த வாழ்க்கையின் இன்பகரமான எண்ணங்கள் அருளாளனின் இதயம் எங்கெல்லாமோ சிறகடித்து கடந்தகால இனிய நினைவுகளில் மூழ்கி முத்தெடுத்துக் கொண்ட போது..... மூச்சுத்திணறி...... விலா எலும்புகள் புடைத்துப் பதிந்து, விம்மி, குலுங்கி.... கண்ணீராய்... கரைந்து வழிந்தோடுகிறது. நெற்றிப் பொட்டின் இணையம் துண்டிக்கப் படுகிறது.

'மேரி..... மேரி....' மனவெளியில் ஒலிபரவி எதிரொலிக்கிறது. பட்டாசு வெடிச் சத்தம் எண்ணத் தறியின் நினைவலைகளைச் சின்னாபின்னப் படுத்திச் சிதைத்து விடுகிறது. மூடியிருந்த ஈரவிழிகளை மெல்லத் திறக்கிறார்.

'இது நிஜமாய் இருக்கக் கூடாது கடவுளே' மெல்ல மனதுள் ஒரு நப்பாசை. நிஜத்தை நிரூபிப்பதற்காகத் தன் உடலில் தானே கிள்ளிப் பார்த்துக் கொண்டார். அந்த வாகனத்தின் முன் சீற்றில் இப்போது அவர் இருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதுவாக ஊர்ந்து வாகனம் செல்கிறது. முன்னாலும் பின்னாலும் ஊர்கோலம். வெகு அமைதியாக ஊர்வலம் நடந்து கொண் டிருக்கிறது. கண்கள் மூடிய தியான அமைதியில் அருளாளன். உள்ளம் எரிமலையாய் கனன்று கொண்டிருக்கிறது. 'ஈச்சையூர் தவா' எழுதிய கண்ணீர் அஞ்சலிக் கவிதை வரிகளில் கண்கள் மெல்லத் தடவி மேய்கின்றன. கவிமணி கௌரிதாசன் கவி வரிகள் கண்ணீரில் மூழ்கடிக்கின்றன.

கண்ணீர் திரைபோடுகின்றது. மேரியின் உருவம் கண்ணீர் அலைகளில் நிழலாடுகிறது. உவர்மலை மத்திய வீதியால் குழந்தை யேசுவின் ஆலயத்தைத் தாண்டி மௌன ஊர்வலம் தொடர்கிறது. குழந்தை யேசு ஆலயக் கதவுகள் திறந்து கிடக்கின்றன. ஒவ்வொரு திங்களும் மேரி, குழந்தை யேசு ஆலயம் செல்வதை நினைத்துக் கொண்டார்.

'இறைவா.... இறைவா.... ஏனிப்படி... ஐயோ மேரி....' அவர் உள்ளம் அணுக்குண்டு தாக்கிய ஹீரோசீமாவாக எரிந்து கொண்டிருந்தது.

நேற்று மாலைதான் மனைவியைப் பார்த்து ஆறுதல் கூறி வந்தார். தலையை வருடி விட்டார். நலம் விசாரித்தார். அன்பாகக் கனிந்தார்.'மேரி எப்படியம்மா....... இப்போது' நெஞ்சுருகினார். உயிராகி உறைந்தார்.

'பரவாயில்லை.... கொஞ்சம் சுகமாக மூச்செடுக்கலாம்' மேரி விட்டு விட்டுப் பதிலிறுத்தாள். ஆனால் மேரியின் முகத்தில், பேச்சில் ஒரு சஞ்சலம். 'குடிக்க கொஞ்சம் தண்ணீர் தாங்க' ஊற்றிப் பருக்கினார். கலைந்த கேசத்தை வருடி விட்டார். முதுகை மெதுவாக தடவிக் கொடுத்தார். அவரின் கைகளைப் பற்றிக் கொண்டாள். அந்தப் பற்றில் மெல்லிய நடுக்கம் இருப்பதை உணர்ந்து கொண்டார்.

'என்னம்மா..... வேணும்......'

'ஒண்டும் வேணாம்... நீங்க சாப்பிட்டீங்களா..... உடம்பைக் கவனியுங்க'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளாளனின் இதயத்தைச் சம்மட்டி கொண்டு அடித்த உணர்வு. உடல் நலமற்ற போதும் கணவனின் மேலுள்ள பற்றுதலைக் கண்ட போது, அவர் கண்கள் கலங்கி நீர் சொரிந்தன. மேரி எல்லாமாகி நின்றாள். அருளாளனின் சக்தியாகி உறுதுணையானாள். அவரது உயர்வுகளுக் கெல்லாம் உந்து சக்தியாக இருந்தாள். பாரிய குடும்பச் சுமைகளைத் தாங்கி வரவிற்கேற்ற செலவை முகாமைத்தாள்.

அந்த அவசர கண்காணிப்பு வார்ட்டில் மேரி கட்டிலில் சயனித் திருந்தாள். டாக்டர்கள் அடிக்கடி சுற்றி வந்தனர். காலை வருவதாகக் கூறி விடைபெற்றார்.

'வரும் போது வேறு உடை கொண்டு வாங்க... சீப்பும்...' மேரி கூறி முடிக்குமுன் அவர் 'கொண்டு வாறன்' என்று கூறி வெளியேறினார். வீட்டுக்கு வந்து அமைதியான போதுதான், அந்த தொலைபேசி மணி ஒலித்தது. அவரது இதயம் நின்று விட்டபிரமை.

'அப்பா ஆஸ்பத்திரிக்கு வாறீங்களா' இளையமகன் டாக்டர் முரளியின் குரல் ஒலித்து ஓய்ந்தது. 'கடவுளே மேரி நலமாக வீடு வர வேண்டும்' மனம் இறைவனிடம் சரணடைந்தது.

இரவின் அமைதியைக் கலைத்துத் தூரத்தே ஷெல்லடி முழங்கிக் கொண்டிருந்தது. கீழ்த் திசைக்கடல் இருண்டு கிடந்தது. மீன்பிடிப் படகுகளின் வெளிச்சத்தில் பகலாய் விடிந்திருக்கும் திருகோணமலைக் கடல் நாட்டின் நெருக்கடியினால் கறுத்துப் படுத்துக்கொண்டிருந்தது. கடலடியில் உயிரினங்கள் பதுங்கிக் கொண்டிருந்தன. திருகோணமலை நகர் பயங்கர அமைதியில் ஆழ்ந்திருந்தது.'செக்பொயின்ற்'களில் சொல்லி விட்டு ஆஸ்பத்திரியை அடைந்த அருளாளன் ஆடிப்போயிருந்தார். அவரது முகத்தில் ஆயிரங்கோடி துன்ப அலைகள் விரிந்து கொண்டிருந்தன. மனம் மட்டும் கடவுளிடம் தஞ்சம் புகுந்த நிலையில் தவித்துக் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் குளிரூட்டி அறையில் அவருக்கு வெயர்த்தது. கண்கள் அந்தச் சூழலை வட்டமிட்டு மேரியின் இதயத்துடிப்பைக் காட்டும் கருவித் திரையில் நிலைகுத்து கின்றன. கண்ணீர் முட்டி உடைகின்றது. அவரது பக்கத்தில் கண்ணீர் ஊற்றெடுத்துப்பாய, குலுங்கிக் கொண்டு மூத்தமகன் பாஸ்கர். மேர்க்குரி மின்னொளியில் கவலைகள் தோய்ந்த முகங்கள் களைத்துக் கொண்டிருந்தன. எப்படியும் உயிரைக் காப்பாற்றும் போட்டியில் டாக்டர்களும், நேர்ஸ்களும் அலுக்காது, அயராது போராடிக் கொண்டிருந்தனர்.

குழாயூடாக ஓட்சிசன் பாய்ந்து உயிர்த்துடிப்பை உந்துகிறது. தாயின் இதயத்துடிப்பைக் கருவித்திரையில் பார்த்து ஏங்கிய வண்ணம் அருளாளனின் அருகில் முரளி, மேரியின் இதயத்துடிப்பு சட்டென நின்றது. டாக்டர் சசி மேரியின் நெஞ்சில் இரு கைகளையும் பதித்துப் பலமுறை அமுக்கி அழுத்துகிறார். இதயம் இயங்குகிறது. அருளாளனின் முகத்தில் கிழக்கு வெளித்த ஒரு பிரமை. 'கோணேசா........ அபயம்...... அபயம்...... காப்பாற்று' அவரின் வாய் முணு முணுக்கிறது.

டாக்டர்கள் கண்களால் பேசிக் கொண்டார்கள். நேர்ஸ்மார்களின் முகங்களில் கவலை குந்திக் கொண்டது. எனினும் அசுர வேகத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். நேரம் அதிகாலை இரண்டரை. இதயத்துடிப்பு நிற்பதும், நெஞ்சை அழுத்தி அமுக்கும் போது செயற்படுவதுமாக..... எத்தனை முறை இப்படி.... பார்த்துக் கொண்டிருக்க முடியாத கொடுமை.

'அப்பா..... அம்மா ..... நம்மைவிட்டுப் பிரியப் போகிறா' கண்ணீர் மல்க இளையமகன் டாக்டர் முரளி கூறிக் கொண்டிருந்தார்.

'அங்கிள் எங்களால் முடிந்ததைச் செய்கிறோம். இயற்கையை வெல்ல முடியாது' சோகம் கலந்து நா தழுதழுக்க டாக்டர் ரமேஸ் அருளாளனின் தோளில் வாஞ்சையோடு தட்டி மெதுவாகக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பாடுபட்டதற்குப் பலனில்லாது போய்விட்டது' நேர்ஸ்மார் கூறிக் கொண்டனர். அத்தனை டாக்டர்களும் முரளியின் தோளில் தட்டி ஆறுதல் கூறுகின்றனர். மேரியின் உடலைத் தடவிப் பார்த்து விட்டு, வெளியில் வந்து பிள்ளைகளோடு வாய்விட்டுக் கதறி அழுகிறார். 'மேரி.... நீ.... இல்லாத வீடு' நினைக்க நெஞ்சு வெடித்துச் சிதறும் நிலை.

கண்களைச் சற்றுத் திறந்து பார்க்கிறார். ஊர்வலம் விவேகானந்தாக் கல்லூரியைத் தாண்டி, உவர்மலைச் சந்தி 'செக்பொயின்ற்'றைக் கடக்கும் போது பொலீஸ் 'சலூற்' அடித்து மரியாதை செலுத்தியது. அவரது மனதுக்கு இதமாக இருந்தது. இனவாத அரசியல்வாதிகள் மட்டும் இல்லாதிருந்தால் இந்த நாடு பாரம்பரிய கலாசாரத்தைப் போற்றிப் பாது காக்கும். வாகன ஊர்வலம் விகாரை வீதி வழியாக நுழைந்து செல்கிறது. வாகனத்தின் இரு புறமும் ஆளுக்கொரு பக்கம் இரு புதல்வர்களும் கண்ணீருடம் நடக்கிறார்கள்.

நேற்றுவரை ஒருயிராய்க் கலந்திருந்த மேரி இன்று பந்தத்தை நீக்கிப் பறந்துவிட்டாள். பக்கத்தில் மணமகளாக வீற்றிருந்து குறும்பு காட்டிய மேரி சவப்பெட்டியுள் சயனித்து, விழிமூடி மௌனமாக வாகனத்தில் பயணிக்கிறாள். பெட்டியின் மேல் மலர் வளையங்கள், மெல்லத் திரும்பிப் பார்க்கிறார்.

'இது கனவாக இருக்கக்கூடாதா' ஏக்கப் பெருமூச்சு அனலாகப் பறக்கிறது. மேரியின் கடைசி இதயத்துடிப்பு நின்ற போது 'தன்னுயிர் பிரிவதைப் பார்த்ததில்லை நான் என்னுயிர் பிரிவதைப் பார்த்திருந் தேன்' என வாய் முணுமுணுக்கக் கற்பூரமாய் எரிந்தார். இப்பொழுது மேரியின் உடற்பேழையோடு பயணிக்கிறார்.

கண்களை மெல்ல மூட நெற்றித் திரையில் இணையம் விரிகிறது. வீடு நிறைந்த சனக்கூட்டம். மேரியின் பூதவுடல் இறுதிப் பயணத்துக்காகக் காத்திருக்கிறது. அருளாளனை அழைக்கிறார்கள். ஏதோ சொல்கிறார்கள் இயந்திரமாக இயங்குகிறார். திருமணத்தன்று இப்படித்தான் சொன்னவற் றைச் செய்தார். அவர் மேரியை தன் இரு கைகளாலும் வளைத்து அணைத்துச் சூடிய தாலியை அதே கைகளால் கழற்றுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'திருமண பந்தத்திலிருந்து மேரிக்கு விடுதலையா? அப்படியானால் நான்....' சிவனொளிபாதமலை வெடித்துச் சிதறிய இதய அதிர்ச்சி. மேரி குடியிருந்த அவரது இதயம் சுக்குநூறாகிறது. மேரி குடியிருந்த அந்த வீடு அருளாளனைப் பொறுத்தவரை பாழடைந்து விட்டது. அவருக்கு உலகம் இருண்டு விட்டது. இதயம் செத்துவிட்டது. அவரால் அந்த நிகழ்வை ஜீரணிக்க முடியவில்லை. நெற்றியில் அடித்துக் கொண்டு கண்களைத் திறக்கிறார். சவ ஊர்வலத்தைக் கண்ட சைவக் கோயில் களின் திருக்கதவுகள் பூட்டப்படுகின்றன. அந்த நேரத்திலும் அருளாளன் சமயங்களை, இந்த மனிதர்களை, ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்கிறார்.

செத்த பின் சிவலோகம் செல்வதற்காகத் தானே பக்தர்களாகிறார் கள் மனிதர்கள். உயிர் உள்ள போது பெயர் சொல்லி அழைக்கப்பட்ட மனிதன் உயிர் போனதும் பெயரினை நீக்கிப் பிணம் என்று பெயரிடுகிறார் கள்.பிணமாகப் போகும் மனிதனின் செயல்கள் வேடிக்கையானவை. சவம் சிவமாகும் போது கோயில் கதவுகள் ஏன் சாத்தப்பட வேண்டும். 'மேரி....... நீ.......... போகாத கோயில்கள் இல்லையே............ அன்னை மேரியை மாரித்தாய் என்பாயே. நீ அனுஷ்டிக்காத விரதங்கள் இல்லையே' கேள்விகளால் வேள்வி மனதினுள் நடந்து கொண்டிருந்தது. திருகோணமலையின் வட கரையோரக் கடல் மெல்லிய அலைகளால் சோகத்தை அள்ளி வீசிக் கொண்டிருந்தது. மெல்லிய காற்று சில்லென்று வந்து ஒட்டிக்கொண்டு போனது. சில்லென்று பூத்த சிறு நெருஞ்சிகள், தம் வாழ்வை முடித்து மறைந்து விட்டிருந்தன. வாருசிகளாய் நெருஞ்சி முட்கள் நிறைந்து பரந்து அந்த மயானத்தில் பருவமழைக்காய் தவம் கிடந்து, மயானத்துள் நுழைபவர்களது பாதங்களை ருசித்துக் கொண் டிருந்தன.

முள் நிறைந்த வாழ்க்கைப் பாதையில் தன் பயணத்தை மேரி முடித்துக் கொண்டாள் மேரியை இறுதியாகப் பெட்டியுள் பார்த்து அவளது பாதங்களைத் தொடுகிறார்.

'மேரி.... நிழலாய்த் தொடர்ந்தாய், கட்டவிழ்க்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அராஜக நேரத்திலும், காடு மேடுகளில் இந்த மக்களோடு சேர்ந்து ஓடினாய். இனி எந்த வன்செயல்களும், ஷெல்லடிகளும், அடக்குமுறைகளும் உன்னை ஒன்றும் செய்யாது. விழிமூடி உறங்கம்மா.....' ஆவி துடிக்க அழுதழுது பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றுகிறார். இரு கைகளாலும் மணலை அள்ளிக்குழியுள் போடும் போது அவர் நிலைகுலைந்து தடுமாறி 'ஆவி துடிக்குதடி' என அழுதார். உயிர் பிரிந்த உடலாக மயானத்தை விட்டு வெளியே வருகிறார். நெருஞ்சி முட்கள் கால்களில் தைக்கின்ற நோவைப் புரியாத மரத்த நிலை அவருக்கு.

மேரியைத் திருமணத்தின் போது மணமகளாக அருகிருத்தி வாடகைக் காரில் பயணித்து இன்று பிணமாக வேறு வாடகைக் காரில் பேழையுள் வைத்து பயணித்து, சிறுமணலால் மூடி தபுதாரனாக வெளியில் வந்து துணையிழந்த அன்றிலாக நடந்து போய்க் கொண்டிருக்கிறார்.

நன்றி - தினக்குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரது நூல்கள்

1. இன்பக் கனிகள் - பாடல்கள் - சிறுவர் இலக்கியம்
2. பாட்டுப்பாடுவோம் - பாடல்கள் - சிறுவர் இலக்கியம்
3. காகமும் தம்பியும் - பாடல்கள் - சிறுவர் இலக்கியம்
4. பாடி ஆடுவோம் - பாடல்கள் - சிறுவர் இலக்கியம்
5. கடலும் காவிரியும் - பாடல்கள் - சிறுவர் இலக்கியம்
6. சின்னசின்னப் பாட்டு - பாடல்கள் - சிறுவர் இலக்கியம்
7. மனதுக்கினிய பாட்டு - பாடல்கள் - சிறுவர் இலக்கியம்
8. பூஞ்சிட்டுக்கள் - கதைகள் - சிறுவர் இலக்கியம்
9. பளிங்குத்தீவு - நாவல் - சிறுவர் இலக்கியம்
10. காட்டில் கலவரம் - நாவல் - சிறுவர் இலக்கியம்
11. பயங்கொள்ளலாகாது- நாவல் - சிறுவர் இலக்கியம்
    பாப்பா
12. ஆடி மகிழ்வோம் -விளையாட்டு- சிறுவர் இலக்கியம்
13. அந்த ஆவணி ஆறு - சிறுகதை - இலக்கியம்
14. **வம்மிப்பூ** - சிறுகதை - இலக்கியம்

## வெளிவர இருப்பவை

15. மனதில் உறுதி வேண்டும் - அச்சில் -
16. ஆனந்தப் பாட்டு - அச்சில் -
17. தங்க மாம்பழம் - அச்சில் -
18. கேணிப்பித்தன் கவிதைகள் - அச்சில் -
19. அந்த ஒருநாள் - அச்சில் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியர்:-



இலக்கிய உலகிற்கு பல நூல்களை ஏற்கனவே அளித்து, இலக்கிய ஆர்வலர், சுவைஞர், கல்வியியலாளர்கள் மத்தியில் நன்கு அறிமுகமான இனிய நண்பர் கேணிப்பித்தன். ச. அருளானந்தம் அவர்கள். பழகுவதற்கு இனிய கல்வியியலாளரான இவரின் எழுத்துக்கள் வலிமை வாய்ந்தவை. சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திச் சிந்திக்க வைப்பவை. இவரின் எழுத்துக்களை அரை நூற்றாண்டுக்கு முன்னரே அறியும் வாய்புக்கிட்டியது, எனது முதல் அனுபவம் ஆகும்.

ஆலங்கேணி பாரதி படிப்பகத்தால் வெளியிடப்பட்ட 'கேணிச்சுடர்' கையெழுத்துப் பிரதியை திருகோணமலை பொதுநூலகத்தில் வாசித்து சிறுகதை, கவிதை பற்றி ஆலோசனை வழங்கிய சந்தர்ப்பங்களும் இன்னொரு அனுபவம் ஆகும்.

இந்த நிகழ்வுகளை இலக்கிய உலகில் ஒரு நிலையான இடத்தினைப் பெற்ற அரை நூற்றாண்டின் பின்னரும் மறக்காது நினைவுகூரும் பண்பு என்னால் மறக்கக் கூடாத மற்றுமொரு இனிய அனுபவமாகும். இத்தொகுப்பில் ஒன்பது சிறுகதைகள் உண்டு. ஒவ்வொன்றும் படிப்போரின் உணர்வுகளை வருடி விடுவன. படிக்கப்படவேண்டியன.

கல்வி உலகில் பல்வேறு தரங்களில் பதவிகளை வகித்து அந்த அனுபவ முகிழ்ப்பினால் உந்தப்பட்டு கல்வி, வாழக்கைப் பிரச்சினை, சமூக, சமகாலப் பிரச்சினைகளைப் பல்வேறு வடிவங்களில் நூலாக்கித் தருபவர். இவரது இப்பணி தொடரவும், இவரது ஆக்கங்களை தமிழ்கூறும் நல்லுலகம் வரவேற்று ஆதரவு நல்கவும் வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். -

தாபி. சுப்பிரமணியம்
- எழுத்தாளர்-
மூத்த கலைஞர் விருது,
ஆளுநர் விருது
பெற்ற முன்னாள் அதிபர்.

92, அஞ்சலக வீதி
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org